# மணிமேகலை சரிதை

பண்டித வ. நடராஜன் அவர்கள்
எழுதியது

ஆறும் வகுப்புக்குரியது

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

# மணிமேகலை சரிதை

**பண்டித வ. நடராஜன் அவர்கள்**

எழுதியது

**சான்றிதழ்**

இல. ஈபீபி/சீ/273

**மணிமேகலை சரிதை – வ. நடராஜன்**

1952ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 29ம் திகதி வெளிவந்துள்ள இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில், உதவி நன்கொடைபெறும் தன்மொழிப் பாடசாலைகளுக்கும், இருபாஷைப் பாடசாலைகளுக்கும், ஆங்கில பாடசாலைகளுக்குமான ஒழுங்குச் சட்டத்தின் 19(A)-ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதற்கமைய இப் புத்தகம் ஒரு நூல் நிலையத்திற்குரிய புத்தகமாக உபயோகித்தற்கு வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை,<br>மலாய் வீதி, கொழும்பு 2,<br>28-9-1965.

**ஜீவானந்த நாணயக்கார**<br>செயலாளர்<br>பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை

சுன்னாகம்:

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

பதிப்புரிமை] 1966 [விலை: [redacted] 5-75

முதற் பதிப்பு — 1960
இரண்டாம் பதிப்பு — 1966

சுன்னாகம்:
திருமகள் அழுத்தகம்

[உரிமை பதிப்பகத்தாருக்குரியது]

# பதிப்புரை

கதைகளை எல்லோரும் விரும்பு வார்கள். அதுவும் இளைஞர்கள் கதை கேட்பதில் மிக ஆர்வம் காட்டுவார்கள். இதனாற்போலும் பல சமய உண்மை கள் கதைகளாக நூல்களுட் கூறப் பட்டிருக்கின்றன.

சில கதைகளை ஒருமுறை கேட் டால் அவற்றை மறுமுறை கேட்கும் போது அவற்றில் அத்துணை ஆர்வம் இருக்காது. ஆயின், சில கதைகள் எத்தனை முறை கேட்பினும் அத்தனை முறையுஞ் சுவைதரும் இயல்பின. அத் தகைய சுவையமைந்தவை: பாரதம், இராமாயணம், ஐம்பெருங்காப்பியங் கள் என்பன.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன் றான 'மணிமேகலை'க் கதையை இலகு வான அழகிய நடையில், ஸ்கந்தவரோ தயக் கல்லூரி ஆசிரியர் பண்டித வ. நடராஜன் அவர்கள் எழுதியுள் ளார். கல்லூரி மாணவர்களின் தரத் துக்குத்தக பல நூல்களை எழுதிய அவர், இந் நூலை 6ஆம் வகுப்பு மாண வர்க்கென எழுதியுள்ளார்.

காளிதாசனது சாகுந்தலக் காவி யத்தைப் பின்பற்றி 7ஆம் வகுப்பு மாணவர்க்கென இந் நூலாசிரியரால் எழுதப்பட்ட 'சகுந்தலை சரிதை' எம்மால் முன்னர் வெளியிடப்பட்டது, அதனைப் போலவே மணிமேகலைக் காப்பியத் தைப் பின்பற்றி 'மணிமேகலை சரிதை' என்னும் இந்நூலும் எழுதப்பட்டது. இவ்வாறே தமிழில் வழங்கிவரும் புராண, இதிகாச, இலக்கிய, காப் பியச் செய்யுள் நூல்களின் கதைகளைச் சிறுவர்க்கேற்ற உரைநடையில், சந்தர்ப் பம் வாய்க்கும்போது, வெளியிடுவது எமது நோக்கமாகும். அந்நோக்கம் நிறைவேற இறைவன் அருள் கிடைப்ப தாக.

வணக்கம்

**வ. இ. தமிழ்நூற் பதிப்பகத்தார்**

# முன்னுரை

தமிழிற் பலவிதமான செய்யுள் இலக்கிய நூல்கள் இருக்கின்றன. அவை சங்கநூல்கள், பிற்கால நூல்கள் எனப் பகுக்கப்படும். சங்கநூல்களை அடுத்து, அதன் பின்னர்த் தோன்றிய சங்கம் மருவிய நூல்களுள், காப்பியங்கள் பிரதானமானவை.

காப்பியம், கதைபுனைந்து வரும் நூல். தன்னிகரில்லாத சிறந்த தலைவனையோ, தலைவியையோ முதன்மையான கதாபாத்திரமாகக் கொண்டு நாடு, நகர், மலை, ஆறு, சோலை, உதய அஸ்தமனம் என்பவற்றின் வருணனைகள், உபகதைகள் என்பன விரவ, செய்யுளாற் காப்பியம் செய்யப்படும்.

மணிமேகலை, தமிழ்மொழியில் உள்ள பழைய காப்பியங்கள் ஐந்தனுள் ஒன்று. 'சிலப்பதிகாரமென்னுங் காப்பியத்தின் கதாநாயகனான கோவலன் என்னும் வணிகனின் காதற் கணிகையாகிய மாதவியின் புத்திரி, மணிமேகலை. இவள் துறவு பூண்ட வரலாறு கூறும் இந் நூலை மதுரைச் சீத்தலைச்சாத்தனரென்னும் புலவர் பெருமான் அகவற்பாக்களால் முப்பது காதைகளாக இயற்றியுள்ளார். இதனை ஆதாரமாகக்கொண்டு ஆக்கப்பட்டது **'மணிமேகலை சரிதை'** என்னும் இந்நூல்.

இனிய வருணனைகளும் சுவைமிகுந்த உபகதைகளும் பொருந்திய மணிமேகலைக்காப்பியம் செய்யுளாதலால், மாணவர்களாற் படித்து இலகுவிற் பொருள் உணரல் முடியாது. ஆயின், இந்நூலிலுள்ள வருணனைகளும் உபகதைகளும் மாணவர்களுக்கு இலக்கிய அறிவுவளர்ச்சிக்குப் பெரும் பயன் தருவனவாதலால், மணிமேகலைக்

கதையையும் உபகதைகளையும் வருணனைகளையும் செய்யுள் நூலில் உள்ளவாறே சுவைகுன்றாது, இலகுவான சிறிய வசனங்களில் ஆறும் வகுப்பு மாணவருக்கு ஏற்ற உரைநடையில் எழுதியுள்ளேன். இந்நூல் ஆறும்வகுப்பு மணவருக்குமாத்திர மன்றி மணிமேகலைச் செய்யுள்நூலைப் படிப்பவருக்கும் ஓர் உரைநூல்போல உதவுதல்கூடும்.

மணிமேகலைச் செய்யுள்நூல், முப்பது கதைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஆயின், 'மணிமேகலை சரிதை' என்னும் இவ்வுரைநூலில் இருபத்திரண்டு பிரிவுகளாக, இக் கதை பகுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. செய்யுள்நூலிற் கூறப்படும் சமயதத்துவங்கள், புத்தசமயக் கோட்பாட்டு விளக்கங்கள் என்பன, இவ்வுரைநூலிலே தவிர்க்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் பொருட்டு எழுதப்பட்டமையின் இவை தவிர்க்கப்பட்டன. ஆயின், கதைச்சம்பவங்கள், உபகதைகள், வருணனைகள் என்பன அனைத்தும் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

இவ்வுரைநூலை ஆக்குதலில் எனக்கு உதவி புரிந்த ஆசிரியர் திரு. சு. வேலுப்பிள்ளை அவர்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்ட திருமகள் அழுத்தகத்தாருக்கும் நான் நன்றிகூறும் கடப்பாடுடையவனுவேன்.

என்னுல் இதற்குமுன்னர் எழுதப்பட்ட நூல்களுக்கு ஆதரவுதந்தும் புத்திமதிகள் கூறியும் உதவிய நண்பர்களும் அன்பர்களும் இந்நூற்கும் அவ்வாறே உதவுவார்களென எண்ணுகிறேன்.

வணக்கம்

ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னுகம்
20-6-60.

வ. நடராஜன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மணிமேகலை பிறப்பு ... ... | 1 |
| 2. | இந்திரவிழாவும் மாதவி துன்பமும் | 6 |
| 3. | மணிமேகலை உவவனம் அடைதல் ... | 11 |
| 4. | உதயகுமாரன் மணிமேகலையைக் காணல் ... | 15 |
| 5. | மணிமேகலா தெய்வம் தோன்றுதல் | 20 |
| 6. | சக்கரவாளக்கோட்டம் ... ... | 25 |
| 7. | மணிமேகலை தன் பழம்பிறப்புணர்தல் | 32 |
| 8. | மணிமேகலையும் மணிமேகலா தெய்வமும் ... | 39 |
| 9. | மணிமேகலை அமுதசுரபியைப் பெற்றமை ... | 42 |
| 10. | மாதவியுஞ் சுதமதியுந் தம் பழம்பிறப்பறிதல் ... | 47 |
| 11. | ஆபுத்திரன் வரலாறு ... ... | 50 |
| 12. | ஆபுத்திரன் அமுதசுரபியைக் கோமுகியிலிட்டமை ... | 55 |
| 13. | ஆதிரையின் வரலாறு ... ... | 61 |
| 14. | காயசண்டிகையின் வரலாறு ... | 66 |
| 15. | மணிமேகலையும் உதயகுமாரனும் ... | 69 |
| 16. | சிறைச்சாலை அறச்சாலையானது ... | 72 |
| 17. | உதயகுமாரன் இறப்பு ... ... | 76 |
| 18. | மணிமேகலையும் கந்திற்பாவையும் ... | 79 |

| | | பக்கம் |
|---|---|---|
| 19. | மணிமேகலை சிறைப்பட்டமை ... | 83 |
| 20. | மணிமேகலையும் இராசமாதேவியும்... | 89 |
| 21. | புண்ணியராசன் மணிபல்லவத்திலே தன் வரலாறு அறிதல் | 97 |
| 22. | மணிமேகலை வஞ்சிநகர் அடைந்தமை | 104 |
| | அரும்பத உரை ... ... | 111 |

# மணிமேகலை சரிதை

## 1. மணிமேகலை பிறப்பு

முற்காலத்திலே தென்னிந்தியாவை மூன்று தமிழ்மன்னர் ஆட்சி புரிந்து வந்தனர். அவர்கள் சேர, சோழ, பாண்டியர் எனப்படுவர். அவர்களுட் சோழ அரசர்களால் ஆளப்பட்ட சோழ வளநாடு, 'சோறுடையநாடு' என ஆன்றோராற் புகழப்பட்ட சிறப்பினை உடையது. அந்நாட்டினூடே காவிரி என்னும் நதி பாய்ந்து அந்நாட்டை வளப்படுத்திற்று. இதனாலேயே, சோழநாட்டின் தலைப்பட்டினமும் காவிரிப்பூம் பட்டினமென, அழைக்கப்படலாயிற்று. இந்நதி, காவிரிப்பூம் பட்டினத்தின் அயலிற் கடலொடு கலக்கிறது.

கடற்றுறையான காவிரிப்பூம்பட்டினத்தில், பல கப்பல்கள் தங்கி, ஏற்றுமதி இறக்குமதி செய்தமையால், அது பல நாடுகளின் மத்திய வாணிகத்தலமாக விளங்கிற்று. இதனால், அப்பட்டினத்தில் வணிகர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்களுள், அளவிலாச் செல்வம்

படைத்த மாசாத்துவான் என்னும் வணிகர் பெருமகனும் ஒருவன். அவன் புதல்வன் கோவலன்; அவன் இசை தேர்ந்த கலைஞன்; ஆடல் பாடல்களிலும் இசையிலும் மிகவும் ஈடுபாடுடையவன். இவன், சோழநாட்டின் தலை நகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த மற்றொரு வணிகனான மாநாய்கன் என்பவனின் புதல்வி கண்ணகியை, முறைப்படி திருமணஞ் செய்தான். கோவலனுங் கண்ணகியும் பரந் தகன்ற மாளிகையொன்றில், இனிதாக இல்லறம் நடாத்திவந்தனர். அந் நாளில், சோழநாட்டைக் கரிகாற்பெருவளத்தான் என்னும் பேரரசன் ஆட்சி புரிந்துவந்தான்.

சோழன் கரிகாலன் பல நாடுகளையும் தன் னடிப்படுத்தி நீதி தவறாது ஆட்சி புரிந்தவன். இளமையிலே மணிமுடி புனைந்து ஆட்சியேற்ற கரிகாலன், தன்னிடம் வழக்கொடு வந்த இரு பெருங்கிழவர், தன் இளமையைக் கண்டு வழக்கை உரையாது நிற்ப, தான் முதுமை வேடம் புனைந்துவந்து வழக்குக் கேட்டு, நீதியான தீர்ப்புக்கூறி அவர்கள் நாணும்வண்ணம் தன் பொய்முதுவேடம் நீக்கி இளமைகாட்டி நின்ற வன். அவன் ஆட்சிக்காலத்தில் சோழவளநாடு பலவகை வளமும் உடையதாய்ச் சிறப்புற்றிருந் தது. அவன் அவைக்களம் இன்பக்களியாட்டம் நிறைந்திருந்தது. அவனையும் அவன் அவையி லுள்ளவரையும் மகிழ்விக்க அவ்வவையில் நங்கை யர் பலர் ஆடிப்பாடினர்.

மாதவி என்பாள் இளமையும் அழகும் மிக்க ஆடல் நங்கை. அவள் ஒருநாள், கரிகாலன் அவைக்களத்தில் ஆடியும் பாடியும் தான் கற்ற கலைகளை அரங்கேற்றினாள். அவள் ஆடலிலும் பாடலிலும் மகிழ்ந்த அரசன், அவளுக்கு ஆயிரத்தெட்டுப் பொற்காசுகள் இணைத்த பொன்மாலையொன்றைப் பரிசாக அளித்தான்.

அரங்கேற்றத்தின்போது மாதவியின் ஆடல் பாடல்களைக் கண்டுங் கேட்டும் அவற்றில் ஈடுபாடு கொண்ட கோவலன், அவ்வாடல் நங்கையுடன் பழக விரும்பினான். அதனால், அவளுக்குப் பரிசாகக் கிடைத்த பொன்மாலையை உயர்ந்த விலை கொடுத்து வாங்கி, அதனை மீண்டும் அவளுக்கே பரிசாக அளித்தான். இவ்வாறு அவளோடு தொடர்புகொண்ட கோவலன், தன் மனைவியாகிய கண்ணகியை மறந்தான்; மாதவியை விட்டுநீங்க இயலாதவாறு அவளிடத்து அளவற்ற காதல் கொண்டான். மாதவியும் செல்வம் மிக்க வணிகனான கோவலனைத் தன் காதற்கணவனாக ஏற்றுக்கொண்டாள். இதனால், மனமகிழ்ந்த கோவலன், மாதவியின் பொருட்டுத் தன் செல்வம் அனைத்தையுஞ் செலவு செய்தான். இவ்வாறு அவனது பெருஞ்செல்வம் சிறிது சிறிதாகக் குறைந்தது.

நாளடைவில் மாதவி ஓர் அழகிய பெண் மகவை ஈன்றாள். இக் குழந்தைக்கு **மணிமேகலை** எனப் பெயர் இட்டார்கள். மணிமேகலை பிறந்து, சில ஆண்டுகளிற் கோவலன் தன் செல்வவளம்

முழுவதையும் மாதவியின் பொருட்டு இழந்தான். அதன் பின்னரும் அவன் தன் மனைவியாகிய கண்ணகியின் அணிமணிகளை அவளிடமிருந்து பெற்று, ஒவ்வொன்றாக விற்று, செலவிட்டு வந்தான். கண்ணகியும் மனமகிழ்ச்சியுடன் தன் நகைகளைக் கோவலனிடங் கொடுத்துக் கொண்டே வந்தாள்.

சோழநாட்டில் ஆண்டுதோறும் இந்திரவிழா நடைபெறுவது வழக்கம். அவ்விழா இருபத்தெட்டு நாள்கள் நிகழும். விழாவின் இறுதி நாள்களில் காவிரிநதி கடலொடு கலக்குமிடத்தில் மகளிரும் மைந்தரும் நீர்விளையாடி மகிழ்வர். இத்தகைய ஒரு விழாவிலே கோவலனும் மாதவியுங் கலந்துகொண்டனர். ஆங்கு அவ்விருவருக்கும் இசை காரணமாக ஏற்பட்ட ஊடலினாலும் விதிவசத்தினாலும், கோவலன் மாதவியைப் பிரிந்து தன் மனையை அடைந்தான்.

தன் கணவனாகிய கோவலனின் வருகையைக் கண்ட கண்ணகி, 'மாதவிக்குக் கொடுப்பதற்கு வேண்டிய பொருளின்மை காரணமாகவே அவன் வந்தனன்' என எண்ணி, அவனை அடைந்து தன் காற்சிலம்பைப்பெற்றுக்கொள்ளுமாறு அவனிடங் கூறினாள். அப்பொழுது கழிந்தனவற்றுக்காக மனம் வருந்திய கோவலன், அவளை நோக்கி, "நான் இச் சிலம்பை முதலாகக்கொண்டு வாணிகஞ்செய்து இழந்த செல்வமனைத்தையும் மீட்பேன்," எனக் கூறினான். இவ்வெண்ணப் படியே கோவலனும் கண்ணகியும் பொருளீட்டு

வதற்காக வழிநடந்து மதுரையை அடைந்தனர். கோவலன் கண்ணகியை மதுரையில் இடைச்சேரியிலே தங்கவைத்து, அவளது காற்சிலம்பு ஒன்றைப் பெற்று அதை விற்க மதுரைமாநகருக்குச் சென்றான். ஆங்கு, அவன் கள்வனெனப் பாண்டிய அரசனாற் கொல்லப்பட்டான். இதனை அறிந்த கண்ணகி, தன் கற்பின் மகத்துவத்தால் மதுரையை எரித்தாள். பின்னர் இறந்த தன் கணவனைத் தரிசித்து அவனுடன் துறக்கம் புகுந்தாள்.

இதனைக் கேள்வியுற்ற மாதவியும் மணிமேகலையும் மனம் வருந்திப் பெருந்துயருற்றனர்.

## 2. இந்திரவிழாவும் மாதவி துன்பமும்

சோழநாட்டில் நிகழும் இந்திரவிழாவை முதன் முதலாக ஆரம்பித்தவன், தூங்கெயி லெறிந்த தொடித்தோட்செம்பியன் என்னும் சோழனுவான். இவன், பொதியமலையிலே தவஞ் செய்துகொண்டிருந்த அகத்திய முனிவர் உரைப் படி இந்திரனை வணங்கி, இந்திரவிழா நிகழும் இருபத்தெட்டு நாளும் தன் நகரில் வந்து தங்குமாறு இந்திரனை வேண்டி, அவ்வாறே வரம் பெற்றுன். இவன் வானவெளியில் இயங்கிக் கொண்டிருந்த மாயக்கோட்டையாகிய தூங் கெயிலை அழித்துத் தூங்கெயிலெறிந்த தொடித் தோட் செம்பியன் என்னும் பெயர் பெற்றுன்.

இந்திரவிழாவினுற் காவிரிப்பூம்பட்டினம் வளமுற்றது; மற்றும் பலவிதத்தாலும் சோழ நாடு சிறப்படைந்திருந்தது.

காவிரிப்பூம்பட்டினத்திலே மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என, இரு பாக்கங்கள் இருந் தன. அவையிரண்டிற்கும் நடுவே இருப்பது நாளங்காடி என்னும் இடம். அவ்விடத்திலே நாளங்காடிப்பூதம் என்னும் ஒரு பூதம் இருந்தது. இது, இந்திரனுல் சோழ அரசர்களின் முன்னே ணுகிய முசுகுந்தனுக்குக் கொடுக்கப்பட்டது.

ஒருமுறை இந்திரனது நகரை அவனது வேண்டுகோட்படி முசுகுந்தன் காவல் செய் தான். அங்கே அவுணர்கள் கூடி அம் முசுகுந்த

னது கண்கள் இருளடையுமாறு அத்திரங்களை ஏவினர். அப்பொழுது ஒரு பூதந் தோன்றி, அவ்விருளை நீக்கவல்ல மந்திரத்தை முசுகுந்த னுக்கு உபதேசித்தது. அதனுதவியால் இருள் நீங்க, முசுகுந்தன் அவுணரைக் கொன்றான். பின்னர் இந்திரனால் அப்பூதம் முசுகுந்தனுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டது. அதுவே நாளங் காடிப்பூதம் எனப்படும். இந்திரவிழாவை அந் நகரார் செய்ய மறந்தால் முசுகுந்தச் சக்கர வர்த்திக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கிய நாளங் காடிப்பூதம், தன் வலிய பற்கள் வெளியே தோன்ற இடிபோன்ற முழக்கத்துடன் பல துன்பங்களைச் செய்யும். அன்றியும், காவிரிப்பூம் பட்டினத்திலே தீமை புரியும் பாவிகளைத் தன் கையிலேயுள்ள பாசத்தாற் கட்டி அடித்து உண்ணுஞ் சதுக்கப்பூதமும் அவ்விடத்தைவிட்டு நீங்கும். இதனால், சோழ அரசர்கள் அவ் விழாவை ஆண்டுதோறும் காவிரிப்பூம்பட்டினத் தில் நடாத்திவந்தனர்.

இந்திரவிழா ஆரம்பமாவதற்கு முன்பு, முர சறைவோன் முரசை யானையின் பிடரில் ஏற்றி, முதலில் ஊரை வாழ்த்துவான். பின்னர், ''மேகம் மாதந்தோறும் மும்மழை பொழிக, அரசன் செங்கோலனாகுக,'' என வாழ்த்தி, ஊரவர்களை விளித்து, ''இந்திரவிழாக் காலத்தில் தேவர்கள் இந்த நகருக்கு உருக்கரந்து மனித ருடன் மனிதராக எழுந்தருளுவர். ஆதலால், அகன்ற வீதிகளையும் மன்றங்களையும் துப்புரவு செய்து புதுமணல் பரப்புங்கள். செங்கரும்பும், குலைகள் தொங்கும் வாழைகளும், கமுகங் குலைகளும் நாட்டுங்கள். கொடிச்சீலைகளை எங்கும்

பறக்கவிடுங்கள். பாவைகளால் அலங்கரிக்கப் பட்ட குத்துவிளக்குகளையும் நிறைகுடங்களையும் வீடுகளின் முன் நிரை, நிரையாக வையுங்கள். தூண்களில் முத்துமாலைகளையும் மலர்மாலை களையுந் தொங்கவிடுங்கள். அணிமணி வாயி லுக்கான வளைவுகள் புனையுங்கள்.

''அந்தணர்களே, கோயில்களிற் பூசைகளை முறைப்படி நடாத்துங்கள். எல்லாக் கோயில்களி லும் வழிபாடுகளை நன்முறைப்படி செய்யுங்கள்.

''தரும உபதேசஞ்செய்யும் பெரியோர்களே, மன்றங்களிலும் மேடைகளிலுஞ் சென்று பிரசங் கம் புரியுங்கள்.

''சமயவாதிகளே, வித்தியாமண்டபத்தை அடைந்து வாதம்புரியுங்கள். இவ் விழாவுக்குரிய இருபத்தெட்டு நாள்களிலும் யாரிடத்தாவது பகையேனும் கோபமேனுங் கொள்ளல் வேண் டாம்'' எனக் கூறி, முரசறைவான். இவ்வாறு இந்திரவிழா ஆரம்பமாகும்.

கரிகாற் பெருவளத்தானின் பின், சோழ நாட்டை ஆட்சிபுரிந்த கிள்ளிவளவனின் ஆட்சிக் காலத்தில் இந்திரப்பெருவிழா மேற்கூறியவாறு காவிரிப்பூம் பட்டினத்தில் மிகச் சிறப்பாக நிகழ் வதற்கேற்ற முயற்சிகள் நடைபெற்றன.

இந்திரவிழாக்காலத்தில் நாடகக்கணிகையர் அரங்கில் ஆடுதல் மரபு. ஆயின், கோவலனின் இறப்பின் பின், கிள்ளிவளவன்காலத்து நிகழ்ந்த இவ் விந்திரவிழாவுக்கு நாடகக் கணிகையாகிய மாதவியோ அவள் புதல்வியாகியமணிமேகலையோ வரவில்லை. இதனல் ஊரார் பலர் அவர்கள்மேற்

பழிமொழி கூறினர். இதனையறிந்த மாதவியின் தாயாகிய சித்திராபதி, இதனை மாதவிக்கும் மணிமேகலைக்குந் தெரியச்செய்து அவர்களை அழைத்து வருமாறு மாதவியின் தோழியாகிய வசந்தமாலையை அவர்களிடம் அனுப்பினாள்.

சித்திராபதியின் கட்டளைப்படி வசந்தமாலை சென்று மாதவியும் மணிமேகலையும் இருந்த மலர் மண்டபத்தை அடைந்தாள். அங்கே தவத்தால் வாடிய உடலையுடைய மாதவி, தன் மகள் மணிமேகலையுடன் பூத்தொடுத்துக்கொண்டிருந்தாள். முன்னர் அழகும் நலமும் பொருந்திய நடிகையாயிருந்த மாதவியின் உடல்மாற்றத்தைக் கண்டு மனம் வருந்திய வசந்தமாலை, மாதவியை நோக்கி, ''நீ உன் மகளுடன் இந்திர விழாவுக்கு வராது, உன் கலைத்திறனுக் கொவ்வாத புத்ததுறவியாயிருப்பது பொருந்தாது. இதுபற்றி ஊரார் கூறும் பழிமொழிகள் பல;'' என்று கூறினாள்.

மாதவி அதனைக்கேட்டு மனம் வருந்தியவளாய், ''தோழீ, என் காதலன் முடிவுகேட்ட உடனேயே நான் இறந்திருத்தல்வேண்டும். இந்நாட்டிலுள்ள மாதர், கணவன் இறந்தவுடனே துயர் தாங்காது உயிரை விட்டுவிடுவர். அல்லது, கணவன் சிதையுடன் தம்முடலையும் தாமே விரும்பிச்சேர்த்து அழலுக்கிரையாக்குவர். இவ்விரண்டுஞ் செய்யாதவழி அடுத்துவரும் பிறப்புக்களிலே தம் கணவருடன் சேரும்பொருட்டு நோன்பியற்றுவர். ஆயின், என் காதலனின் வாழ்க்கைத் துணைவியாகிய கண்ணகி தன் கணவ

னின் நேர்மையற்ற கொலை கேட்ட அந்தட் சணமே சினங்கொண்டு மதுரையைத் தீக்கிரை யாக்கித் தானுந் தெய்வமாயினுள். அத் தெய்வக் கற்புடைய பத்தினியாகிய கண்ணகிக்குப் புதல்வி முறையான என்மகள் மணிமேகலை, ஒருநாளும் இழிந்த அவலவாழ்க்கை வாழாள். தன் வாழ் நாள் முழுவதையுந் தவவழியிலேயே செலவிடு வாள். ஆதலால், அவள் அங்கே வராள். அன்றியும், நான் இந் நகரிலுள்ள பௌத்த ஆசாரியரான அறவணவடிகளை வணங்கி, என் காதலனது கொலையால் ஏற்பட்ட பெருந் துன் பத்தைச் சொல்லி முறையிட்டேன். அதற்கு அவர், 'இவ்வுலகிற் பிறந்தாரனைவரும் பெரிய துன்பத்தையே அடைவார்கள். பிறவாதவர்களே பெரிய இன்பத்தை அடைவார்கள். பற்றினுற் பிறவியும், அதனுலே துன்பமும் ஏற்படும். பற்றற்ருேருக்குப் பிறவியும் இல்லை. அதனுல் ஏற்படக்கூடிய துன்பமும் இல்லையாகும்'; என்ற உண்மையை உபதேசித்தருளினுர். அவர் அறிவுரைகளைப் பின்பற்றி வாழ, நான் உறுதி கொண்டு விட்டதாக என் தாயாராகிய சித்திரா பதியிடமும் பழிமொழி கூறுவோரிடமுந் தெரிவி,'' என்று கூறினுள். அதுகேட்ட வசந்த மாலை பெறுதற்கரிய விலைமதிப்பு வாய்ந்த மாணிக்க மணியைக் கடலில் வீழவிட்டு மீளுபவர் போல, கடுந் துன்பமடைந்து சோர்வுற்ற மனத் துடன் சித்திராபதியிடம் மீண்டு சென்ருள்.

# 3. மணிமேகலை உவவனம் அடைதல்

தன் தாய்க்கும் வசந்தமாலைக்குமிடையே நிகழ்ந்த உரையாடல் முழுவதையும் பூமாலை தொடுத்துக்கொண்டிருந்த மணிமேகலை கேட்டுக் கொண்டிருந்தாள். தன் தந்தையான கோவலனுக்கும் உற்ற தாயான கண்ணகிக்கும் மதுரையில் நேர்ந்த துயர மரணவரலாற்றை எண்ணி, அவள் கண்ணீருகுத்தாள். அவள் அழுது சிந்துங் கண்ணீரால், அவள் தொடுத்த மாலை நனைந்து கொண்டிருந்தது. அதனால், அம்மாலை தூய்மையும் பொலிவும் அழிந்தது. தன்மகள் கண் கலங்கி அழுவதைக்கண்ட மாதவி அவளை ஆற்றி, தன் மெல்விரல்களால் அவள் கண்களைத் துடைத்தாள். பின் ஒருவாறு அவள் துயரை மாற்ற நினைந்து, ''கண்மணி, இம்மாலைகள் உன் கண்ணீரில் நனைந்தமையால், அவை தூய்மையை இழந்துவிட்டன. இப்போது அவை தெய்வத்துக்கு அணியப்படும் தகுதியற்றன ஆதலின், வேறு புதிய மாலை தொடுப்பதற்காக, நீ சோலைக்குச் சென்று புது மலர் பறித்து வா,'' என்று கூறினாள்.

மாதவியின் உயிர்த்தோழியான சுதமதி என்பவளும் மடத்துக்குக் கொடுப்பதற்காக அங்கே மலர் தொடுத்துக்கொண்டிருந்தாள். அவள் மாதவியை நோக்கி, ''மணிமேகலையைத் தனியே சோலைக்கு அனுப்பலாமா? அவளைப் புறத்தே காணின் ஆடவர் அவளை விட்டு நீங்குவாரா?

ஆகையால், இவளைத் தனியே பூப்பறித்தற்கு அனுப்பலாகாது. எனது வரலாற்றை நீயறியின் இதன் உண்மையை உணர்வாய். நான் சண்பை நகரத்திலுள்ள கௌசிகன் என்னும் அந்தணனுடைய மகள். ஒருநாள், தனியே ஆராய்வின்றிச் சோலையிற் சென்று பூப்பறித்தேன். அப்பொழுது இந்திரவிழாவைக் காண்பதற்கு ஆகாயவழியே வந்த வித்தியாதரன் ஒருவன், என்னைக் கண்டு எடுத்துக்கொண்டு மேலேசென்று சிலநாள் தன்வயமாக வைத்திருந்து, பின் இந் நகரத்தே விட்டு நீங்கினான். ஆகையால், இவள் இலவந்திகைச் சோலையாகிய அரசர்க்குரிய மலர்க் காவனம் சேர்ந்தால், சோழர்குடி இளவரசர்கள் இவளைக் காணல் நேரும். உய்யான வனத்துள்ள மலர்கள் தேவர்களாலன்றி மனிதர்களால் விரும்பப்படாதன; வண்டுகள் மொய்க்கப் படாதன. இவை வாடாத பூக்களைத் தாங்கி நிற்கும். இது, கையிலே பாசத்தையுடைய பூதங்களாற் காக்கப்படும். ஆதலால், இவ் வனத்தை அறிவுடையோர் அடையார். இவை யேயன்றிப் புத்தபிரானருளால் எப்போதும் மலர் நிறைந்துள்ள உவவனம் என்னும் ஒரு சோலையும் உண்டு. அச்சோலைக்குள் ஒரு பளிங்கு மண்டபம் இருக்கிறது. அம்மண்டபம் தன்னுள்ளே இருப்பவர்களது உருவை மட்டும் வெளிக்காட்டுமேயன்றி ஓசையை வெளிப்படுத் தாது. அம்மண்டபத்தினுள்ளே மாணிக்கசோதி பரந்த ஒரு பதும பீடம் இருக்கிறது. அப்பீடத் தில் அரும்புகளை இட்டால் அவை மலரும். பல வருடங்கள் சென்றாலும் அவை வாடா. ஏதே னும் ஒரு தெய்வத்தைத் தியானித்து மலர்களை

அப் பீடத்திலே சேர்த்தால் அம்மலர்கள் அப் பீடத்தை விட்டு நீங்கி அத் தெய்வத்தின் அடிகளைச் சேரும். இது மயன் என்னும் தெய்வத் தச்சனால் ஆக்கப்பட்டது. இவ்வனத்துக்கே மணிமேகலை பூப்பறித்தற்குச் செல்லுதற்குரியள். அவளுடன் நானுந் துணையாகச் செல்வேன்,'' என்று கூற மாதவியும் அதற்கிணங்கினாள்.

மணிமேகலையுஞ் சுதமதியுந் துறவிமடத்தை விட்டு வெளியேறி உவவனத்துக்குச் செல்லுந் தேர்வீதிவழியே நடந்தனர்.

இந்திரவிழா தொடங்கிவிட்டதனாற் பொது வீதிகளெங்கும் விழாக் காண்போர் நிறைந்திருந் தனர். அவ்வீதி வழியே கையிற் கோலுடனும் கமண்டலத்துடனும் வந்த ஒரு துறவியின் முன்னே ஒரு கட்குடியன் சென்று நின்று, ''ஐயா, வருக, வருக; உமது பாதங்களை வணங்கு கின்றேன். நான் சொல்வதைத் தயவுகூர்ந்து கேளும். உமது உடம்புக்குள்ளே இருக்கிற உயிர் சிறைக்கூடத்துள் அடைக்கப்பட்டிருக்கிற குற்ற வாளியைப்போல வருந்திக்கொண்டிருக்கிறது. தென்னம்பாளையிலிருந்து வடிக்கப்பட்ட இந் தக் கள்ளைச் சிறிது அருந்தும். அங்ஙனம் அருந்தி னால் வருந்திக்கொண்டிருக்கும் உமது உயிர் அவ்வருத்தமொழிந்து இன்பமடையும். நான் சொல்வது உண்மைதானா, என்பதைச் செயல் மூலம் செய்துபாரும்,'' என்று கூற அவன் பின்னே சனங்கள் சிலர் வியப்புடன் சென்றனர்.

வீதியின் மற்றொரு பக்கத்தே ஒரு பித்தன் நின்றான். அவன் கந்தலான துணிகளை அணிந்

திருந்தான். இலைகளையுந் தழைகளையுந் தன் உடலிலே கட்டியிருந்தான். உடல்முழுதும் சந்தனக்குழம்பு காணப்பட்டது. அலரி, எருக்கு முதலிய மலர்களை மாலையாகக் கட்டித் தன் தலையிற் சூட்டிக்கொண்டு அங்கு மிங்கும் ஓடியாடிக்கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் ஒரு சோம்பேறிக் கூட்டம் கூடிநின்று மகிழ்ந்து கொண்டிருந்தது.

இக்காட்சிகளையெல்லாம்பார்த்துக்கொண்டே தெருவில் மக்கள், திரள் திரளாக உலாவிக் கொண்டிருந்தனர். சிறுவர்கள் சிலர், சக்கரங்கள் அமைத்த விளையாட்டு யானைகள்மீது ஏறிச் சவாரிசெய்தனர்.

வீதிகளின் இருபுறங்களிலுமுள்ள மாளிகைகளிலே தேவர்களையும் மனிதர்களையும் பல வகைப்பட்ட விலங்குகளையும் உயிரோவியமாகத் தீட்டியிருந்தனர். இக் காட்சிகள் அனைத்தையும் பார்த்து நின்றவர்கள் அனைவரும், தெருவீதி வழியே சுதமதியுடன் வரும் மணிமேகலையின் எழிலையும் அவள் தவக்கோலத்தையுங் கண்டு அத்தகைய அழகுவாய்ந்த அவளை, அப்பருவத்திலே தவச்செயலில் ஈடுபடுத்திய மாதவியைக் கடிந்து கூறினர்.

மக்கட் கூட்டத்தைக் கண்டு யாதும் உரையாடலின்றி, சுதமதியும் மணிமேகலையும் அக் கூட்டத்தினரைக் கடந்து மெல்ல மெல்லச் சென்றர்.

## 4. உதயகுமாரன் மணிமேகலையைக் காணல்

இவ்வாறு மாதவியும் சுதமதியும் மலர் வனத்தை அடைந்தனர். அங்கே குருந்தும் கொன்றையும், அசோகமும் முல்லையும், நரந்தமும் நாகமும், பிடவமும் இலவமும் எங்கும் பரந்திருந்தன. அது, கலையில் வல்ல ஓவியன் ஒருவன் வரைந்த வண்ண ஓவியம்போலக் காட்சியளித்தது. சூரியனுடைய கிரணங்களினாலே துரத்தப்பட்ட இருளெல்லாம் போய், ஒதுங்கியிருந்த அம்மலர் வனத்திலே வண்டுகள் வேங்குழலின் ஓசை போல இசை செய்தன; சிறிய வண்டுகள் யாழைப்போல முரன்றன. சூரியனது கதிர்கள் செல்லமுடியாததும் குயில்கள் நுழைந்து செல்லும் இயல்பினையுடையதுமாகிய அவ்விளமரச் சோலைகளில், மயில்கள் ஆட மந்திகள் கண்டு மகிழ்ந்தன.

பளிங்குபோலத் தெளிந்த நீரினையுடைய பொய்கையிலே பசிய இலைகளையுடையனவாய்ப் பல தாமரைப்பூக்கள் பரந்து கிடந்தன. அவற்றுளெல்லாம் மிக்கதாய், தனித்து உயர்ந்து விளங்கிய மணம் மிகுந்த ஒரு தாமரை மலரில், அரச அன்னம் ஒன்று வீற்றிருந்தது. அப் பொய்கையின் கரையில், அரசன் முன் நின்று ஆடும் நாடக மகள் போல, அரச அன்னம் காணுமாறு ஓர் அழகிய மயில் ஆடிற்று. அவ்வாடலுக்கேற்பச் சம்பங்கோழிச் சேவலொன்று இனிய முழவு போல ஒலிசெய்தது. இவற்றுக்கியைய மரக்கிளை

யொன்றிலே கரிய குயில் ஒன்று பாடிக்கொண்டிருந்தது.

பல தேர்கள் விரைந்து தெருவில் ஓடுதலாலே தெருவினின்றும் எழுகின்ற துகள் படிய, ஒளி மழுங்கிக் காணப்படும் பெண்களின் முகம்போல, தாழையினது வெள்ளிய மகரந்தப் பொடி படிதலால் தாமரைமலர்கள் ஒளி இழந்து காணப்பட்டன.

மலர்ந்த தாமரைமலரிலே செங்கயல் மீன்கள் தாவ, அம் மீன்களைப் பிடிப்பதற்காகச் சிச்சிலிப் பறவைகள் பாய்ந்தன. ஆயின், அம் மீன்களைப் 'பிடிக்க முடியாமையால், இரையை இழந்து வருந்திய அப்பறவைகள் சோர்ந்து கிடந்தன. இத்தகைய அவ்வனத்தின் கண்கொள்ளாக் காட்சியழகை, மணிமேகலையும் சுதமதியும் நெடும்பொழுது கண்டு அம்மலர்வனத்தில் உலாவிக்கொண்டிருந்தனர்.

மணிமேகலையும் சுதமதியும் இவ்வாறு மலர் வனத்தில் இருந்தபோது, கடலின் நடுவே செல்லும் கப்பல், காற்றினால் அலையுண்ண அதன் நடுவே ஓங்கி நின்ற பாய்மரம் அடியோடு முறிந்து பாயிலே கட்டின கயிறு அறுபட, அக் கப்பலைச் செலுத்திச் சென்ற மாலுமி நடுநடுங்குமாறு கப்பலின் நடு இடம் பாழாகிப் பாய் பீறுண்ண, அலைகள் மிகுந்த கடலிலே செல்லுந்திசை யறியாமல் எவ்விடத்தும் ஓடி அலைந்து திரிகின்ற கப்பலைப்போல, காலவேகம் என்னும் அரசனின் பட்டத்துயானை மதமிகுந்து கட்டுத்தறியை முறித்துக்கொண்டு அரசவீதி தேர்வீதி முதலிய

வீதிகளின் வழியே ஓடிற்று. அதைக்கண்டு வெருண்ட மக்கள், தங்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக நாலாதிசைகளிலும் பரந்து ஓடினார்கள். யானைப்பாகரும் முரசறைவோரும் அதன் பின்னே ஓடி, தம் கூக்குரலினாலும் முரசொலியாலும் ஓடும் மக்களை எச்சரித்துக்கொண்டே சென்றனர்.

சோழ அரசன் கிள்ளிவளவன் மகனாகிய உதயகுமாரன் இச்செய்தியைக் கேள்வியுற்று, ஒரு குதிரைமீதேறி யானையைத் துரத்திப் பிடித்து அதன் வெறியை அடக்கி அதனைப் பாகர்வசம் ஒப்புவித்துத் தன் அரண்மனையை நோக்கி வந்துகொண்டிருந்தான். வரும் வழியில் நாடகக் கணிகையர் வீதியில், ஒரு வணிகனை மாடத்திலுள்ள பலகணிக்கூடாகக் கண்டான். அவ்வணிகன் யாழின் கோட்டைத் தழுவிக்கொண்டு ஓவியப்பாவைபோல மயங்கிக் கடுந்துயருற்றுக் காணப்பட்டான். இவ்வாறிருந்த எட்டி குமரன் என்னும் வணிகனை உதயகுமாரன் நோக்கி, "உன் துயரம் யாது, உன் மனம் இவ்வாறு சோர்வடைந்திருப்பதேன் ?" என, வினவினான்.

எட்டிகுமாரன் உதயகுமாரனைவணங்கி, "இளவரசே, இப்பொழுதுதான் செப்பினுள்ளே வைக்கப்பட்ட நறுமலரைப்போல, தன் இயற்கை அழகைத் தவவேடம் மறைக்க, மாதவியின் புதல்வியாகிய மணிமேகலை இவ்வழியாற் செல்லக் கண்டேன். அவளைக் கண்டவுடன் அவள் தந்தையாகிய கோவலனுக்கு மதுரையில் நிகழ்ந்த கொடுந் துன்பம் நினைவிற்கு வந்தது. அது என் மனத்திண்மையை மாற்றியமையால் இந்த

யாழின் பகைநரம்பிற் கையைச் செலுத்தியது. இதுவே என் மனத்துயரின் காரணம்'' என்று கூறினன்.

பலநாளாக மணிமேகலையை விரும்பிக்கொண் டிருந்த உதயகுமாரன், அவள் மலர்ச்சோலை சென்றுளென்பதை எட்டிகுமாரனுல் அறிந்து மகிழ்ந்து, ''மலர்ச்சோலைக்குப் போய் மணிமேகலையை என் தேரிலேற்றிக்கொண்டு வரு வேன்'' என்று கூறி, ஓடுகின்ற முகிலைக் கிழித்துச் செல்லும் மதியம்போல, தேரிலேறி மலர் வனம் நோக்கிச் சென்று அதன் மதில் வாயிலை அடைந் தான். உதயகுமாரன் மலர்வனத்தின் வாயிலிலே, தேரை விட்டிறங்கித் தன்னுடன் வந்தாரை அவ் விடத்தே நிறுத்தி, தான்மட்டும் தனியே மலர் வனத்துட் சென்றான்.

இளவரசன் தேர் மலர்வனத்தை அணுகிய சமயம் அத்தேரின் மணியோசையைக் கேட்ட மணிமேகலை, ''இளவரசன் உதயகுமாரன் என் மேல் மிக்க காதலுடையான் என்று சித்திரா பதியும் வசந்தமாலையும் என் அன்னையிடங் கூறி யதைக் கேட்டிருக்கிறேன். நான் கேட்ட இத் தேரொலி அவனுடைய தேரொலிபோலும். ஆகவே, இப்போது நான் என்செய்வது'' என்று கூறிக் கலவரமடைந்தாள். இதனைக்கேட்டுச் சுதமதியும் மிக்க கலவரமடைந்து, அருகேயுள்ள பளிங்கு மண்டபத்துள் நுழைந்து அதன் நடுக் கூடத்தில் மறைந்திருக்கும்படி மணிமேகலைக்குக் கூறி, அவளை உள்ளே இருக்கச்செய்து, தாழ்க் கோலிட்டு, தான் சற்றுத் தொலைவில் நின்றாள்.

சிறிது நேரத்துக்குள் இளவரசன் சுதமதியை அணுகி' "அம்மணி, நீ மணிமேகலையுடன் வந்தாயென்று அறிவேன். நீ தனியே நிற்பதேன்? அவள் பௌத்த சங்கத்தார் இருப்பிடத்தை நீங்கி இவ்விடம் வந்ததற்குக் காரணம் யாது? அவள் காதல் என்னும் உணர்ச்சியை அறியும் பருவத்தை அடைந்துவிட்டாளா?'' என்று வினவினான்.

உதயகுமாரன் கூறியவற்றைக் கேட்டு நின்ற சுதமதி மனம் வருந்தி, ''இளவரசே, இளமைப் பருவத்திலேயே முதுமைவேடம் பூண்டு, வழக்கைக் கேட்டு நீதி உரைத்த கரிகாற்பெருவளத்தானுடைய வழித்தோன்றலே, பெண்ணாகிய நான் உமக்கு என்ன கூறமுடியும். ஆயினும், வீர இளவரசே, உம்மிடம் பேசத்துணிகின்றேன். நமது உடல், முற்பிறப்பில் நாம் செய்த வினையின் பயனாய் நமக்குக் கிடைத்தது. இப்பிறப்பில் நாம் செய்யும் வினைகளுக்குக் காரணமாய் அமைவதும் இவ்வுடலே. நாம் அணியும் ஆடை, ஆபரணங்களை நீக்கிவிடின், அது ஊன்பொதிந்த பண்டமாகும். இது காலத்தால் அழியும் தன்மையுடையது. நோயின் கொள்கலம்; சினத்தின் புகலிடம்; தீமைகளின் இருப்பிடம்; அவாக்கள் தங்குமிடம்; ஆகையால், உடலை ஒரு பொருளாக மதியாது இதனை வெறுப்பீராக'' என்றாள். இவள் இங்ஙனங் கூறிய வார்த்தைகள் உதயகுமாரனது காதை அடையுமுன் பளிக்கறையினுள்ளே இருந்த மணிமேகலையின் உருவம் உதயகுமாரனது கண்ணுக்குத் தோன்றியது.

# 5. மணிமேகலாதெய்வம் தோன்றுதல்

தன் கண்ணுக்குத் தோன்றிய உருவம் மணிமேகலையின் வடிவமேயென்பதை உதயகுமாரன் நிச்சயித்து, அப்பளிக்கறையினுட் செல்வதற்கு நினைத்தான். ஆனால், அப் பளிக்குமண்டபத்தின் வாயில் காணப்படாமையால், அவ்வாயிலை அறிந்து கொள்வதற்காக அப்பளிக்கறையின் சுவரைக் கையினாலே தடவிக்கொண்டு அதனைச் சுற்றி வந்தான். ஆயினும், அதன் வாயிலை அறிந்து அதனுள்ளே புக அவனால் முடியவில்லை. பின்னர், சுதமதியை நோக்கி, ''மணிமேகலை எத்தகையவள் ?'' என்று கேட்க அவள், ''மணிமேகலை தவ ஒழுக்கமுடையவள் ; குற்றஞ் செய்தவர்களைச் சபிக்கும் ஆற்றல் பெற்றவள் ; ஆதலின், நீ அவளை விரும்புதல் தக்கதன்று'' என விடை கூறினாள்.

''அவள் எத்தன்மையளாயினுமாகுக ; எப்படியும் நான் அவளை அடைவேன். அது நிற்க, நீ யார், மணிமேகலையுடன் வந்த காரணம் யாது? சொல்'' என, உதயகுமாரன் சுதமதியைக் கேட்க, அவள் கூறுகிறாள் ;-

''இளவரசே, நான் சண்பை நகரத்திலுள்ள கௌசிகனென்னும் அந்தணனின் மகள். என் இளமைப்பருவத்தில் என் அன்னை இறந்துவிட, என் தந்தை என்னைப் பாதுகாத்து வந்தார். ஒரு நாள், ஒரு சோலையில் நான் தனியே நின்று பூக்

கொய்யும்பொழுது ஆகாயவழியே சென்ற வித்தியாதரன் ஒருவன், என்னை எடுத்துச் சென்று தன் வயமாக்கி இந்நகரில் விட்டுச் சென்றான். அதனையறியாத என் தந்தையார் என்னைக் காணாமையால் என்னைத் தேடி அலைந்து கன்னியாகுமரிக்கு நீராடச் செல்பவர்களுடன் கூடிச் சென்றார். அப்போது, இடையில் இந்நகரத்தில் என்னைக் கண்டார். கண்ட அவர், என் வரலாற்றை அறிந்து என் ஒழுக்கக்கேடு காரணமாக, நான் அந்தணர்களுடன் வாழத் தகுதியற்றுவிட்டமையால், என் மேற்கொண்ட அன்புகாரணமாகத் தானும் அவ்வந்தணர்களை விட்டுப் பிரிந்து மனைதோறும் பிச்சை எடுத்து என்னையும் உண்பித்துத் தானும் உண்டு பொழுதைக் கழிப்பாராயினர், அங்ஙனமிருக்கையில் பிச்சை எடுப்பதற்கு ஒருநாட் செல்லும்போது, இளங்கன்றையுடைய ஒரு பசு முட்டி, என் தந்தையின் வயிற்றைக் கிழித்துவிட்டது. இதனால் வருத்தமுற்ற நாம், 'கதியற்ற எம்மைப் பாதுகாப்பாருண்டா? என்று அலறி முறையிட்டோம். அப்போது மனைதோறும் பிச்சைஎடுக்கும் பாத்திரத்தைக் கையில் ஏந்தியவரும் முழுமதி போன்ற முகத்தினையும் பொன்னிறமுள்ள சீவர ஆடையினையும் உடையவருமான சங்கதருமன் என்னும் முனிவன், விரைந்து வந்து எம் நிலைமையை அறிந்து பௌத்தசங்கத்தார் இருப்பிடம் சேர்ப்பித்து என் தந்தையின் துயரையும் நீக்கினார். அதுவுமன்றி அம்முனிவன் எனக்கறிவுறுத்தியபடி, தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த அருள் வடிவமான புத்தன் பாதங்களையன்றி மற்

றெதனையும் என் மனம் விரும்பாமையின் நான் பௌத்த சங்கத்தைச் சேர்ந்து, ஆண்டு இருந்த மாதவியுடன் உறைவேன் ஆயினேன். அதனால் மணிமேகலையுடன் வந்தேன்,'' என்று கூறினாள்.

''இன்னும் அவளை அடையும் வழி இருக்கிறது; அதை நான் அறிவேன், சித்திராபதி மூலம் அவளை அடைதல் முடியும்'' என்று கூறிக்கொண்டே, உதயகுமாரன் அவ்விடமிருந்து சென்றான்.

உதயகுமாரன் போனதும் மணிமேகலை, மண்டபத்திலிருந்து வெளியே வந்தாள். வந்து, கற்பின் தன்மையையோ, குடிமதிப்பையோ அறியாது வாழும் மற்றைய பொதுமகளிரைப் போலவே அவர் என்னையும் எளிமையாக்கக் கருதுவதாகத் தோன்றுகின்றது. அங்ஙனமாயினும், என் மனம் முன்பின் தொடர்பற்று அவர்பாற் செல்கிறது. இதுதான் காதலின் தன்மையோ?'' என்று சுதமதியைக் கேட்டாள்.

அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் சமயம் மணிமேகலை என்ற தெய்வம் அந்நகரில் வாழும் ஒரு பெண்ணைப்போல வடிவங்கொண்டு அம்மலர்வனத்திடையேயுள்ள புத்தபீடிகையைக் கண்டு, புத்தபிரானை வணங்கியபடியே அதனை வலம் வந்துகொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில், சூரியன் மேற்குத் திசையிலே மறைந்துகொண்டிருந்தது; பூரண சந்திரன் கிழக்கே உதயமாயிற்று. இவ்வாறு மறையும் சூரியனும், உதயசந்திரனும் பூமடந்தை

யின் காதுகளி லணியப்பட்ட பொன் தோடு போலவும், வெள்ளி வெண் தோடு போலவும் பொலிந்து காணப்பட்டன.

அம்மாலைநேரத்தில் அன்னச்சேவல்கள் தாமரைப்பூக்களிலே தாவி விளையாடின. அன்னப் பேடொன்று விளையாட்டு மிகுதியாற் களைத்து, தான் விளையாடிய தாமரைப்பூவின்மீது படுத்துக் கொண்டது. சூரியன் மறைந்ததால் தாமரைப்பூ குவிந்து சுருங்க, அன்னப்பேடு அதனுள் மறையத் தொடங்கிற்று. இதனைப்பொருத ஆண் அன்னம் அத்தாமரைப்பூ சிதைந்தழியுமாறு அதனைக் கிழித்து தன் பேட்டை மீட்டுக்கொண்டு உயர்ந்த தென்னையினது கொழுவிய மடலின்மீது ஏறிற்று.

அன்றிற்பேடு தன் மெல்லிய குரலிற் சேவலை அழைத்து 'ஞாயிறு சென்று மறையும் அந்திப் பொழுதாயிற்று,' என்பதைத் தன் சேவலுக் கறிவித்தது. பவளம்போலச் சிவந்த கால்களை யுடைய அன்னப்பறவைகள் கூட்டமாக வதியும் பரந்த இடத்திலேயுள்ள குவளைப்பூக்களை உண்ட பசுக்களது மடியிலிருந்து பொழிகின்ற இனிய பால் நிலத்தினின்றும் எழுகின்ற புழுதியை அடக்க, அவை தம் கன்றுகளை நினைந்தவண்ணம் குரல் எழுப்பிக்கொண்டு மன்றுகளை நோக்கிச் சென்றன.

அந்தணர் செந்தீ வளர்த்தனர்; பசிய வளை யல்களை அணிந்த மகளிர் பலர் மாலைக்கால மணி விளக்கேற்றினர். யாழை வாசிக்கும் பாணர், யாழின் நரம்பை வருடி இனிய மருதப்பண்ணை எழுப்பினர். கோவலர் முல்லைப்பண்ணை வேய்ங்

குழலிடத்து இசைத்தனர். இவ்வாறான நிகழ்ச்சிகளோடு, போர்க்களத்திலே தன் கணவனை இழந்து தன் உறவினரிடஞ் செல்லும் ஒரு மங்கையைப் போல, சூரியனாகிய கணவனை இழந்தமையாலேற்பட்ட அளவில்லாத் துன்பத்துடனே அந்திப் பொழுதென்னும் மடந்தை அங்கே தோன்றினாள்.

சிறிது நேரத்தால் இருளாயிற்று. பூரண சந்திரன் ஒளிபரப்பிக்கொண்டு மலர்வனம் எங்கும் வெள்ளிமுலாம் பூசினான். அந்நிலவெளியிலே மணிமேகலா தெய்வம், சுதமதியையும் மணிமேகலையையுங் கண்டு "இரவு வந்தடைந்த பின்னும் இங்கு தங்கிநிற்கிறீர்களே; நீங்கள் இங்கு நிற்பதற்குக் காரணம் யாது? என்ன துன்பம் அடைந்தீர்கள்?" என்று கேட்டது. அப்பொழுது உதயகுமாரன் அங்கு தோன்றியதையும் அவன் கூறியவற்றையுஞ் சுதமதி விளக்கமாகக் கூறினாள்.

மணிமேகலா தெய்வம் இவற்றைக் கேட்டு, "இளவரசன் மணிமேகலையிடம் ஆழ்ந்த காதல் கொண்டுள்ளான். இது புத்த அடியார்க்குரிய புனிதமான இடமாதலின் அவன் தன் காதலையடக்கி இவ்விடமிருந்து மீண்டான். நீங்கள் இங்கிருந்து செல்லும்போது அவன் வீதியில் உங்களைக் காணாமலிருத்தல் முடியாது. ஆகையால், இம் மலர்வனத்தின் மேற்கு மதிலையடுத்துள்ள வாசல்வழியாக நீங்கள் வெளியே சென்றால், சக்கரவாளக் கோட்டத்தை அடைவீர்கள். அது சுடுகாட்டுக் கோட்டமெனவும் அழைக்கப்படும். என, அதன் இயல்பு கூறத் தொடங்கிற்று.

# 6. சக்கரவாளக்கோட்டம்

சக்கரவாளக்கோட்டம் பிணங்கள் சுடும் விற கடுக்கினையுடைய சுடுகாடு. அது பூம்புகார் நகரம் தோன்றியகாலத்திலேயே தோன்றியது. இதனைச் சுற்றி ஒரு பெரிய மதில் உண்டு. அம்மதிலிலே திசைக்கொன்ருக நான்கு பெரிய வாயில்கள் உள. அவ்வாயில்களுள் ஒன்று, தேவர்கள் நுழைந்து செல்வதற்குரிய செழுங்கொடிகள் கட்டப்பட்ட வாயில். மற்றொன்று, நெல் கரும்பு பொய்கை பொழில் என்பன அழகுற வரையப்பட்ட நலம் பொருந்தியது. வெண்மைநிறம் பொருந்திய சுதையாற் பூசப்பட்ட மாடத்தில் வடிவங்கள் எதுவும் எழுதப்பெருத வெளியான இடத்தை யுடையது மூன்ருவது வாயில். நான்காவது வாயில், மடிக்கப்பட்ட சிவந்த வாயையும் சினம் பொருந்திய கண்களையும் பிறரைக் கட்டத்தக்க பாசக்கயிற்றையும் கையிற்பிடித்த சூலப்படை யையும் உடைய நீண்ட தோற்றந் தாங்கிய பூத வடிவங்களைக் காவலாக உடையது. இவ்வாருன காவலையுடைய பேய்கள் நடமாடுகின்ற அரிய இடத்தினை உடையது சக்கரவாளக்கோட்டம்.

இக் கோட்டத்தில் ஆங்காங்கே நீண்ட கிளை களையுடைய பெரிய மரங்கள் தென்படும். அம் மரங்களின் கிளைகளிலே தம்முயிரைப் பலியாகக் கொடுத்தோரின் தலைகள் பல, தொங்கிக்கொண்

டிருக்கும். பலிகொடுப்போர் தம் சிகையை மரத்தில் முடிந்துவிட்டுத் தலையை அரிவாராகலின் மரங்களிலே தலைகள் அவ்வாறு காணப்படும். இவற்றின் நடுவே ஓங்கி உயர்ந்த பலிபீடத்தையும் முன்றிலையுமுடைய காளிதேவியின் கோயில் தோன்றும். தவத்தால் மேம்பட்டோரும், அரசரும், கணவனுடன் ஒருங்கே உயிர்விட்ட கற்புடைய மகளிருமாகிய இறந்தோரின் உடலைப் புதைத்த இடங்களில் அவ்வவர் இயல்புக்கேற்றனவாகச் செங்கற்களால் செய்யப்பட்ட கோட்டங்கள் அங்கும் இங்குமாகக் காணப்படும்.

மயான தெய்வங்களுக்குப் பலியிடுதற்குரிய தூண்கள் ஓர்புறம்; கையிலே, கோலும் உண்ணும் கலமுங் கொண்ட ஈமங்காப்போர், உண்டு துயிலும் உறைவிடங்களாகிய குடிசைகள் மற்றோர் புறம்; இவற்றுடன் ஒழுங்காகச் செல்லும் புகைக் கொடிகளாகிய தோரணங்களும் ஈமப்பந்தர் களும் எவ்விடத்தும் பரந்திருக்கும்.

உயிருடன் வாழ்வோர், தாமும் இவ்வாறே இறந்து பிணமாதல் வேண்டும் என்பதை அவர் உள்ளம் நடுங்குமாறு தெரிவிக்கும் நெய்தற்பறைகளின் ஒலி ஒருபக்கம்; துறவியர் இறந்தமையால் ஏற்பட்ட துதிமுழக்கம் மற்றோர்பக்கம்; இல்லறத்தோர் இறந்தமையால் ஏற்பட்ட அழுகையொலி ஒருபக்கம்; பிணங்களைச் சுடுவோரது ஒலிகளும் அவற்றைத் தோண்டப்பட்ட குழிகளிலே இடுவோரது ஒலிகளும் தாழியாலே கவிப்போரது ஒலிகளும் சேர்ந்த ஒலி இன்னோர்பக்கம்; இவ்வா

றுன ஒலிகளுடன் நீண்ட முகத்தையுடைய நரியின் ஊளை ஒலியும், இறப்போரை அழைக்கும் பேராந்தைகளின் குரலும், புலாலுணவைக் கொள்கின்ற கழுகுகளின் அலறலும், உணவாகத் தம் மூளையையே கடித்துண்ட ஆண்டலைப் பறவையின் பெருமுழக்கமும் பெரிய கடலின் ஓசைபோல எப்பொழுதும் நீங்காமல் ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

அங்கே, தான்றியும் ஒடுவையும் உழிஞ்சிலும் மற்றைய மரங்களைக்காட்டிலும் உயர்ந்து தோன்ற, கான்றி, சூரை, கள்ளி முதலியன அவற்றினடியிற் செறிந்து காணப்படும். வருந்துகின்ற பசியையுடைய கொடிய பேய்கள், முகிலைத் தீண்டவல்ல நீண்ட கிளைகளையுடைய வாகை மரங்கள் செறிந்துள்ள மன்றங்களிலே கூட்டமாகத் திரண்டிருக்கும். வெள்ளிய நிணத்தைத் தசையுடன் உண்டு, பறவைகள் மகிழ்ச்சிகொண்டு ஆங்குள்ள விளாமரங்களிலே தங்கியிருக்கும்.

மயானத்திலிருந்து நோன்பியற்றும் காபாலிகர், தளராத ஊக்கத்துடன் வன்னி மரங்கள் அதிகமாகக் காணப்படும் மன்றங்களிலே தீ பெருக்கிச் சோறடுவர். விரதங்களைக் காக்கும் உடம்பினையுடையோர் உடைந்த தலைகளைத் தொகுத்து பெரிய மாலைகளாக்கி இலந்தைமரங்கள் கூடிய மன்றங்களிலே தொங்கவிடுவர். பிணந்தின்னும் மக்கள், வெளியான இடங்களிலிருந்து நிணங்களைப் பெரிய பானைகளிலே விருந்தாக்கிப் பலர்க்கும் கொடுப்பர்.

நெருப்பு இடப்பட்ட பானைகளும், பண்டங்கள் இடப்பட்ட உறியும், அறுந்த மாலைகளும், உடைந்த குடங்கள் முட்டிகளும், சிதறுண்ட நெல்லுப்பொரியும் அரிசி முதலியனவும் பாழ் நிலமெங்கும் பரந்து கிடக்கும்.

தவநெறியிற் செல்லும் துறவி இவன்; இவன் மிகப் பெரிய செல்வமுடையவன் ; ஈன்றணிமையையுடைய இளமகள் இவள் ; இவன் இளையான் ; இவர் அறிவுமிக்க முதியவர், எனப் பேதம் பாராட்டாது அனைவரையும் கொடுந்தொழிலையுடைய காலன் கொன்று குவிப்ப, அவ்வுடல்களைத் தீயைக் கக்கும் வாயினையுடைய சுடலை தின்னக்கண்டும், கள்ளையுண்டு அறங்களை விரும்பாது வாழுகின்ற அறிவற்ற மாந்தரும் இருக்கின்றனரே !

இச் சக்கரவாளக் கோட்டத்தினிடையே ஒரு முறை 'சார்ங்கலன்' என்னும் சிறுவன் தனியே வழிச்சென்றான். அப்பொழுது, ஒரு பெண்பேய் ஓர் பெண்பிணத்தின் கரிய தலையைப் பறித்துக் கையிலே ஏந்திக்கொண்டு மிக்க மகிழ்ச்சியுடன் எழுந்து, கவைத்த அடிகளைப் பெயர்த்துத் தணியாத களிப்புடன் ஆடுகின்ற கூத்தினை, அச்சிறுவன் கண்டான். கண்டு மிகவும் பயந்து, அவ்விடத்தினின்றும் ஓடி, "என் அன்னையே இதனைப் பார் ! இம் முது மயானத்திலுள்ள கொடிய முதுபேய்க்கு என் உயிரைக் கொடுத்தேன் ;'' என்று கூறித் தன் தாயின் முன்னே வீழ்ந்து உயிர் விட்டான்.

கண்ணிழந்த தன் கணவனுடன் இருந்த கோதமை என்னும் பார்ப்பனப் பெண், "எவரு மற்ற தமியனுகிய என் புத்திரனது உயிரை யுண் டது அணங்கோ? பேயோ? நீர்த்துறைகளிலும் மன்றங்களிலும் முது மரங்களிலும் தங்கியிருந்து உயிர்களைக் காத்துவரும் சம்பாபதித் தெய்வமே! என் மகனுயிரைக் காவாமலிருந்தாயே, இது தகுமா?" என்று கூறி, இறந்த தன் மகனது உடலாகிய உயிரற்ற யாக்கையை மார்புடன் தழுவி எடுத்துக்கொண்டு சக்கரவாளக்கோட்ட மதில் வாயிலில் நின்று புலம்பலானுள்.

இருள் மிக்க இடையாமத்தில், மதில் வாயிலி லிருந்து எழும் துன்பமிக்க அழுகையொலியைக் கேட்டு, சம்பாபதித் தெய்வம் ஆங்குத்தோன்றி, "உனக்கு நேர்ந்த துன்பம் யாது? அதனை எனக்குக் கூறுவாயாக" என, வினவிற்று. அப் பொழுது பார்ப்பனிக்கும் சம்பாபதி தெய்வத்துக் கும் பின்வரும் உரையாடல் நிகழலாயிற்று.

**பார்ப்பனி:** ஆருமற்றவளாகிய என்னுடைய அறியாப் பாலகன் இவ் வீமப்புறங்காட்டின் வழியே வந்தான். அணங்கோ, அன்றிப் பேயோ அவனுயிர் கொண்டது. இதோ உறங்குவான்போலக் கிடக்கின்றுன். காண்பாயாக.

**சம்பாபதி:** அணங்கும் பேயும் அரிய உயிரை உண்ணமாட்டா; நெருங்கிய முப்புரி நூலை யணிந்த மார்பினையுடைய சார்ங்கலன் தன்

அறியாமை காரணமாகப் பயப்பட்டு ஊழ்வினையால் இறந்தனன். நீ துன்பமொழிவாயாக.

**பார்ப்பனி :** என்னுடைய உயிரைப் பெற்றுக் கொண்டு என் மகனின் உயிரைத் தந்தருளுவாயானல், கண்ணற்ற என் கணவனை இவன் பாதுகாப்பான்; ஆகலின், இவன் உயிரைத்தந்து என்னுயிரை வாங்குவாயாக.

**சம்பாபதி :** அரிய உயிரானது உடம்பை விட்டு நீங்கினல், தான் செய்த வினையின் வழியே சென்று வேறு பிறப்பை அடையும்; இதில் ஐயம் உண்டோ? இறந்த நின் மகனது உயிரைத் தந்து, உனது துன்பத்தைப் போக்குதல் என்னல் முடிவதொரு காரியமன்று. நீ வருந்தாதே.

**பார்ப்பனி :** 'தேவர்கள் வரமளிக்க வல்லர்' என அந்தணர்களது வேதம் கூறுகிறதே; அங்ஙனமாகவும் மிகப் பெருந்தெய்வமாகிய நீ, அருள் புரியாவிட்டால் யானும் என் உயிரை இவ்விடத்திலேயே விடுவேன்.

என, பார்ப்பனி கூறலும், சம்பாபதித் தெய்வம் 'சக்கரவாளக்கோட்டத்திலே திரியும் தேவர்கள் எவரேனும் இவனுயிரைத் தர வல்லராயின் நானும் தருவேன்; என் ஆற்றலைக் காண்பாயாக, என்று கூறி, பல்வகைத் தேவர்களையும் தேவ

கணங்களையும் சக்கரவாளக்கோட்டத்தில் வர வழைத்துக் கோதமைக்கு முன் நிறுத்தி 'இவளுக்கு ஏற்பட்ட துயரை நீக்குவீர்களாக' என்று கூறிற்று.

பலவகைத் தேவர்களும் கோதமைக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கேட்டு, சம்பாபதி கூறிய வாறே கூற, அவள் தான் அடைந்த துன்பத்தினின்றும் நீங்கி மகனுடலை ஈமச் சுடலையில் அடுக்கப்பட்ட விறகினையுடைய அழலில் இட்டுத் தானும் இறந்தனள். இதனால், சம்பாபதித் தெய்வத்தின் ஆற்றலையும் உலகம் உணர்ந்தது'' என, மணிமேகலா தெய்வம் சுடுகாட்டுக் கோட்டத்தின் தன்மையையும் சம்பாபதித் தெய்வத்தின் மேம்பாட்டையும் கூறிக்கொண்டிருக்கும்போது சுதமதி கண்ணயர்ந்து தூங்கலானாள். இதனையே எதிர்பார்த்துக்கொண்டிருந்த மணிமேகலா தெய்வம், மணிமேகலையைத் தூக்கிக்கொண்டு வானிடைப் பறந்து சென்றது. இவ்வாறு பறந்து, காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து தெற்கே முப்பது யோசனை தூரம் சென்று, கடலாற் சூழப்பட்ட மணிபல்லவம் என்னும் தீவையடைந்து, அங்கே அவளைத் துயில வைத்துவிட்டுத் திரும்பிச் சென்றது.

## 7. மணிமேகலை தன் பழம்பிறப்புணர்தல்

உவ வனத்திலிருந்து தன் அரண்மனைக்குத் திரும்பிய உதயகுமாரன், இரவு முழுவதும் மணிமேகலையையே நினைந்து நினைந்து உறக்கமின்றிப் படுக்கையிற் புரண்டுகொண்டிருந்தான்; அவளை அடைவது எவ்வாறு எனச் சிந்தித்துக்கொண்டே இரவைக் கழிக்கலானான். இவ்வாறு படுக்கையிற் கிடந்த உதயகுமாரன்முன், மணிமேகலா தெய்வந் தோன்றிற்று. அவன் திடுக்கிட்டெழுந்தான். அது அவனை அன்புடன் நோக்கி, ''மன்னவன் மகனே, அரசன் தன் இயல்பினின்று மாறுவானாயின், கிரகங்கள் தத்தம் நிலையினின்றும் மாறுபடும். அவை மாறுபடின் பருவ மழை ஏற்படாது. பருவ மழை பெய்யாதுவிடின் உலகு பஞ்சத்தால் வாட உயிர்கள் இறந்துபடும். உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் மன்னனது உயிர் என்னும் பழமொழியின் மெய்ம்மை இதனால் அழிந்துவிடும். ஆகையால், தவத்துக்கென்றே தன்னை ஒப்படைத்தவளாகிய மணிமேகலையின்மீது வைத்த இழிந்த உன் எண்ணத்தைக் கைவிடு'' எனக் கூறிற்று. பின்னர் அங்கு நின்று, சுதமதி துயின்றுகொண்டிருந்த மலர்வனத்தை அடைந்தது.

மலர்வனத்தை அடைந்த மணிமேகலா தேவி சுதமதியைத் துயிலெழுப்பி, ''அஞ்சாதே, நான் தான் மணிமேகலா தெய்வம்; இந்நகரில் நிகழும்

இந்திரவிழாவைக் காணுதற்காக இங்கு வந்தேன். உன் இளந்தோழி, புத்த சமய வழி சென்று அடியவளாகுங் காலம் வந்துவிட்டது. ஆதலால், நான் அவளை மணிபல்லவத் தீவிலே கொண்டுபோய் விட்டிருக்கின்றேன். இப்பொழுது அவள் அங்கே நல்ல பாதுகாப்புடன் இருக்கிறாள். அவள் ஆங்குத் தன் பழம்பிறப்பை உணர்வாள். உணர்ந்த பின் இன்றைக்கு ஏழாம்நாள் இங்குவந்து சேருவாள். அவள் இங்கு வரும்போது வேறு உருவுடனேயே வருவாள். ஆயினும், அவள் உனக்குப் புலப்படுவாள். அவள் இந்நகர்க்கு வருங்காலத்துப் பல அற்புதங்கள் நிகழும். இதற்கிடையே நீ மாதவியிடஞ் சென்று என் வரலாற்றையும் அவள் மகள் மணிமேகலைக்கு ஏற்பட்ட நல்வழியையுங் கூறு. மாதவி என்னை அறிவாள். நானே கடலின் தெய்வம், கோவலன் விருப்பப்படி என் பெயர் தான், அவள் புதல்விக்கு நாமமாக ஏற்பட்டது. குழந்தைக்கு என் பெயர் சூட்டப்பட்ட அன்றிரவு நான் மாதவிக்குக் கனவிற் காட்சி கொடுத்து அவள் புதல்வி, 'அழகில் மிக்கவள் ஆவாள்' என்றும், 'அறநங்கை ஆவாள்' என்றும் கூறியிருக்கிறேன்'' என்று கூறி வானில் எழுந்து மறைந்து போயினள்.

மணிமேகலா தெய்வம் இவ்வாறு மாயமாய் மறைந்துவிட்டமையை உணர்ந்த சுதமதி மணிமேகலையின் பிரிவால் வருந்தி, மேற்கு மதிலின் வாயில் வழியே சக்கரவாளக் கோட்டத்தை அடைந்து ஒரு பக்கத்தேயிருந்தாள் அப்பொழுது, அவ்விடத்திலுள்ள தூணிற் செதுக்கியிருந்த ஓர்

உருவம் பேசுவது கேட்டுத் துணுக்குற்றாள். அது, "முற்பிறப்பிலே இரவிவன்மனது ஒப்பற்ற மகளாயிருந்தவளே, துச்சய மன்னனது தேவியே, தாரையென்னும் உன் தங்கை காட்டு யானையால் இறந்தமையைக் கேட்டு மயங்கி உயிரை விட்ட வீரையே, இப்பிறப்பில் சண்பை நகரத்துக் கௌசிகனுக்கு மகளாகத் தோன்றியவளே, சுதமதியே, இன்றைக்கு ஏழாம்நாள் முற்பிறப்பில் உன் தங்கை இலக்குமியாயும், இப்பிறப்பில் மணிமேகலையாயும் பிறந்தவள். தன் முற்பிறப்பின் வரலாற்றையும் உன பிறப்பின் வரலாற்றையும் அறிந்து நள்ளிரவில் இந்நகர்க்கு வருவாள்" எனக் கூறிற்று. இவ்வார்த்தைகள் செவிப்படலும் சுதமதி அச்சத்தால் நடுங்கிப் பொழுது புலருமட்டும் அவ்விடத்தேயிருந்து விடியற்காலமானவுடன் மாதவியையடைநது அவ்விரவில் நிகழ்ந்த புதுமையான நிகழ்ச்சிகள் அனைத்தையுங் கூறினள். மகளின் பாதுகாப்பையிட்டு முன்னரே மிகவும மனக்கலக்கமடைந்திருந்த மாதவி இதனைக்கேட்டு மேலும் மனங்கலங்கி, மாணிக்கத்தை இழந்த கருநாகம்போலப் புத்திரியின் பிரிவாற் செயலற்றிருந்தாள். சுதமதி உயிரைப் பிரிந்த உடல் போலானாள்.

மணிபல்லவத்தின கடலருகே மணலிலே துயின்றுகொண்டிருந்த மணிமேகலை தன் துயிலுணர்ந்தெழுந்தாள். முனபின்னறியாத ஒரு கடற்கரையில தான் தனித்திருப்பதைக் கண்டு அவளுக்குத் திகில் உணடாயிற்று. சூரியன் நீலக் கடலின் மத்தியிலிருந்து முளைத்தெழுந்து தன் எண்ணற்ற செங்கதிர்களைப் பரப்பிக்கொண்

டிருந்தான். அவற்றால், 'தகதக' வென்று மின்னிய கடலலைகள், மணல் நிரம்பிய கடற்கரை மீது முத்துக்களையும் பவளங்களையும் வாரிவாரி இறைத்துக்கொண்டிருந்தன. அருகேயுள்ள நீர்த் தடாகங்களில் தாமரையும் ஆம்பலும் பூத்துப் பொலிந்து காணப்பட்டன.

'தான் இருக்குமிடம் உவவனத்தின் ஒரு பகுதிதானா? அல்லது சுதமதி தன்னை ஏமாற்றி முன்பின்னறியாத ஓரிடத்துக்குக் கொண்டுவந்து விட்டாளா? அல்லது மாயவித்தையோடு தோன்றிய அத் தெய்வ மடந்தை செய்த மாய வஞ்சனையா? எதுவுந் தெரியவில்லையே' என, மணிமேகலை தன் மனத்துள் நினைந்து, "நான் தனியே இருத்தற்கு அஞ்சுகிறேன். சுதமதியே, எங்கே ஒளித்தாய், எனக்கு ஏன் இத்தகைய துன்பத்தை உண்டாக்கினாய், நனவோ, இது கனவோ என நான் அறியேன், என் மனம் நடுங்குகின்றது. நீ எங்கிருந்தாலும் எனக்கு ஒரு குரல் கொடு; இருள் நீங்கிவிட்டது. இதோ விரைந்து வா" என்று சொல்லிக்கொண்டு மணற்றிடர்களிலும் நீர்த்துறைகளிலும் நடந்து சென்றாள். சென்று, மனித உருவோ மனிதர் உறைவிடமோ எதனையுங் கண்டாளல்லள். எங்கும் அன்னங்கள், நாரைகள், கடல் தாராக்கள் என்பன கூட்டங் கூட்டமாய்ப் போர்க்களத்தில் அணிவகுத்து நிற்கும் படைகள் போலக் கழிநிலங்களில் வரிசை வரிசையாய் நின்றன,

மனித சஞ்சாரமற்ற தீவிலே தனியே விடப் பட்டோமோ என்ற பயத்தினால் அவள் கண்ணீர் விட்டழலானாள். அவளுக்குத் தன் தந்தை கோவலனின் நினைவு ஏற்பட்டது. ''மனைவியோடு வேறுநாடடைந்து வாளால் வெட்டுண்டிறந்த எந்தையே,'' எனக் கூவி அழுதாள். அப்பொழுது பளபளப்பான பளிங்கினால் புனைந்தியற்றப்பட் டதும் இந்திரனால் ஆக்கப்பட்டதுமான புத்த பீடிகை அவள் கண்ணுக்குப் புலனாயிற்று.

மணிமேகலை புத்தபீடிகையைக் கண்டதும் அளவில்லா மகிழ்ச்சி கொண்டாள். அவளை அறி யாமலேயே அவளது கைகள் அவள் தலைமேற் குவிந்தன. கன்னங்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீருடனும் தலைமேற் கூப்பிய கைகளுடனும் அப்பீடத்தை மும்முறை வலம்வந்து பணிந்து எழுந்தாள். இவ்வாறு எழுஞ்சமயத்து அவளது பழம்பிறப்புப்பற்றிய நினைவுகள் ஒவ்வொன்றாக அவள் உள்ளத்திற் புலனாகத் தொடங்கின:

காயங்கரை என்னும் ஆற்றங்கரையில் இருந்து தருமோபதேசம் செய்த பிரமதருமன் என்னும் அறிஞனின் ஞாபகம் முதலில், மணி மேகலையின் நினைவுக்கு வந்தது. பிரமதருமன் காந்தார நாட்டரசனாகிய அத்திபதியின் மைத் துனன். அத்திபதி காந்தார நாட்டில் பூருவ தேசத்தில் இடவயமென்னும் நகரை இராசதானி யாகக்கொண்டு அரசியற்றி வருநாளிலே, பிரம தருமன் அவ்விடஞ் சென்று அரசனுக்குத் தரு மோபதேசம் புரிந்தான். அப்பொழுது அவன்

அரசனை நோக்கி, 'அன்றுதொடங்கி ஏழு நாளைக்குள் அந்நகரிற் பூகம்பம் உண்டாகி அந்நகரும் நாகநாட்டில் நானூறு யோசனை பரப்புள்ள பிரதேசமும் அழிந்துவிடும் என்றும், ஆதலால், உடனே அந்நகரத்தைவிட்டு வேறிடம் செல்லுமாறும்' கூறினர்.

அத்திபதி இச்செய்தியைப் பறையறைவித்துத் தெரிவித்து நகர மக்களுடன் தானும் அவந்தி நகரம் செல்லப் புறப்பட்டான். வழியிற் காயங்கரை என்னும் ஆற்றங்கரையிற் பாடிவீடு செய்து அங்கே தங்கினன். அப்பொழுது பிரமதருமன் கூறியபடியே குறித்த நாளிற் பூகம்பம் உண்டாகி இடவய நகரம் அழிந்துபோயிற்று. அது தெரிந்த அரசனும் பிறரும் பிரமதருமனைச் சரணடைந்து, அவனை வணங்கி நின்றனர். அப்பொழுது பிரமதருமன் அவர்களுக்குத் தருமோபதேசம் புரிந்தான்; என்னும் இந்நினைவும், அதனைத் தொடர்ந்து அரசன் முதலியோருடன் தானும் அம்முனிவனை வணங்கியமையும் அம்முனிவன் கூறியனவும் நினைவுக்குவர மணிமேகலை, "பிரமதரும, முற்பிறப்பில் நான் அசோதர நாட்டரசனாகிய இரவிவர்மனின் புத்திரியாயிருந்தேன். இரவிவர்மனுக்கும் அவன் பத்தினியாகிய அமுதபதிக்கும் புத்திரியாய் இலக்குமியென்னும் பெயர் கொண்ட நான், அத்திபதி என்னும் அரசனுக்கும் அவன் பத்தினியாகிய நீலபதிக்கும் புத்திரனாய் உதித்த இராகுலன் என்பவனை மணந்திருந்தேன். நானும் இராகுலனும் உம் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினோம். இன்றிருந்து பதினாறும் நாள்

திட்டிவிடமென்னும் நச்சுப்பாம்பாற் கடியுண்டு இராகுலன் மாள்வானென்றும், நீயும் அவனுடன் தீயிற் புகுவாய் என்றும் திருவாய் மலர்ந்தருளி னீர்கள். பின்பு 'காவிரிப்பூம் பட்டினத்திற் சென்று பிறப்பாய்' என்றும், 'அவ்விடத்தில் உனக்கு ஒரு துன்பம் ஏற்பட மணிமேகலா தெய் வம் நள்ளிரவில் உன்னை எடுத்துக்கொண்டு போய்க் காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கி லுள்ள ஒரு தீவில் விட்டுச்செல்லும்; ஆங்குள்ள புத்த பீடிகையை நீ தரிசித்துத் தொழுவாய்; உடனே உன் முன்பிறப்பு நிகழ்ச்சிகள் உன் நினை வுக்கு வரும்,' என்றும் தெரிவித்தீர்கள். அப் பொழுது நான் என் கணவனின் மறு பிறப்பை யுங் கூறுமாறு கேட்டேன். அதற்கு உன்னைக் கொண்டுசென்ற தெய்வம் மீண்டுந் தோன்றி உனக்கு அதனைப் புலப்படுத்தும் என்று கூறினீர் கள். அத்தெய்வம் இப்பொழுது என் முன் தோன்றுமா'' என்று கூறி ஏங்கி அழுதாள்.

# 8. மணிமேகலையும் மணிமேகலா தெய்வமும்

மணிமேகலை இவ்வாறு அழுதுகொண்டிருக்கையில், ஆகாயத்தினின்றும் இறங்கிவந்த மணி மேகலா தெய்வம், ''உயிர்களெல்லாம் உணர் விழந்து அறிவிழந்து அறம் அழிந்து தடுமாறும் போது இளஞ்சூரியன் தோன்றினற்போல நீ தோன்றினுய். உன் பாதங்களைப் பணிந்தேன்'' என்று கூறி, புத்த பீடிகையைப் புத்தராகவே மதித்து வணங்கியது.

மணிமேகலா தெய்வத்தைக் கண்ட மணி மேகலை ''உன் திருவருளால் புத்தபீடிகையின் மூலம் என் முற்பிறப்பை உணர்ந்தேன். அப் பிறப்பில் என் கணவனுக இருந்த இராகுலன் எங்கே பிறந்துள்ளான்'' என்று கேட்டாள்.

''இலக்குமி கேட்பாயாக: நீ உன் முற்பிறப் பில் உன் கணவன் இராகுலனேடு சோலை ஒன்றில் ஒரு நாள் கூடியிருந்தாய். அப்பொழுது உன் ஊடலைத் தீர்ப்பதற்காக அவன் உனதடியை வணங்கினுன். அச்சமயம் சாதுசக்கரன் என்னும் பௌத்த முனிவன் இரத்தினத்தீவம் சென்று அங்கே தருமோபதேசம் செய்துவிட்டு மீண்டு வரும்வழியில் ஆகாயத்திலிருந்து இறங்கி உன்முன்

வந்தான். நீ அவனைக் கண்டு மெய்ந்நடுங்கி மயங்கிப் பணிந்தாய். அதுகண்ட இராகுலன் 'இங்கே வந்தவன் யார்' என்று கோபித்துக் கேட்க, நீ அஞ்சி நடுநடுங்கி அவன் வாயைப் பொத்தி, ஆகாயத்தினின்றும் இறங்கிய அப் பெரியோனுடைய பாதங்களை வணங்கி, 'யாங்க தேவரீருடைய அடியவர்களல்லமாயினும் அமுதும் இனிய தண்ணீருங் கொண்டு வருகிறோம். அமுது செய்தருள்க. தேவரீருடைய திருவுளப் படியே செய்யச் சித்தமாயிருக்கிறோம்' என்று கூறினாய். உடனே அம்முனிவன், 'தாயே, உண்பேன் கொண்டு வருக;' என்று கூற, நீ அம்முனிவனை உண்பித்தாய். அவ்வறத்தினாலேயே நீ இனிப் பிறவாநிலையை அடையும் பேறுபெற்றனை. உன் கணவனாயிருந்த இராகுலனே உவவனத்தில் உன்னிடம் வந்த உதயகுமாரன். அதனாலேதான் அவனுடைய மனம் உன்னை விரும்பியது. உன் மனமும் அவன்பாற் சென்றது.

"இலக்குமி, இன்னும் கேட்பாயாக. முற்பிறப்பில் உன் தமக்கைமாராயிருந்த தாரையும் வீரையும் அங்கதேசத் தரசனாகிய துச்சயனை மணந்தார்கள். ஒருநாள் அவர்கள் மலைவளங் காணும்பொருட்டுக் கங்கைக் கரையை அடைந்தனர். அப்பொழுது அங்கே அறவணவடிகள் வரக்கண்டு அவரை வணங்கி, 'தேவரீர் யாவிர்! இங்கே எழுந்தருளியதேனோ?' என்று வினவ அவர், 'பாதபங்கயமலையைத் தரிசிக்க வந்தேன். ஆதிகாலத்தே புத்ததேவர் எல்லா உயிர்களும் துன்பத்தினின்று நீங்கி இன்புற்றிருக்க

வேண்டுமென நினைந்து அம்மலையினின்று தரு மோபதேசம் செய்தார். அப்பொழுது அவருடைய பாதங்கள் தங்கப்பெற்றமையால், அம்மலை அப்பெயர் பெற்றது. அதை நீங்கள் தரிசித்து வழிபடுமின்' என்று கூறினர். அவ்வாறே தரிசித்த புண்ணிய விசேடத்தால் தாரையும் வீரையும் முறையே, மாதவியாயும் சுதமதியாயும் பிறந்து உன்னேடு கூடினர்.

''மணிமேகலை, நீ பழம்பிறப்பை உணர்ந்தாய்; நீ உண்மையான அறத்தை அறிதற்கு முன், மற்றைய சமயங்களின் கொள்கைகளையும் அறிதல் வேண்டும். ஆனல், நீ இளம்பெண்ணு யிருப்பதால், 'இளம்பருவத்தினள் என்று, மற்றைய சமயவாதிகள் உனக்குத் தங்கள் சமயக் கொள்கைகளை விளக்க முன்வரரார்கள். ஆகையால், நீ வேற்றுவடிவங் கொள்வது அவசியம். அதற்காக நான் இரண்டு மந்திரங்களை உபதேசிப்பேன். ஒன்றினல், நீ விரும்பிய உருவம் பெற்றுக்கொள்ளலாம்; மற்ரென்றன் உதவியால், நீ ஆகாயத்திலே பறந்துசெல்லல் முடியும். இதன் பின், நீ புத்ததேவர் அருளிச்செய்த நல்லற வழியை அறிதற்குரிய நாளிலே அறிந்துகொள்வாய். இப் புத்தபீடிகையை வணங்கித் துதித்து உனது ஊர் செல்லுவாயாக.'' என்று, மணிமேகலாதெய்வம் கூறிமுடித்து, இரு மந்திரங்களையும் மணிமேகலைக்கு உபதேசித்துவிட்டு, வானில் எழுந்து ஆகாயமார்க்கமாகச் சிறிது தூரம் சென்றது. பின்னர் அது மீண்டும் நிலத்துக்கு

இறங்கிவந்து "உனக்கு நான் இன்னும் ஒரு செய்தி கூறல் வேண்டும். அழியத்தக்க இவ்வுடம்பு உணவினால் நிலைபெறுவது. உணவு கிடைக்காவிடில் உடல் நிலையாதல்லவா? ஆகையால், உணவின்றி உயிர் தங்குவதற்குரிய மந்திரத்தையும் நீ கற்றுக்கொள்ளுதல் அவசியம்," எனக் கூறி, அதற்குரிய மந்திரத்தையும் மணிமேகலைக்கு அறிவுறுத்திவிட்டு ஆகாயவழியே சென்று கண்ணுக்குப் புலனாகாமல் மறைந்து விண்ணகம் மேவிற்று.

---

## 9. மணிமேகலை அமுதசுரபியைப் பெற்றமை

மணிமேகலா தெய்வம் அவ்விடம் விட்டகன்ற பின்னர், மணிமேகலை அத்தீவி லுள்ள மணற் குன்றுகளையும் பூஞ்சோலைகளையுங் குளிர்ந்த பொய்கைகளையும் பளிங்குபோன்ற நீர்த்தடாகங்களையும் பார்த்துக்கொண்டே மெல்ல மெல்ல உலாவி வந்தாள். இவ்வாறு ஒரு காவததூரஞ் செல்வதற்குள் அவள் முன், சாந்தசொரூபியான ஒரு பெண் எதிர்ப்பட்டாள். தருமதேவதை போன்ற அந் நங்கை, மணிமேகலையைக் கண்டதும், "அம்மணி, அபாயமடைந்து உடைந்த கப்பலிலிருந்து தப்பி வந்தவள்போலக் காணப்படுகிறாயே; உன் வரலாறு யாது? நீ யார்?" என வினவினாள்.

''அன்னையே, எனது எப்பிறப்பைப்பற்றி அறிய விரும்புகிறீர்கள்? எனது முந்திய பிறப்பில் இராகுலன் என்பவனின் மனைவியாய், இலக்குமி என்னும் பெயருடன் இருந்தேன். இப்பிறப்பிற் காவிரிப்பூம்பட்டினத்தில் நாடகக்கணிகையாகிய மாதவியின் மகளாய் மணிமேகலை யென்னும் பெயருடையேன். மணிமேகலா தெய்வம் என்னைக் காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள உவவனத்தில் இருந்து இத் தீவிற் கொண்டுவந்து விட்டது. இங்குள்ள புத்த பீடிகையை வலம்வந்து வணங்கி என் முற்பிறப்பை உணர்ந்துகொண்டேன். இது என் வரலாறு. இப்போது நான், தங்கள் வரலாற்றை அறியலாமா?'' என்று கேட்டாள்.

''இத் தீவினருகே இரத்தினத் தீவகத்தில் சமந்தகூடம் என்னும் ஒரு மலை உண்டு. அம்மலையில் மிகவும் உயர்ந்து விளங்கும் உச்சியில் புத்த பெருமானது திருவடிப்படிமைகள் உள்ளன. அவற்றைத் தரிசித்து வழிபடுவோர் பிறப்பாகிய துன்பத்திலிருந்து நீங்குவர். அத் திருவடித் தடங்களை வழிபட்டபின் இத் தீவிற்கு முன்னொரு காலத்தில் வந்தேன். அன்றுதொட்டு வானவர் வேந்தனாகிய இந்திரன் ஆணைப்படி இப் புத்த பீடிகையைக் காத்துவருகிறேன். என் பெயர் தீவதிலகை. புத்ததேவராற் போதிக்கப்பட்ட தரும வழியே ஒழுகுபவர் எவராயினும் இப் புத்த பீடிகையைத் தரிசிப்பரேல் தரிசன விசேடத்தாற் பழம்பிறப்பை அறிவது நிச்சயம். அத்தன்மையினை யுடையோர் உலகில் மிகச் சிலரே. நீ பழம் பிறப்புணர்ச்சியை அடைந்தமையால் மிகவும்

பெரியை. புத்தபீடிகையின் எதிரே இருப்பது கோமுகி என்னும் பொய்கை. இது குவளையும் நெய்தலும் மயங்கிய கொழுநீர் இலஞ்சி. அப்பொய்கையினுள்ளிருந்து ஆண்டுதோறும் புத்தபிரான் பிறந்தநாளன்று, அதாவது வைகாசி மாதப் பௌர்ணமித் தினத்தன்று அமுதசுரபி என்னும் அட்சயபாத்திரம் மேலேவந்து தோன்றும். அந்த நல்லநாள் இன்றே. அது தோன்றும் வேளையும் இதுவே. அஃது முன்னொருகாலத்தில் ஆபுத்திரனென்பானிடமிருந்தது. அப்பாத்திரம் இப்பொழுது உன் கையில் வருமென்றே எண்ணுகின்றேன். அதில் இடப்படும் அன்னம் எடுக்க எடுக்க வளர்ந்துகொண்டே வரும். அது எப்பொழுதும் நிரம்பியதாகவே இருக்கும். இரவலர் எத்தனைபேராயினும் அவர்களுக்கெல்லாம் அதனுதவியால் உணவளிக்கலாம். அதன் பூரணமான வரலாற்றை உனது நகரத்திலுள்ள அறவணவடிகளிடமிருந்து அறிந்துகொள்வாய்'' என, தீவதிலகை என்னும் அக்காவற்றெய்வம் மணிமேகலைக்குக் கூறிற்று.

தீவதிலகை அட்சயபாத்திரம் பற்றிக் கூறியவற்றைக் கேட்ட மணிமேகலை, புத்தபீடிகையை வணங்கிய பின் தீவதிலகையுடன் கூடிக்கொண்டு கோமுகி என்னும் நீராழிக்கு மகிழ்ச்சியோடு சென்றாள். சென்று, அப்புனிதமான பொய்கையை வலம் வந்து நீர்க்கரையை அடைந்தாள். அப்பொழுது அப்பாத்திரம் அப்பொய்கைநீரினின்றெழுந்து மணிமேகலையின் கையை வந்தடைந்தது. இவ்வருஞ் செயலைக்கண்டு மனமகிழ்ச்சி

யுற்ற மணிமேகலை அப்பொய்கையின் அயலிலே போதி நீழலில் உறைந்த புத்தபிரானின் திருவடிகளை வணங்கிப் பலவாறு துதித்தாள்.

இவ்வாறு வணங்கித் துதித்த மணிமேகலையை, தீவதிலகை பார்த்து ''அம்மே, பசிப்பிணி என்னும் பாவி பொல்லாதவள். அஃது யாரைப் பீடிக்கின்றதோ அவர்களது குடியின் சிறப்பையும் உயர்ச்சியையும் அழித்துவிடும். துன்பக்கடலைத் தாண்ட உதவும் கல்வியாகிய புணையை உடைத்துவிடும். நாணத்தைப் போக்கும்; அழகைச் சிதைக்கும்; மற்றையோரது தலைவாசலில் நிற்கச்செய்யும். அப் பசிப்பிணியைத் தீர்த்தோரது பெருமை, எண்ணிலடங்காது. முன்னொருகாலத்தில் மழையில்லாமற் போனமையாற் பசியால் வருந்திய கௌசிகமுனிவர், அதனைத் தீர்ப்பதற்கு எங்கும் அலைந்து திரிந்தும் உணவு கிடையாமல் மெலிந்து, ஈற்றில் நாயிறைச்சியைப் பெற்று, தின்னப்புகும் சமயத்தில் அவ்விறைச்சியின் ஒரு பகுதியைத் தெய்வங்களுக்குப் பலியிடுவாராயினர். அது தெரிந்த இந்திரன், உடனே எங்கும் மழையைப் பெய்யச் செய்தமையால் விளைவு பெருகியது. உயிர்கள் மகிழ்ந்து வாழ்ந்தன. ஆற்றாத மக்களின் அரிய பசியை நீக்குவோரே இவ்வுலகில் உண்மையான வாழ்வு வாழ்வோராவர். மண்திணிந்த இப் பூவுலகத்து வாழுகின்ற உயிர்களுக்கு உணவு கொடுத்தவர்கள், அவர்களுக்கு உயிர்கொடுத்தவர்களாவர். ஆதலால், பசியைப் போக்கி உயிரைக் கொடுத்தலாகிய தருமத்தைச் செய்,'' என்று கூறினள்.

மணிமேகலை இதனைக் கேட்டு "நான் முந்திய பிறப்பிற் சாதுசக்கரன் என்னும் முனிவனை உண்பித்த புண்ணியத்தை உடையேனுயிருந்தேன். அந்நினைவுடன் இறந்த புண்ணிய விசேடத்தாற் போலும் இன்று இப் பாத்திரம் கிடைத்ததெனை எண்ணுகிறேன். இது நிற்க, பசியால் வாடிய குழந்தையின் முகத்தைக் கண்டு மனமிரங்கிப் பால் சுரக்குந் தாய்போல, வயிற்றை வாட்டுகின்ற பெரும் பசி வருத்துகின்ற வருத்தத்தால் வெயிலென்றும் மழையென்றும் பாராமல் எங்கும் அலைந்து திரியும் ஏழைகளின் முகம் மலர இப்பாததிரம் அமுது சுரந்தளித்தலைக் காணும் விருப்பமுடையேன்," என்று தெரிவித்தாள்.

இவற்றைக் கேட்டு மகிழ்ந்த தீவதிலகையுடன், மேலுஞ் சிறிதுநேரம் அளவளாவி, அப் பாத்திரத்துடன் மணிமேகலை தனது ஊருக்குச் செல்லப் புறப்பட்டாள். புறப்பட்ட மணிமேகலை, தீவதிலகையின் பாதத்தை வணங்கி, புத்தபீடிகையைத் தொழுது, வலஞ்செய்து ஆகாயவழியே செல்வதற்குரிய மந்திரத்தைச் செபித்து மேலே எழுந்து வானிற் பறந்து காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தாள்.

மகளை விட்டுப் பிரிந்த மணிமேகலையின் தாயான மாதவி, நாள்களை எண்ணிக்கொண்டே அவள் வருகைக்காகக் காத்திருந்தாள். காவிரிப் பூம்பட்டினத்தை அடைந்த மணிமேகலை, தன்னைக் காணுது வருந்திக்கொண்டிருந்த மாதவியையும் சுதமதியையுங் கண்டு வணக்கம் தெரிவித்தாள். அவர்கள் அவளை மனமகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

# 10. மாதவியுஞ் சுதமதியுந் தம் பழம்பிறப்பறிதல்

மணிமேகலை, தாங்கள் முற்பிறப்பில் இரவிவர்மன் புதல்வியும் துச்சயன் மனைவியுமான அமுதபதியின் புதல்வியர்களாயிருந்தமையையும், அவ்வுறவுமுறையில் மாதவியும் சுதமதியும் மணிமேகலையின் தமக்கையர்களாயிருந்தமையையும், மற்றும் முற்பிறப்புப் பற்றிய வரலாறுகளையும் சுதமதிக்கும் மாதவிக்கும் தெரிவிக்க, அவர்கள் அதுகேட்டு வியப்படைந்தனர். மேலும் தன் கையிலுள்ள அட்சயபாத்திரத்தின் இயல்பையும் வரலாற்றையுந் தெரிவித்து அதனை வணங்குமாறு பணித்தாள். அவர்கள் அவ்வாறே வணங்க, ''இனி அறவணவடிகளை வணங்கி, மானுடயாக்கையாற் பெறற்கரிய தவப்பேற்றைப் பெறுவீர்களாக,'' என்று கூறி, அவர்களையும் அழைத்துக்கொண்டு புத்தமடத்துத் தலைவராகிய அறவணவடிகளைத் தரிசித்தற்குச் சென்றாள்.

மடத்துத் தலைவர் நரைத்த தலையையுடைய முதியவர்; உறுதிபயக்கும் வார்த்தைகளைக் கூறும் மூதறிஞர். அவர் இருக்குமிடத்தை மணிமேகலை விசாரித்தறிந்து, அவரை அணுகி, அவர் திருவடிகளை மும்முறை வணங்கி, மலர்வனத்திலே தான் உதயகுமாரனைக் கண்டதும் மணிமேகலாதெய்வந் தன்னை எடுத்துச்சென்று மணிபல்லவத்தில்

வைத்ததும் அத்தீவில் உள்ள புத்தபீடிகைக் காட்சியால் இலக்குமி என்னும் பெயர்வாய்ந்த தன் பழம்பிறப்பை அறிந்துகொண்டதும், 'முற்பிறப்பிலே தன் கணவனுயிருந்த இராகுலனே உதயகுமாரனுக வந்து பிறந்தமை ; அப்பிறப்பில் தன் தமக்கைமாரான தாரையும் வீரையும் முறையே மாதவியும் சுதமதியுமாகப் பிறந்தமை ;' ஆகிய வரலாறுகளைத் தான் அறிந்துகொண்டதும், அட்சயபாத்திரம் பெற்றதும், அப் பாத்திரத்துக்குரியவனுன ஆபுத்திரன் வரலாற்றை அறவணவடிகள்பால் அறியுமாறு தீவதிலகை கூறியதுமான வரலாறுகள் அனைத்தையும் அறவணவடிகளுக்குத் தெரிவித்து நின்ருள். இவற்றைக்கேட்ட அறவணவடிகளின் முகம் ஒளி பூத்தது. அவரது உள்ளத்தில் எழுந்த மகிழ்ச்சியை அவரால் அடக்கிக்கொள்ளல் முடியவில்லை. தழுதழுத்த குரலில் அவர் பின்வருமாறு கூறினுர்:

"'புத்தர்பெருமானின் பாதபங்கய மலையை வழிபட்டுத் திரும்பி வருகையில் துச்சயராசனை ஒரு சோலையிற் கண்டேன். 'அரசே, நீயும் உன் மனைவியும் சுகமா ?' என, நலம் விசாரித்தேன். அவன் மனங்கலங்கிக் கண்ணீர் தாரை தாரையாக வழிய அரற்றினுன். புதிதாகப் பிடிக்கப்பட்ட ஒரு காட்டுயானையின் முன் வீரை சென்றதாகவும், அவ்விலங்கு அவளைக் கொன்றுவிடவே, தங்கையை உயிருக்குயிராக நேசித்த தாரை, அவள் பிரிவை ஆற்றமாட்டாமல் உயர்ந்த ஒரு மாடத்தின் மீதேறி வீழ்ந்து உயிர் நீத்ததாகவும் அவன் கூறிப் புலம்பினுன்.

"என்ன ஆச்சரியம், நாடக அரங்கத்தில் உடையை மாற்றி மாற்றி, மீண்டும் புதிய ஆட்களாகத் தோன்றும் நடிகர்களைப்போல நீங்கள் மீண்டும் பிறந்து புதிய உடலுடன் என் முன் காட்சியளிக்கிறீர்கள்.

"என்னிடம் தன் துன்பத்தைக் கூறிய துச்சயனுக்கு' 'இது பழவினைப்பயன்; இதற்கு வருந்தாதே;' என்று அவனைத் தேற்றி மீண்டேன்.

"மணிமேகலை! இந்நகரத்தில் உன்னுற் சில விசேடங்கள் நிகழும். அதன்பின்னரே நான் கூறும் தருமோபதேசம் உன் மனத்திற்குப் பொருந்தும். அமுதசுரபியாகிய அட்சயபாத்திரத்தை நீ பெற்றனை; இதனுற் சகல உயிர்களுடைய பசியையும் தீர்ப்பாயாக; மனிதர்கள் தேவர்களாகிய இருபாலார்க்கும் ஒப்புகின்ற உயர்ந்த அறம், உயிர்களின் பசிப்பிணியைத் தீர்த்தலே. உன் கையிலுள்ள அட்சயபாத்திரத்துக் குரியவன் ஆபுத்திரன்; அவன் வரலாற்றையும் கூறுகிறேன் கேள்'' என, அவன் வரலாற்றைக் கூறத் தொடங்கினர்.

# 11. ஆபுத்திரன் வரலாறு

**வா**ரணுசிரமம் என்னும் இடத்தில் அபஞ்சிகன் என்னும் அந்தணனெருவன் இருந்தான். அவன் மனைவி சாலி. அவள் தீயொழுக்கமுடையவளா யிருந்தாள். ஆனுல், பின்னர் அதற்காக மனம் வருந்தி அப்பாவத்தை நீக்குவதற்காக இந்தியா வின் தென்கோடியிலுள்ள 'கன்னியாகுமரி' என்னும் தீர்த்தத்தில் தீர்த்தமாட விரும்பி, அங்கே செல்லும் புண்ணிய யாத்திரிகர் குழாத் துடன் சென்ருள். அவள் அப்பொழுது பூரண கருப்பவதியாயிருந்தும் அதனைப் பொருட்படுத் தாது செல்லும்பொழுது, வழியிலே பிரசவ வேதனையால் வருந்தி, நடுயாமத்தில் இரு ளடர்ந்த காடொன்றில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்ருள். பெற்றவள் அக் குழந்தைக்காகச் சிறிதும் இரங்காது, யாரும் செல்லாத தோட் டத்தில் அக் குழந்தையை வைத்துவிட்டு நீங்கி ஞள். தாயில்லாமையால் உணவு பெருது வருந் துகின்ற குழந்தையின் அழுகுரலைக் கேட்டு, ஒரு பசு அங்கே வந்து அக் குழந்தையின் துன்பம் நீங்குமாறு தன்னுடைய நல்ல பாலை ஊட்டி நாவால் நக்கி ஏழு நாட்கள் வரை பாதுகாத்து நின்றது.

இஃது இங்ஙனமாக, வயனங்கோடு என்னு மிடத்திலுள்ள இளம்பூதி என்னும் அந்தணன் ஒருவன், தன் மனைவியுடன் அவ்வழியே வந்தான்.

வந்தவன், அக் குழந்தையின் அழுகுரலைக் கேட்டு மிக்க துன்பத்துடன் அவ்விடம் சென்றான். பிள்ளைப் பேறற்ற அவன், பசுவினால் பாதுகாக்கப் பட்டுக் கிடக்கும் அக் குழந்தையைக் கண்டதும் 'இவன் ஆமகனல்லன் ; என்மகன்,' என்று கூறி, அக் குழந்தையைத் தூக்கி, 'நமக்கோர் நம்பி பிறந்தான், எனது சுற்றம் பெருகுவதாக,' என்று சொல்லி, அக் குழந்தையுடன் ஊர் சென்று தன் உறவினர்களுடன் குழந்தையை வளர்த்து வந்தான்.

அக் குழந்தை வளர்ச்சிபெற்று உரிய காலத்தே தன் குலத்துக்குரிய கல்விகளைக் கற்று வந்தான். அந்தணர்கள் அறியவேண்டுவன அனைத்தையும் அவன் அறிந்தபின்னர், அவ்வூரி லுள்ள ஓரந்தணன் வீட்டிற்கு ஒருநாட் சென்றான். அங்கே ஒரு பசு கட்டுத்தறி யொன்றிற் கட்டப்பட்டிருந்தது. அதன் கொம்புகளிற் பல நிறங்கள் பொருந்திய மாலை சுற்றப்பட்டிருந்தது. கொல்லும் தொழிலையுடைய வேடரது வில்லுக்குப் பயந்து ஓடி, அவர்களது வலையில் அகப்பட்டு வருந்தும் மான்போல, பெருமூச்செறிந்து அது கரைந்து புலம்பிக்கொண்டிருந்தது. அதற்கு மலர்கள் அணியப்பட்டிருந்ததனால் அது மறுநாட் காலையில் நிகழவிருக்கும் யாகத்திற் பலியிடப்பட இருப்பதை ஆபுத்திரன் அறிந்துகொண்டான். அப் பசுவிற்கு நேரவிருந்த கொடிய இடரை எண்ணி மனம் வருந்திய ஆபுத்திரன், எப்படியாவது அந்தப் பசுவைக் காப்பாற்றுவது என்று உறுதிகொண்டான். ஆகவே; நள்ளிரவில் யாருங்

காணுது சென்று, அப் பசுவைத் திருட்டுத்தன மாக அவிழ்த்துக்கொண்டு அவ்விரவிலேயே கல்லும் குழியும் நிரம்பிய வழிகளைக் கடந்து சென்ருன்.

திருட்டு எப்படியோ கண்டுபிடிக்கப்பட்டது. பார்ப்பனர் அவனை அகப்படுத்தி, ''புலைச் சிறு மகனே, ஏன் இந்த ஆவைத் திருடினுய்; கூறு,'' என்று, அவனைக் கோலால் நையப்புடைத்துக் கேட்டனர். இதற்கிடையே அப் பசு தன்னைப் பிடித்தவரிடமிருந்து திமிறித் தப்பிக்கொண்டு, குடர் புறப்படும்படியாகத் தலைவனைத் தன் கொம்பாற் குத்திவிட்டுக் காட்டிலே ஓடிற்று.

அப்பொழுது ஆபுத்திரன் அந்தணர்களை நோக்கி ''பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாதீர் கள்; அரசனுல் விடப்பட்ட முடிக்குரிய காணி களிலே, தானே முளைக்கும் பசும்புல்லை உண்டு, இவ்வுலகிலே தான் பிறந்தநாள் முதல் எவருக்கும் எந்தத் தீங்கும் செய்யாது மனிதனுக்கு இனிய பாலை அருள் உணர்ச்சியோடு தருகிற இப் பசு வுடன், உமக்கு வந்த பகைமை என்ன? அது எக்காரணத்தால் வந்தது? இதனை நீங்கள் கொல்லத் துணிந்ததேன்,'' என்று கேட்டான்.

''உயிர்களுக்கு முதல்வனுகிய நான்முகனுல் எமக்கு அருளப்பட்ட வேதத்தை நீ அறியமாட் டாதவனுகையால், அதனை இகழ்ந்தாய்; மயங்கு கின்ற உள்ளம்கொண்ட சிறியவன் நீ; நீ மனிதன் அல்லன்; நீ மகனல்லன் என்பதற்குப் பொருத்த மானவனே; நீ விலங்கின் மரபினனேயன்றி

வேறன்று;'' என்று, அந்தணர்கள் ஆபுத்திரன் மேற் சீறியுரைத்தனர்.

இளைஞன் எதிர்வாதிட்டான்.

''அசலன், மானின் மகன்; சிருங்கி, பசுவின் மகன்; விருஞ்சி, புலியின் மகன்; அறிவுடையோராற் புகழப்படும் கேசகம்பளன், நரியின் மகன்; இவர்களெல்லாம் உங்களாற் போற்றித் துதிக்கப் படும் முனிவர்கள்; அங்ஙனமாக, என்னை விலங்கின் மகன் என்று இகழ்தல் ஏன்?''

ஆபுத்திரனின் இவ் வார்த்தைகளைக் கேட்ட பார்ப்பனர்களில் ஒருவன் கடுஞ் சினங்கொண்டு, ''இச் சிறுவனுடைய வரலாற்றை யான் அறிவேன்; கன்னியாகுமரியில் நீராடிவிட்டு வருத்தத்துடன் வந்த சாலியென்னும் ஒரு பார்ப்பனியைக் கண்டு, 'உன் ஊர் யாது? நீ எதற்காக வருந்துகின்றனை? இங்கு வந்ததேன்?' என வினவினேன். அவள், தான் வாரணசியென்னும் ஊரிலுள்ள ஆரண உவாத்தியாயனாகிய ஓரந்தணன் மனைவியென்றும் தான் ஒழுகிய தீய ஒழுக்கத்தாற் கணவனைப் பிரிந்து கன்னியாகுமரிக்கு நீராடச் செல்லுகையிற் கொற்கை நகரத்துக்குக் காதவழிதூரத்துக்கு அப்பாலுள்ள இடையர் சேரியை அடுத்த காட்டில் ஆண்குழந்தை ஒன்றைப் பெற்று ஆங்குள்ள ஒரு தோட்டத்தில் விட்டுப்போனதாகவும் கூறி, அப்படிப்பட்ட தனக்கும் விமோசனம் உண்டா? என்று துன்புற்று அழுதாள். அவள் பெற்ற பிள்ளையே இவன். இதைச் சொல்லுவதால் யாது பயன்? என்று

இதுகாறும் சொல்லாதிருந்தேன். இவன், பொது மகன்; இவனைத் தீண்டாதேயுங்கள்,'' என்று கூறினான்.

ஆபுத்திரன் சிரித்து, ''வானகத்து ஆடல் நங்கையாகிய திலோத்தமையின் புத்திரர்கள் பெரிய முனிவர்களாக இருந்ததை நீவிர் அறிந்த தில்லையா? அவர்கள் உங்கள் குல முதற்குரவர் கள் அல்லரோ? அவர்கள் நான்முகனுக்கு ஆடல் நங்கையிடம் பிறந்த குழந்தைகள் அல்லரோ? அங்ஙனமாக, சாலியைப்பற்றி நீங்கள் எங்ஙனம் அவதூறு கூறல் முடியும்,'' என்று கூறினான்.

ஆபுத்திரனை வளர்த்த இளம்பூதி, அவனை அசுத்தன் என அறிந்து, அவனைத் தன் வீட்டில் ஏற்க மறுத்தான். பார்ப்பனர் அவன் பசுத் திருடிய கள்வனென்று குற்றஞ்சாட்டி, அவனைத் துரத்திக் கூக்குரலிட்டனர். இந்நிலையில், ஆபுத் திரன் பார்ப்பனச்சேரியை விட்டகன்று தென் மதுரையை அடைந்தான். வீடு வீடாக வாயில் தோறுஞ் சென்று உணவு பெற்று குருடர், செவி டர், முடவர், முதியோர், ஆதுலர் என்போரை உண்பித்து மீதியைத் தானும் உண்டனன். இரவு நேரத்திற் பிச்சை ஏற்கும் ஓட்டைத் தலை யணையாகக் கொண்டு சிந்தாதேவி கோயிலின் வெளிக் கூடத்தில் உறங்கினான். அவன் இரவல னாயினும் உயிர்களிடத்துக் கொண்ட அன்பின் மிகுதியால் அவன் எல்லையற்ற கொடையாளி யாக விளங்கினான்.

# 12. ஆபுத்திரன் அமுதசுரபியைக் கோமுகியிலிட்டமை

ஒருநாளிரவு மழையும் இருட்டும் அதிகமாய் இருந்தன. சிந்தாதேவியின் கோயிலில் ஆபுத்திரன் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது, பயணம் செய்து அலுப்படைந்த இரவலர்கள் சிலர், அங்கே வந்தார்கள். பசிநோய் பொறுக்கமுடியாத அவர்கள், ஆபுத்திரனை எழுப்பி உணவு தரும்படி கேட்டார்கள். இரக்க நெஞ்சுடைய சிறுவன், தன்னிடம் உணவு இல்லாமையால் மனவருத்தம் அடைந்தான். அப்பொழுது அங்கே கோயில்கொண்ட சிந்தாதேவி என்னுந் தெய்வம் எழுந்தருளிவந்து ''மகனே, நீ துயருறல் வேண்டாம். இப் பாத்திரத்தைப் பெற்றுக்கொள் ; நாடெல்லாம் வறுமையுற்றாலும் இவ்வோடு குறைவுபடாது வளர்ந்துகொண்டேயிருக்கும்,'' என்று கூறி, தன் கையிலுள்ள அட்சய பாத்திரத்தை அவன் கையிற் கொடுத்தாள். உடனே, அவன் அளவுகடந்த மகிழ்ச்சியடைந்து, ''சிந்தாதேவி ! கலைக்கோயில் கொண்டருளிய நந்தா விளக்கே ! அறிவுடையோர் நாவிற்றங்கியிருக்கும் தேவியே ! தேவர்களுக்குத் தலைவியே ! பூவுலகத்தோருக்கு முதல்வியே ! மற்றையவர்கள் படுந் துன்பத்தைக் களையும் தாயே !'' எனப் போற்றிப் பணிந்தான். அப்பாத்திரத்தைக் கொண்டு பசியால் வருந்தி வந்த இரவலர்களுக்கு உணவு கொடுத்து மகிழ்ந்தான். அன்றுமுதல் எல்லோருக்கும் அதனுதவியால் உணவு அளிப்பாருயினன்.

பாண்டிநாட்டிற் பஞ்சம் பரவியது. நாடோறும் ஆயிரக்கணக்கான ஏழைகள் அவனைச் சூழ்ந்து வந்து அவனிடமிருந்து உணவு பெற்று மகிழ்ந்தார்கள். விலங்குகளும் பறவைகளும் அவனை விட்டுப்பிரியாமல் அவனையே சூழ்ந்தன. அத்தனை பேருக்கும் உணவளித்தும் அவ்வுண் கலம் ஒருபோதும் குறைவுற்று வெறுமையானதில்லை.

இந்திரன், ஆபுத்திரனது புண்ணியச் செயலைத் தனது பாண்டுகம்பள நடுக்கத்தால் அறிந்து கொண்டான். பாண்டுகம்பள மென்பது, இந்திரனுக்குரிமையான ஒரு வெள்ளைக் கம்பளம். அதனுடைய அசைவைக்கொண்டு உலகிலுள்ள நிகழ்ச்சிகளை இந்திரன் அறிந்துகொள்ளுவான். அதன்மூலம் ஆபுத்திரனுடைய தருமச்செயலை அறிந்த இந்திரன், அவனுக்கு வரங்கொடுக்க நினைந்து ஒரு முதிய வேதிய வடிவங் கொண்டு அவன்முன் தோன்றி, ''நான் இந்திரன்; உனது தருமச்செயலை அறிந்து உனக்கு வரமளிக்க வந்தேன். உனக்கு வேண்டியது யாது? உன்னுடைய தானத்தின் பயனைப் பெற்றுக்கொள்'' என்று கூறினன். இதனைக் கேட்டதும் ஆபுத்திரன் விலாவிற நகைத்து, ''அறஞ் செய்பவர்களோ, தவஞ் செய்பவர்களோ, துறவிகளோ எவருமில்லாத தேவர்கள் வதியும் நாட்டுக்கு இறைவனாகிய இந்திரனே, பசியால் வருந்தி வந்தவர்களுடைய பசியைத் தீர்த்து அவர்களுடைய இனிய முகத்தைக் காணுதற் குதவிசெய்கின்ற என் தெய்வப் பாத்திரம் ஒன்றே எனக்குப் போதியது.

வேறொன்றும் வேண்டுவதில்லை'' என்று இந்திரனை மதியாது கூறினான்.

தன்னை மதியாத ஆபுத்திரனின் வார்த்தைகளாற் கோபமுற்ற இந்திரன், எங்கும் மிக்க மழையைப் பெய்வித்து, பயிர்கள் வளரும்படி செய்தான். இதனால், நாட்டிற் செல்வமும் உணவும் அதிகரித்தன; பசியால் வருந்துவோர் இலராயினர்.

ஆபுத்திரனிடம் உணவுபெற வருவோர் யாரும் இலராக, அவன் மதுரையை விட்டகன்று ஏழைகளையும் பசிப்பிணியால் வாடுபவர்களையும் தேடி ஊர்தோறும் போய், ''உண்போர் யாரேனும் உண்டோ?'' என்று வினவத் தொடங்கினான். அது கேட்ட எல்லோருஞ் செல்வக் களிப்பால் அவனை இகழ்ந்தார்கள். உணவு பெறுபவர் இன்மையால் பெருஞ் செல்வத்தை இழந்தவன் போல வருந்தி அவன் தனியாக அலைந்துகொண்டிருந்தான்.

இங்ஙனமாக, கடல்வழியாகப் பயணஞ் செய்த வணிகர் சிலர், ''மழையின்மையாற் சாவக நாட்டோர் பசியால் மடிகின்றனர்,'' எனக் கூறியதைக் கேள்வியுற்ற ஆபுத்திரன், சாவகஞ் சென்று அந்நாட்டு மக்களின் துன்பந் தீர்க்கவேண்டுமென்று அந்நாடு செல்லுங் கப்பலொன்றில் ஏறிச் சென்றான்.

பயணத்திடையே புயலொன்று ஏற்பட்டது. இதனாற் கப்பல் மணிபல்லவத் தீவினருகே நங்கூரமிட்டுத் தங்கியது. ஆபுத்திரன் கரையிலிறங்கித்

தீவுக்குட் சென்றான். ஆனால், இரவுக்குட் சாதக மான காற்று வீசத்தொடங்கிற்று. அப்பொழுதும் ஆபுத்திரன் மணிபல்லவத் தீவினருகிலேயே இருந் தான். இறங்கிய ஆபுத்திரன், கப்பலில் ஏறி விட்டானென்று எண்ணிய மீகாமன், இருளிற் கப்பலைச் செலுத்திக்கொண்டு சென்றான். ஆபுத் திரன் திரும்பி வந்து கப்பல் போய்விட்டதை அறிந்தான். யாருமில்லாத அத் தீவிலே தான் தனியே அட்சயபாத்திரத்துடன் இருப்பது குறித்து அவன் பெரிதும் கலங்கினான். 'பலருக்கு உணவளிக்கும் இப் பாத்திரத்தை நான் மட்டும் இருக்கும் இத்தீவில் வைத்திருந்து யாது பயன்?' என்று எண்ணி, அப்பாத்திரத்தைத் தொழுது "மிக்க கருணையுடன் தருமத்தை மேற்கொண்டு உயிர்களைப் பாதுகாப்போர் யாராவது வரின் அவர் கையிற் புகுவாயாக. அவர் வருந்துணையும் வருடத்திற்கு ஒருநாள் நீ தோன்றுவாயாக" என்று சொல்லி ஆங்குள்ள கோமுகிப் பொய்கை யில் விட்டு, தானும் பட்டினியாயிருந்து உயிர் துறந்தான்.

ஆபுத்திரனுக்கு ஏழுநாள்வரை பாலூட்டி வளர்த்த பசுவானது அப்புண்ணிய விசேடத்தால், சாவகநாட்டிலே, தவளமலையிலே தவஞ்செய்து கொண்டிருந்த மண்முக முனிவனிடத்து, பொன் மயமான குளம்புகளையும் கொம்புகளையும் உடை யதாய்ச் சென்று ஈனுமுன்னே பால் சுரந்து எல்லா உயிர்களுக்கும் உணவூட்டி வந்தது. முக்கால நிகழ்ச்சிகளையும் அறிய வல்ல மண்முக முனிவர், "இப் பசுவயிற்றில் எல்லா உயிர்களையும் பாது

காக்க வல்ல ஒரு விசேட புருடன் பொன்மயமான முட்டையினின்றும் தோன்றுவான்,'' என்று கூறினர்.

தருமஞ்செய்யச் சந்தர்ப்பம் கிடையாமையினாலே, அது காரணமாகப் பட்டினியிருந்து மணிபல்லவத்தில் இறந்த ஆபுத்திரன், தன்னை ஏழு நாள்வரை பாலூட்டிக் காத்த பசுவையே நினைந்தவண்ணம் உயிர்விட்டானாதலின் மண்முக முனிவன் கூறியவாறே, அப் பசுவின் வயிற்றிலே தோன்றினான். அவன் அங்ஙனம் தோன்றியதினம், வைகாசி மாதத்துப் பௌர்ணிமைத் தினமாகும்.

புத்திரப்பேறின்மையால் வருந்திக்கொண்டிருந்த பூமிசந்திரனென்னும் சாவக நாட்டரசன் மண்முக முனிவனை வணங்கி, அப்பசு பெற்ற குழந்தையை வாங்கி வளர்த்து வந்தான். அச்சிறுவன் சாவக நாட்டரசுரிமையைப் பெற்று ஆட்சி புரிந்தான்.

மேற்கூறிய வரலாறுகள் அனைத்தையும் மணிமேகலைக்கு அறவணவடிகள் கூறியபின்னர், அவளை நோக்கி, ''இப்பொழுது யாது காரணத்தாலோ இந்நாட்டில் உயிர்கள் வறுமையால் வருந்துகின்றன. ஆகையால், இந்த அமுதசுரபியை நீ சும்மா வைத்திருத்தல் முறையன்று. ஏழைகளுக்கு உணவளிப்பதைவிட உயர்ந்த அறம் வேறில்லை,'' என்று கூறினர்.

இங்ஙனம் கூறிமுடித்த மடத்துத் தலைவராகிய அறவணவடிகளிடமிருந்து, மணிமேகலை வணக்

கத்துடன் விடைபெற்றுப் பிக்குணிக் கோலம் பூண்டு அப் பாத்திரத்தையுங் கையில் ஏந்திக் கொண்டு வீதியை அடைந்தாள். இவ்வாறு அவள் தெருவீதியை அடைந்தபோது மக்கள் திரண்டு அவளை மொய்த்தனர்.

இளவரசனாகிய உதயகுமாரனால் விரும்பப் பட்ட ஒரு நங்கை, இவ்வாறு பிக்குணிக்கோலம் பூண்டு ஆண்டி உடை அணிந்து, பிச்சை ஏற்க வெளிப்பட்டமையைக் கண்டு அவர்கள் வியப் புற்றார்கள்.

அப்பொழுது மணிமேகலை "கற்புடைய மகளிர் இடும் பிச்சையையே முதலில் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்" என்று சொல்ல, காய சண்டிகை என்னும் ஒரு மாது, "பெய்யென மழையைப் பெய்விக்கத்தக்க கற்புடைமை வாய்ந்த ஆதிரையின் வீடு இது; இதிற் புகுக;" என மணிமேகலைக்குக் கூற, மணிமேகலை, "இந்த ஆதிரை என்பாள் யார்?" என வினவினாள். அதற்குக் காயசண்டிகை பதில் கூறத் தொடங் கினாள்.

# 13. ஆதிரையின் வரலாறு

ஆதிரை காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்திற் பிறந்தவள். இவள் கணவனின் பெயர் சாதுவன் என்பது. சாதுவன் ஒழுக்கங்கெட்டுத் தன் மனைவியைத் துறந்து கணிகை ஒருத்தியோடு தொடர்பு கொண்டு, அவள்பொருட்டுத் தன் செல்வமனைத்தையும் இழந்து வறியனாயினன். வறியனாயினமையால் அவனோடு தொடர்பு கொண்டிருந்த கணிகையும் அவனை நீங்கிச் சென்றாள். இதனாலும், தன் பொருளிழப்பினாலும் பெருந்துயருற்ற சாதுவன், மறுபடியும் பொருளீட்ட விரும்பி, வணிகர் கூட்டத்துடன் சேர்ந்து, கப்பலிற் சென்றான். அங்ஙனம் செல்லும்போது அவன் ஏறிச்சென்ற கப்பல் காற்று மிகுதியாற் கடலிற் கவிழ்ந்துவிட்டது. அப்பொழுது கடலில் அலைந்த சாதுவன், ஒடிந்த ஒரு மரத்துண்டைப் பற்றிக்கொண்டு கரையேறி, ஒரு மலைப்பக்கத்தை அடைந்தான். அது நாகர் என்னுஞ் சாதியார் வாழும் மலைப்பிரதேசமாகும்.

கடலிற் புரண்ட மற்றொரு சிலர், வேறொரு கப்பலில் ஏறி, காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தனர். அவர்கள் மூலம் கப்பல் கவிழ்ந்த செய்தியை அறிந்த ஆதிரை, தன் கணவன் திரும்பி வராமையால் இறந்திருத்தல் வேண்டும் என நினைந்து, மிகவும் துன்பமுற்று அழுது புலம்பினாள்

துயர் தாங்கமாட்டாது, 'என் கணவன் சென்ற வழியே யானுஞ் செல்வேன்' என முடிவுசெய்து, சுடுகாட்டை அடைந்து, ஒரு குழியிலே தீமூட்டி, அத் தீயுள் விழுந்தாள். ஆனால், அந்நெருப்பு அவளை எரிக்கவில்லை; குளிர்ந்த நீர்போல இருந்தது. அதுகண்டு "நான் தீயுஞ் சுடாத பாவியாயினேன், என்செய்வேன்," என ஏங்கும் பொழுது, "ஆதிரையே, உன் கணவன் நாகர் வாழும் மலைப்பக்கத்தை அடைந்து உயிரோடிருக்கிறான். இன்னும் சிலநாட்களுள் சந்திரதத்தன் என்னும் வணிகனுடைய கப்பல் மூலம் இங்கே வருவான். உன் மனத்துயரை ஒழி;" என, ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. இதனால், ஆதிரை மனக்கவலை ஒழிந்து, கணவன் வருகைக்காகப் பல அறங்களையுஞ் செய்துகொண்டு அவனை எதிர்பார்த்திருந்தாள்.

இஃது இங்ஙனமாக, மலைப்பக்கத்தை அடைந்த சாதுவன், களைப்பால் ஒரு மரத்தின் நிழலிற் படுத்திருந்தான். அப்பொழுது அங்கே சில நாகர்கள் தோன்றினார்கள். அவர்கள் ஆடையற்றவர்கள்; பயங்கர ரூபம் படைத்தவர்கள்; மனிதரை உண்பவர்கள். அவர்கள் சாதுவனைக் கண்டதும் 'இவனுடம்பு நமக்கு உணவாகும்', என்று கருதி அவனை எழுப்பினர்.

சாதுவன் எழுந்ததும் நாகர்கள் பேசும் மொழியிலேயே அவர்களோடு உரையாடினான். அவனும் தமது மொழியிலே உரையாடியதைக் கேட்டவுடனேயே அவனை ஒரு பெரு மகனாக

மதித்து, அவனை வணங்கி, தமது குருமகன் இருக்குமிடத்துக்கு வருமாறு வேண்டினர்; அவனும் அவர்களுடன் சென்றான். அங்கே கள்ளுக் காய்ச்சிய பானைகள், நிணங்கள், எலும்புகள் என்பன குவிக்கப்பட்ட குவியலின் மீது இடப்பட்டிருந்த ஓர் இருக்கையில் நாகர்களது தலைவன் வீற்றிருந்தான். அவனது பக்கத்திலே அவன் மனைவியுங் காணப்பட்டாள். இந்நிலை, ஒரு கரடி தன் பெண் கரடியுடன் கூடி ஓரிடத்தே இருப்பது போலக் காணப்பட்டது. நாகர்தலைவனைக் கண்ட சாதுவன் அவனுடன் இனிய மொழிகள் பேசி, அவனைத் தன்வசமாக்கிக்கொண்டான்.

நாகர்தலைவன், சாதுவன் ஆங்கு வந்த வரலாற்றை யறிந்து, தன் ஏவலாளரை அழைத்து, ''இவனுக்குக் கள்ளும் ஊனும் கொடுங்கள்;'' எனக் கட்டளையிட்டான். இவற்றைக் கேட்ட சாதுவன், தன் இரு செவிகளையும் பொத்திக் கொண்டு, ''தனக்கு அவை வேண்டுவதில்லை,'' எனக் கூறினன்.

சாதுவன் கூறியவற்றைக் கேட்டு ஆச்சரிய முற்ற நாகர் தலைவன், ''நீ ஏன் இவைகளை வெறுக்கின்றாய்; இவைகளிலும் பார்க்க இன்பந் தரத்தக்கன யாவை? இருக்குமாயின் அவற்றை எங்களுக்குக் கூறுவாயாக'', எனக் கூறினன்.

''பிறந்தவர் இறப்பர்; இறந்தவர் பிறப்பர்; இறப்பும் பிறப்பும் உறங்குதலும் விழித்தலும் போன்றன. அறஞ்செய்வோர் மோட்சமடைவர்.

பாவம் செய்வோர் நரகம் அடைவர். கள்ளுண்ணலும் உயிர்களைக் கொல்லுதலும் பாவங்களாகும். அப் பாவங்களைச் செய்யின் நரகம் அடைதல் வேண்டும்.'' என்று, சாதுவன் நாகர் தலைவனுக்கு விடையளித்தான். அப்பொழுது நாகர் தலைவன், சாதுவனை நோக்கிப் புன்னகை புரிந்து இன்முகங் காட்ட, அவர்களுக்கிடையே பின்வரும் உரையாடல் நிகழலாயிற்று.

**நாகர் தலைவன் :** உடம்பை விட்டு உயிர் நீங்கும் போது வேறிடம் புகும் என்று கூறினை; அவ்வுயிர் எவ்வாறு வேறிடம் செல்லும்?

**சாதுவன் :** நமது உடம்பில் உயிர் இருக்கின்ற காலத்தில் யாதேனும் துன்பம் வந்தால் உடலால் அதனை உணரல் முடிகிறது. உயிர் நீங்கிய பின் உடலை நெருப்பில் இட்டாலும், உடல் அதனை உணர்வதில்லை. இதனால், உடலிலிருந்து ஏதோ ஒன்று நீங்கிவிட்டது என்பது புலனாகிறது. அவ்வாறு போகிற உயிர் புகுவதற்கு ஓரிடம் வேண்டுமல்லவா? நாம் இரவிற் கனவு காணும்போது, நம் உடல் இருந்த இடத்திலேயே இருக்க, உயிர் வேறோர் இடத்துக்குச் செல்வதை உணருகின்றோம். இதிலிருந்து உடம்பை விட்டுப் பிரிந்த உயிர், மற்றொரு யாக்கையை அடைகின்றதென்பதை உணரலாம்.

நாகர் தலைவன், சாதுவனுடன் செய்த சம்பாஷணையின் மூலம் உண்மையை உணர்ந்து கள்ளையும் ஊனையும், தான் விட்டு உயிர் வாழ்வதற்கு வழி ஒன்று கூறுமாறு சாதுவனைக் கேட்டான்.

சாதுவன், உடைந்த கப்பலிலிருந்து யாராவது வந்தால், அவர்களைக் கொல்லல் கூடாது என்றும், முதுமையுற்றுத் தாமே இறக்கும் உயிர்களின் உடம்பைத்தவிர வேறெதையுங் கொல்லல் கூடாது என்றுங் கூற, நாகர்தலைவன் அதனை ஒப்புக்கொண்டு அங்ஙனமே செய்வதாக வாக்களித்தான்.

கலங் கவிழப்பெற்றமையால் அம் மலைப்பக் கத்தை யடைந்த மனிதர்களைக் கொன்று, அவர்களிடமிருந்து அதுவரை கவர்ந்த செல்வங் களையும் ஆடை ஆபரணங்களையும் நாகர்தலைவன் சாதுவனுக்குக் காட்டி விரும்பியவற்றை எடுத் துச் செல்லுமாறு கூறினன். அவன் அவ்வாறே எடுத்துக்கொண்டு சந்திரதத்தன் என்பவ னுடைய கப்பலில் ஏறிச் சென்று காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்தான். கணவன் வருகை யைக் கண்ட ஆதிரை கழிபேருவகையோடு அவனை வரவேற்று அவனோடு கூடி பல அறங் களையுஞ் செய்து வாழ்ந்திருக்கின்றாள்; என, இவ்வாறு ஆதிரையின் மேம்பாட்டைக் காய சண்டிகை மூலம் அறிந்த மணிமேகலை, அவளிடம் முதன்முதற் பிச்சை ஏற்க விரும்பி, அவள் மனையிற் சென்று வாய்பேசாமற் சித்திரம்போல நின்றாள். நின்றவுடன், ஆதிரை அவளைத் தொழுது, ''பாரக மடங்கலும் பசிப்பிணி அறுக'' என, வாழ்த்துரை கூறிக்கொண்டு அமுதசுரபி நிறையும்படியாக ஆருயிர் மருந்தான உணவை இட்டனள்.

## 14. காயசண்டிகையின் வரலாறு

ஆதிரை அமுதசுரபியில் உணவை இடலும், தருமவழியாற் சம்பாதிக்கப்பட்ட பொருள் கொண்டு செய்யப்படும் தருமம், கணந்தோறும் வளர்ந்துகொண்டேயிருப்பது போல, அது எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்து வளர்ந்து, வந்தோருடைய பசியை நீக்கிற்று.

மணிமேகலையிடமிருந்து முதன்முதல் உணவு பெற்றவள் காயசண்டிகையென்னும் வித்தியாதரப் பெண்ணுவாள். இவளே, ஆதிரையின் வரலாற்றை மணிமேகலைக்குக் கூறியவள். அவள் வித்தியாதர உலகிலுள்ள காஞ்சனபுரத்தில் வசித்தவள். இவள் பொதியமலையின் வளங்களைக் காண விரும்பி, கணவனுடன் புறப்பட்டுச் செல்லும்போது இடையே காட்டாறு ஒன்று தென்பட்டது. அதன் கரையில் அவ்விருவருஞ் சிறிது நேரம் தங்கியிருந்தனர். அப்பொழுது விருச்சிகன் என்னும் முனிவன் ஒருவன், பனம்பழமளவு பருமனுடைய நாவற்கனியொன்றை ஒரு தேக்கிலையிலே வைத்துவிட்டு நீராடச் சென்றுன். நீராடியபின்னர் முனிவன் அக் கனியை உண்ண எண்ணினுன். அம் முனிவன் பன்னிரண்டு வருடம் உபவாசமிருந்து உண்பது வழக்கம். தேக்கிலையிலே வைக்கப்பட்ட அக் கனி, தெய்வத்தன்மை வாய்ந்தது; பன்னிரண்டு வருடத்துக்கொருமுறை ஒரு கனியைத் தருவதாகிய ஒரு நாவல் மரத்திலே உண்டானது. அக் கனியை உண்போர்

பன்னிரண்டு வருடம் பசியொழிந்திருப்பர். முனிவன் தேக்கிலையில் வைத்துச்சென்ற கனியைக் காயசண்டிகை தன் காலாலே தட்டி அதனைச் சிதைத்தாள். நீராடி, பசியுடன் மீண்ட விருச்சிகன், அக் கனி காயசண்டிகையாற் சிதைக்கப்பட்டிருத்தலை அறிந்து, அக் கனியை உண்ணுமையால் மறுபடியும் அதுபோன்ற ஒரு கனியை உண்ண தான் மேலும் பன்னிரண்டு வருடம் பசியுடன் இருத்தல் வேண்டுமே என்ற வருத்தம் எழ, கோபம் மிகுந்து, ''யானைத்தீ என்னும் நோயாற் பன்னிரண்டு வருடம் தீராப் பசி கொண்டு வருந்தி, அடுத்தமுறை யான் இது போன்ற ஒரு கனியை உண்ணுந் தினத்தில் உன் பசி நீங்குவதாக,'' என, காயசண்டிகைக்குச் சாபமிட்டு அகன்றனன்.

விருச்சிகமுனிவனது சாபத்தால், பெரும்பசியாகிய யானைத்தீ என்னும் வியாதியாற் பீடிக்கப்பட்ட காயசண்டிகைக்கு, அவள் கணவன் சிறந்த கனிகள், கிழங்குகள், காய்கள் முதலியவற்றை நிரம்பக் கொண்டுவந்து கொடுத்தும் அவள் பசி நீங்கவில்லை. அத்துடன் ஆகாய மார்க்கமாகச் செல்வதற்குரிய மந்திரத்தையும் அவளால் நினைவு கொள்ள முடியவில்லை. அதனால் வருந்திய அவள் கணவன், ''இத் தமிழ் நாட்டில் ஆற்றுத மக்களுக்கு அருந்துணைவர்களாகிய பெருஞ் செல்வர்கள் வாழும் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்து அங்கே இருப்பாயாக,'' என்று காயசண்டிகைக்குக் கூறி, அவளை விட்டுச் சென்றான். அவன் வருடம் ஒருமுறை இந்திரவிழா நிகழுங்காலத்து, காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்து அவளைச்

சந்தித்து, துயருடன் பிரிவான். அத்தகைய காயசண்டிகை மணிமேகலையிடமிருந்து உணவு பெற்று உண்டதும் அவளது பெரும் பசிநோய் நீங்கிற்று.

யானைத்தீ என்னும் பெரும் பசிநோய் நீங்கப் பெற்ற காயசண்டிகை ஒருபொழுதும் நீங்காத தாகிய கொடிய பசிநோயை நீக்கிய மணி மேகலையை வணங்கி, ''இந்நகரில் முனிவர்கள் பலர் இருக்கும் சக்கரவாளக்கோட்டம் என்னும் ஓர் இடம் உண்டு. அதில் எவரும் எந்நேரமும் வந்து புகுவதற்கு வசதியாக எப்பொழுதும் திறக்கப்பட்ட கதவுள்ள உலக அறவி என்னும் பெயருடைய அம்பலம் ஒன்று உளது. அவ் விடத்துப் பசியால் வருந்தியவர்களும் தம்மைப் பாதுகாப்பார் எவருமில்லாதவராகிக் கொடிய பிணிவசப்பட்டோரும் கொடுப்பவர்களை எதிர் பார்த்துக் கூடியிருப்பர். ஆதலால், அங்கே சென்று அவர்கள் பசியைத் தீர்ப்பாயாக,'' என்று சொல்லிவிட்டுத் தன்னூருக்குப் போயினள்.

மணிமேகலை, வீதியின் ஒரு பக்கத்தே ஓதுங்கிச் சென்று, உலக அறவியை அடைந்து, மூன்று முறை வலம் வந்து பணிந்து, அவ்வறவியி லுள்ள தெய்வமாகிய சம்பாபதியென்னும் தெய் வத்தையும் கந்திற்பாவையென்னுந் தெய்வப் பாவையையும் வணங்கி ஆங்குள்ளாரை நோக்கி, ''இப்பாத்திரம் ஆபுத்திரனுக் குரிமையாயிருந்த அமுதசுரபி. உண்ணுதற்கு விருப்பமுள்ளோர் யாவரும் வருக,'' என்று கூறினாள். அதுகேட்டுப் பலரும் வந்து உண்பாராயினர். இதனால் அங்கே ஒலி மிகுந்தது.

# 15. மணிமேகலையும் உதயகுமாரனும்

மணிமேகலை பிக்குணிக்கோலம் பூண்டு, பாத்திரம் ஏந்தி, பிச்சை ஏற்று உலக அறவி புகுந்தாள் என்பதை அறிந்த சித்திராபதி மனங் கொதித்துக் கடுஞ்சினங் கொண்டாள்; வெய் துயிர்த்துக் கலங்கினள். ''நாம் கணவரிறப்பின் அவருடன் உடன்கட்டை ஏறும் பத்தினிப்பெண் டிரல்லோம். யாழை மீட்டி இன்பமனுபவிக்கும் பாணன் இறந்துபடின் அவனுடன் சேர்ந்து இறந்துபோகாத யாழைப் போல்வோம். கோவலன் இறந்தது கேட்டு, தவச்சாலையை அடைந்து தாபதக்கோலம் பூண்ட மாதவியின் செயல் நகைப்புக்குரியது. ஆகையால், மணி மேகலை தவக்கோலங் கொள்வது நமது குல ஒழுக்கத்திற் கொவ்வாதது. மாதவி மகள் மணி மேகலை கொண்ட பிக்குணிக்கோலத்தை மாற்றி, அவளைப் பல நாளாக விரும்பிக்கொண்டிருக்கும் உதயகுமாரனால் அவளை அவனது தேரில் ஏற்று வித்துக்கொண்டு வருவேன். அங்ஙனஞ் செய்யே னயின் இனி நான், நாடகக் கணிகையர் சூழலுக்குச் செல்லேன் ஆகுக,'' எனச் சபதங் கூறி, உதயகுமாரனுடைய அரண்மனையை அடைந்தாள். அடைந்து, ''வீரமிக்க இள வரசனே, நீ நீடுவாழ்வாயாக; மணிமேகலை இப் பொழுது நகர்ப்புறத்திலுள்ள உலக அறவியில் இருக்கிறாள். நீ அவளை உன்னுடன் இட்டுக்

கொண்டு வரல்வேண்டும் என்பது என் விருப்பம்,'' என உதயகுமாரனிடங் கூறினள்.

உதயகுமாரன் முன்னர் உவவனத்தில் சுதமதியுடன் சென்ற மணிமேகலையைக் கண்டு அவளைப் பெறமுடியாது மீண்டபோது, ஒரு தெய்வமாது அவன்முன் தோன்றி, அவள் தூய்மையை அவனுக்கு அறிவுறுத்தியது. அந்நினைவு அவனுக்கு அப்பொழுது உண்டாக அதனைச் சித்திராபதிக்குக் கூறினன்.

சித்திராபதி, ''அவற்றை நீ பொருட்படுத்தாதே'' என ஊக்க, உதயகுமாரன் தேரிலேறி, உலக அறவியை அடைந்தான். அவ்விடத்துக் குரியதோர் தெய்வமோ எனும்படி, வியக்கத் தக்க எழிலுடன் மணிமேகலை அவன்முன் தோன்றி, கையிலுள்ள அமுதசுரபியின் உதவியால் அவளைச் சூழ்ந்து நின்ற ஏழைகளுக்கு உணவிடத் தொடங்கினள். அப்பொழுது உதயகுமாரன் மணிமேகலையை அணுகி, ''நீ தவக் கோலங் கொண்ட தெதன்பொருட்டு?'' என, வினவினன்.

'உதயகுமாரனே முற்பிறப்பில் இராகுலன் என்னும் பெயருடன் தன் கணவனுயிருந்தவன்' என்னும் எண்ணம், மணிமேகலையின் மனத்தே தோன்ற, அதன்பொருட்டு அவனை வணங்குதல் முறையாகும் என எண்ணி, மணிமேகலை அவனை வணங்கினள். வணங்கி, ''இந்த உடம்பு துன்பத்தின் இருப்பிடம்; துன்பத்துடனேயே பிறந்தது;

நோயாலும் முதுமையாலும் துன்புற்றுத் துன்பத்திலேயே அழிகிறது. இதனை உணர்ந்து துறவுவாழ்வை மேற்கொண்டேன். வீரமிக்க இளவரசராகிய தங்களுக்கு, இதற்குமேல் நான் என்ன கூறல்முடியும். என் சொற்களில் மெய்ம்மை கண்டீராஜல் அதன்பின் உம் மனம் விரும்பும் வழியைக் கடைப்பிடிப்பீராக'' என்று கூறி, தன் வடிவை மாற்றுதலே அதன்மேற் செய்யத்தக்கதென எண்ணி, அவ்விடம் விட்டுக் கோயிலினுள்ளே சென்றாள். அங்கே, சம்பா பதியை வணங்கி, முன்பு மணிபல்லவத்தில் மணி மேகலா தெய்வம் உபதேசித்த மந்திரத்தைச் செபித்து, காயசண்டிகையின் வடிவத்தை அடைந்து அமுதசுரபியுடன் வெளியே வந்து நின்றாள்.

மணிமேகலையே அவ்வாறு வந்தாள், என்பதை உதயகுமாரன் அறிந்திலன். 'மணி மேகலை தன் கையிலுள்ள பிச்சைப் பாத் திரத்தைக் காயசண்டிகையிடம் கொடுத்து விட்டு, சம்பாபதி கோயிலுள் ஒளித்துக் கொண்டாள்,' என்று நினைந்து, சம்பாபதியை வணங்கி, ''இங்குள்ள பாவைகளுடன் தானும் ஒரு பாவையாக ஒளித்துக்கொண்டிருக்கும் மணி மேகலையை நீ எனக்குக் காட்டாயாயின், நான் இவ்விடத்திலேயே பழி கிடப்பேன்'' என்று சபதங் கூறினான்.

# 16. சிறைச்சாலை அறச்சாலையானது

உதயகுமாரன் மேற்கூறியவாறு சம்பாபதி கோயிலிற் சபதஞ் செய்தவுடன் அக் கோயிலி லுள்ள சித்திரங்களுள் ஒன்று, அவன் கேட்கும் படி பின்வருமாறு கூறிற்று.

''நீ, எம்பெருமாட்டியாகிய சம்பாபதித் தெய்வத்தின் முன் ஆராய்ந்துபாராமற் சூளுரைத்தனை; இங்ஙனங் கூறியதில் யாதொரு பயனுமில்லை.'' இவ்வாறு கூறிய வார்த்தையைக் கேட்ட உதயகுமாரன், மனங்கலங்கி மணி மேகலையைப் பெறுதற்குத் தான் வேறு என்ன செய்யமுடியும் என்பது விளங்காமையால் மனஞ் சோர்வுற்றான். அப்பொழுது பொழுது சாய்ந்து விட்டது; வர வர இருள் அடர்ந்துகொண்டிருந் தது; உதயகுமாரன் அவ்விடத்தை விட்டகன் றான்.

'என் சுயவடிவத்தோடு திரிந்தால் உதய குமாரன் என்னை விட்டு நீங்கான்; ஆதலால், காயசண்டிகை வடிவுடன் இருத்தலே நன்று' என, மணிமேகலை எண்ணி அவ்வடிவுடன், பசித்துவந்த யாவருக்கும் உணவளித்து வந்தாள். ஒருநாள் அவள் அந்நகரிலுள்ள சிறைச்சாலையிற் புகுந்து ஆங்குச் சிறையிருந்தோருள் பசியால் வருந்துவோரை அருளுடன் நோக்கி, இனிய மொழிகள் கூறி, உணவளிப்பாளாயினள். அதனைக் கண்ட காவலாளர் ஒரு பாத்திரத்தி

லிருந்தே பலருக்கு உணவளிக்கும் ஆச்சரியத்தைக் கண்டு வியப்புற்று, அந் நிகழ்ச்சியைத் தம் அரசனுக்குத் தெரிவிப்பது கடனெனக் கருதி அரசனது அரண்மனைக்குச் சென்றனர்.

சோழ அரசனாகிய கிள்ளிவளவன் அச்சமயம் தன் அரசியாகிய சீர்த்தி என்பவளுடன் பூங்காவில் உலாவச் சென்றிருந்தான். அரசன் மனைவியாகிய சீர்த்தி, மாவலி மரபில் வந்த அரசனின் புதல்வி. அரச தம்பதிகள் அப் பூங்காவின் வனப்பு மிக்க காட்சிகளில் ஈடுபட்டு மகிழ்ந்திருந்தனர்.

குளிர்ந்த நறுமணமிக்க தடாகமொன்றின் புல்லுத்தளத்தின் மீது ஒரு மயில் ஒய்யாரமாகத் தன் தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தது; குயில்கள் கூவிக்கொண்டிருந்தன ; தேனீக்கள் மேலே வளைந்தளாவிய கொம்புகளிற் பொம்மென்றிரைந்தன ; அடர்ந்த கொடிப்பந்தரொன்றில் ஒரு கொடியிலே பெண்மந்தி ஊசலாட, கடுவன் அக் கொடியை ஆட்டிக்கொண்டிருந்தது. இதனைப் பார்த்த அரசனும் அரசியும், 'கல கல' எனச் சிரித்தனர். அச் சிரிப்பொலி அப்பூங்கா எங்கும் எதிரொலித்தது.

அரசனும் அரசியும் செய்குன்றுகளில் ஏறி, அவற்றிலுள்ள செயற்கை அருவிகளைப் பார்வையிட்டனர் ; குளிர்மிகுந்த முழைகள், நீரூற்றுக்கள் ஆகியவற்றினூடே சென்று மெல்லென வீசும் தென்றலின் அணைப்பிலே பூங்காக்கள் தோறும் உலாவினார்கள். இவ்வாறு பூங்காக்கள் தோறும் உலாவிக் களைப்புற்றவராய். தம் அரண்

மனையை அடைந்தனர். அரசன் தன் அத்தாணி மண்டபத்தை அடைந்தான். அரசனைக் காண்பதற்காகக் காத்துக்கொண்டிருந்த சிறைக் காவலர், தம் வரவை அரசனுக்குத் தெரிவித்தனர். அரசனது விருப்பப்படி சிறைக்காவலர் அத்தாணி மண்டபத்தை அடைந்து தாழ்ந்து தலைவணங்கி, "அரசே, வாழி; இந்நகரில் யானைத்தீ என்னும் நோயால் வருந்தி உடல் மெலிந்து அலைந்து திரிந்துகொண்டிருந்த ஒரு பெண், சிறைக்கோட்டத்தில் அவள் கையிலுள்ள ஒரு பாத்திரத்திலிருந்து உணவெடுத்து அளவற்ற மக்களை உண்பித்து வருகிறாள். இந்த அற்புதத்தை அறிவீராக," எனக் கூறி நின்றனர்.

சிறைக்காவலர் கூறியவற்றைக் கேட்ட அரசன், "அம் மங்கையை இங்கே அழைத்து வருக," எனக் கூறினான். உடனே அவர்கள் சென்று, மணிமேகலையை அழைத்துவந்து அரசன் திருமுன் விட்டனர். அரசன் அவளைப் பார்த்து, "தவத்தான் மிக்க பெண்ணே! நீ யார்? கையிலேந்திய பாத்திரம் உனக்கு எவ்வாறு கிடைத்தது?" என வினவ, அவள், "அரசே, அறம் என்றும் வாழ்வதாக. நான் ஒரு விஞ்சைய மகள். சிலகாலமாக இந்நகரில் வாழ்கின்றேன். அம்பலத்தேயுள்ள தெய்வமொன்று இதனை எனக்கு அருளியது. இது தெய்வத்தன்மை வாய்ந்த பாத்திரம்; யானைத்தீ என்னும் தீராப் பசியை இது தீர்த்தது. எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் இதனால் உணவளித்தல் முடியும்; அரசே, நீ நீடு வாழ்வாயாக" எனக் கூறினாள்.

மணிமேகலை கூறியவற்றைக் கேட்ட அரசன் ''யான் செய்யவேண்டியது யாது?'' எனக் கேட்க, அவள் நகர்ச் சிறைக்கூடம், அறக்கூடம் ஆக்கப்படல் வேண்டும்,'' என்று வேண்டினுள்.

அவள் விரும்பியவண்ணமே அரசன் சிறைச் சாலையை அழித்துத் தூய்மை செய்து பலவகைத் தருமங்களும் நிகழத்தக்க அறச்சாலையாக மாற்றினுன்.

அரசனுடைய கட்டளைப்படி சிறைச்சாலை பலவகைப் புண்ணியங்களும் நிகழும் அறச்சாலை யாக மாறிற்று. இச் செய்தியை உதயகுமாரன் அறிந்தான். மணிமேகலைமீது அவன்கொண்ட மோகம் இன்னும் மாறிவிடவில்லை. உலக அறவிக்கு வெளியே அவள் வரும்போது, அவளைக் கைப்பற்றி அவள் கற்ற வித்தைகளையும் இனிய மொழிகளையும் கேட்டு, அவளை அரண்மனைக்குக் கொண்டுவரல் வேண்டும் என, எண்ணிக் கொண்டிருந்தான். இதனுல், அவளிருக்கும் உலக அறவியை அடைந்தான்.

# 17. உதயகுமாரன் இறப்பு

பொதிய மலைச்சாரலிலுள்ள காட்டாற்றின் கரையில் விருச்சிகமுனிவனால் இடப்பட்ட சாபங் காரணமாகப் பன்னிரண்டு வருடங்கள் பெரும் பசியுற்றிருந்த காயசண்டிகையின் சாபம் நீங்குங் காலம் வந்துவிட்டதை அறிந்த அவள் கணவனாகிய காஞ்சனன் என்னும் வித்தியாதரன், ஆகாயமார்க்கமாகக் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தான். அங்கே பூஞ்சோலைகளிலும் முனிவர்கள் வாழும் தவச்சாலைகளிலும் அம்பலம், மன்றம் ஆகிய இடங்களிலும் தேடித் திரிந்தான். ஈற்றில், காயசண்டிகையின் உருவுடனிருந்த மணிமேகலையைக் கண்டு அவளையே தன் மனைவியாகிய காயசண்டிகையென எண்ணி அவளை அணுகி, அவளது நோய் அகன்றுவிட்டதா? என அவளை அன்புக்கனிவுடன் வினவினான். அவளது கையிலுள்ள பாத்திரத்தின்மூலம் பலருக்கு அவள் உணவளிக்கும் தன்மையைப் பார்த்து அப் பாத்திரம் அவளுக்கு எங்ஙனங் கிடைத்தது? என விசாரித்தான்.

மணிமேகலை அவனுடன் யாதும் பேசாது, அங்கே நின்ற உதயகுமாரனைக் கண்டு அவனுக்குச் சில அறிவுரைகள் புகன்றாள். இளமையின் நிலையாமையை அவனுக்கு அறிவுறுத்த விரும்பி ''அதோ அம்முதுமை வாய்ந்த அப் பெண்ணைப் பாரும்,'' என, ஒரு கிழவியைக் காட்டி, 'ஒருகாலத்தில் மேகம் போன்று கருமையாயிருந்த இவள் கூந்தல் இப்போது

நரைத்துவிட்டது ; பளபளப்புடனிருந்த இவளது நெற்றி இன்று சுருக்கம் பெற்றுக் காணப்படு கிறது. வில்லைப்போல வளைந்திருந்த இவளது புருவங்கள் இன்று செத்த நண்டின் கொடுக்குகள் போலக் காணப்படுகின்றன : செவ்வரி படர்ந் திருந்த அழகிய கண்கள் இப்போது பீளை தள்ளி ஒளி மங்கியுள்ளன. பவளம்போன்றிருந்த செவ் விதழ்கள் வெளிறி அழகிழந்துள்ளன. பெண்மை யின் அழகு இருந்தவாறு இது'' எனக் கூறி நின்றாள்.

இவ்வாறு இளவரசனின் எண்ணங்களை உலகப்பற்றுக்களிலிருந்து மாற்றி, உயிருக்கு உறுதி பயக்கும் மெய்ம்மைகளில் அவன் கருத் தைச் செலுத்துதற்கேற்ற விதமாக உரையாடி னாள். ஆனால் அவளைத் தொடர்ந்து காய சண்டிகையின் கணவன் வந்துகொண்டிருந்தான். பொறாமை அவனது உள்ளத்திலே சுடர்விட் டெரிந்துகொண்டிருந்தது. தன் மனைவி தன் னிடம் பராமுகமாய் இருந்தது மாத்திரமன்றி, இளவரசனுடன் உரையாடுவதையும் காண அவன் மனம் கொதித்தது. ஆகவே, அவள் செயலை மேலும் அவதானிக்க எண்ணி, மிக்க கோபங் கொண்டு புற்றில் இறங்கும் பாம்பைப் போல, அவ்வுலக அறவியினுள்ளே ஒளித்திருந் தான்.

மணிமேகலையே காயசண்டிகை உருக் கொண்டு பிச்சைப்பாத்திரம் ஏந்தி வந்தனள் என்பதை அறிந்த இளவரசன், ஊர் அடங்கிய பின்பு அவ்விடத்தே வந்து அவளியல்பை அறிய வேண்டுமென எண்ணியவனாய், அவ்விடம் விட்டகன்றான்.

நடுயாமம் ஆயிற்று; இளவரசன் தனியே புறப்பட்டு உலக அறவியுள் நுழைந்தான். இளவரசன் தன் திருமேனிமீது பூசிய நறுஞ்சாந்துகளின் இனிய மணம் அவனுக்கு முன்னதாக அவ்வறவியுள்ளே புகுந்து பரவிற்று. அவன் வரவையே எதிர்பார்த்துத் தீமைசெய்யக் கருதி ஒளித்திருந்த காஞ்சனன், தன் வாளை உருவி, இளவரசனை வெட்டி வீழ்த்தினன். பின்னர் காயசண்டிகையைக் கைப்பற்றிக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் செல்லலாமென அவன் எண்ணி, மணிமேகலையருகே செல்ல எழுந்தான். அப்பொழுது அங்கேயுள்ளசிலைகளில் ஒன்ருகிய கந்திற்பாவை, "காஞ்சன, உள்ளே நுழையாதே" என எச்சரித்து, "இவள் உன் மனைவியாகிய காயசண்டிகையல்லள்; மணிமேகலை கொண்ட வேற்று வடிவம் இது; உன் மனைவியாகிய காயசண்டிகை, நோய் நீங்கி ஆகாயவழியே செல்லுகையில் விந்தய மலையின் மேலாகச் செல்லுங்கால் அதனைக் காக்கும் விந்தகடிகையென்னும் காவற்றெய்வம் அவளைத் தன் வயிற்றுள் அடக்கிவிட்டது. துர்க்கா தேவி எழுந்தருளியிருக்கும் விந்தய மலைக்கு மேலாக யாருஞ் செல்லல்கூடாது. அதுவே காயசண்டிகை செய்த குற்றம் ஆகும். இப்பொழுது உதயகுமாரன் தன் பழவினைப்பயனால் உயிர் நீத்தானேனும் அவனைக் கொலை செய்ததனுல் நீ பெரும் பழி செய்திருக்கிருய். இது உன்னை விடாது; தொடர்ந்து வருத்தும்" எனக் கூறிற்று.

இச் சொற்களைக் கேட்ட காஞ்சனன் மனம் உடைந்தவனுய்த் தன் நகரத்துக்குச் சென்றுன்.

## 18. மணிமேகலையும் கந்திற்பாவையும்

இதற்குள் மணிமேகலை துயிலிலிருந்து விழித்துக் கொண்டாள்; காஞ்சனனது வரலாற்றையும் அவனால் உதயகுமாரன் வெட்டுண்டு வீழ்ந்தமையையும் கந்திற்பாவை கூறிய மொழிகளிலிருந்து அறிந்துகொண்டாள். உடனே கோயிலிலிருந்து வெளியேறித் தான் கொண்ட வேற்று வடிவத்தை மாற்றி உதயகுமாரன் இறந்து கிடந்த இடத்தை அடைந்தாள். அவன் இறந்து கிடந்த நிலைகண்டு புலம்பினாள். ''ஆ, என் அன்புக்குரியவரே, முற்பிறப்பில் நீர் திட்டிவிடமென்னும் பாம்பால் தீண்டப்பட்டு இறந்தபோது, உமது ஈமச்சிதையில் ஏறி யானும் உயிர் விட்டேன். பின்னர் இப்பிறப்பில் உம்மை உவவனத்திற் கண்டபோது என்மனம் உம்பால் ஈர்ப்புண்டது. அதை அறிந்த மணிமேகலா தெய்வம் என்னை மணிபல்லவத்திற்குக் கொண்டு சென்று புத்தபீடிகைத் தரிசனம் தந்தது. அப் பீடிகையின் காட்சியாற் பழம் பிறப்பை உணர்ந்தேன். இதனால் நீர் என் கணவனாக இருந்ததை அறிந்தேன். உமக்கு நல்லறிவு உண்டாக்கி அறவழியிலே திருப்பும் பொருட்டுக் காயசண்டிகையின் வடிவம் கொண்டேன். அந்தோ, இதனாற் காஞ்சனனது பொறாமைக் காளாகி வாளுக்கு இரையாகினீரே,'' என்று புலம்பி அவனருகிற் செல்லலானாள். அப்பொழுது

''நீ இவனிடத்திற் செல்லாதே; செல்லாதே; இள நங்கையே, இவன் உன் கணவனாகவும் நீ இவனுக்கு மனைவியாகவும் இருந்தது சென்ற பிறவியில் மட்டும் நிகழ்ந்ததன்று. அதற்கு முன்னரும் எத்தனையோ பிறவிகளில் நிகழ்ந்தன. பிறவித் துன்பத்தை ஒழிப்பதற்கு முயலும் அறிவினையுடையாய், இவன் இறந்ததற்காகத் துன்பம் அடையாதே,'' என ஓர் அசரீரி கேட்டது.

மணிமேகலை கந்திற்பாவையின் இத் தெய்வ வாக்கிற்குத் தலைவணங்கி ''அறிவிற் சிறந்த ஆவியே, இவ்வம்பலத்தில் யாவருக்கும் மெய்ம்மை சொல்லிக்கொண்டு எழுந்தருளியிருக்கும் தெய்வம் ஒன்று உண்டு என்கின்றனர். அது நீதானா? உன் திருவடியை வணங்குகின்றேன். சென்ற பிறப்பிற் றிட்டிவிடமென்னும் பாம்பாலும், இப்பிறப்பில் வித்தியாதரனுடைய வாளாலும் இவன் இறந்தமைக்குரிய காரணத்தை நீ அறிவாயா? அறிந்தால், துன்புறும் இந்த நெஞ்சத்துக்கு ஆறுதல் அளிக்கும்படி இதனைக் கூறுவாயா?'' என்று வினவினாள்.

கந்திற்பாவை கூறத் தொடங்கிற்று:

''சொல்லுகிறேன் கேள்: நங்கையே, உன் முற்பிறப்பிலே காயங்கரை என்னும் ஆற்றங்கரையிலிருந்து புத்ததேவனது அவதாரத்தைப் பற்றிக் கூறித் தருமோபதேசஞ் செய்துகொண்டிருந்த பிரமதரும முனிவரை, நீயும் உன் கணவனாயிருந்த இராகுலனும் அமுது செய்விக்க நினைத்தீர்; அக்கருத்தை அவருக்கு அறிவித்த போது அவரும் அதற்குடன்பட்டார். அதன்

பொருட்டு மறுநாள் விடியற்காலையில் உணவு ஆக்கும்படி உனது பரிசாரகனிடம் ஆணையிட்டிருந்தாய். ஆனால், அவன் யாது காரணத்தாலோ சிறிது காலந்தாழ்த்தி வந்தான். காலந்தாழ்த்தி வந்தமையால் அச்சங் கொண்டு, உணவுக் கலங்களின்மீது கால்தடுக்கி வீழ்ந்து அவற்றை உடைத்துவிட்டான். அவ்வாறு வீழ்ந்ததைக் கண்டும் அதற்காக இரங்காது, இராகுலன் அவனை வெட்டி வீழ்த்திவிட்டான். அப்பழியே அப்பிறப்பில் அவனைத் திட்டிவிடமென்னும் பாம்பால் இறக்கச் செய்ததுமன்றி, இப்பிறப்பிலும் இங்கு வெட்டுண்டு வீழச்செய்தது; உதயகுமாரன் இங்ஙனம் இறந்தமைக்குக் காரணம் இதுவே. வினை தன் பயனை ஊட்டாமல் விடாது; இது திண்ணம்.

"இனி, உனக்கு நடக்கவிருப்பதையுங் கூறுகிறேன் : தன் மகன் கொலை கேட்டு அரசன் உன்னைச் சிறையில் இடுவான். ஆனால், அரசியாகிய இராசமாதேவி உன்னைச் சிறையினின்றும் மீட்டுத் தன் காவலில் வைத்துக்கொள்ளுவாள். பின்னர் அறவணவடிகளுடைய சொல்லால் நீ சிறையினின்றும் நீங்கி, சாவக நாட்டிற்குப் போய் ஆபுத்திரனைக் கண்டு அவனுடன் மணிபல்லவத்தை அடைவாய். அவனும் தன் வரலாற்றைப் புத்தபீடிகையின் உதவியால் அறிந்து, தன் நாட்டை அடைவான். பின் நீ ஒரு துறவியின் வடிவங் கொண்டு வஞ்சிமாநகரம் அடைந்து ஆங்குள்ள சமயவாதிகளிடம் சமயக்கொள்கைகளைக் கேட்பாய். என் வரலாற்றையும் நீ அறிவாயாக : நான் தெய்வ கணத்துள் ஒருவன். என் பெயர் துவதிகன். மயனால் செய்யப்பட்ட

இவ் வடிவத்தில் நீங்காது உறைவேன்,'' என விளக்கமாகக் கூறியது.

தன் எதிர்கால நிகழ்ச்சியையும் கந்திற் பாவையின் வரலாற்றையும் அறிந்த மணிமேகலை, தன்னுடைய மரணம்வரை நிகழ விருப்பனவற்றையும் தெரிவித்தல் வேண்டும் என, கந்திற்பாவையை வேண்டினாள். அதற்கு அத் தெய்வம், ''நீ வஞ்சிநகரத்து இருக்கும்போது, காஞ்சி மாநகரத்து மழையின்மையால் அங்கு வாழும் உயிர்கள் பசியால் வருந்துதலையும் அறவணவடிகள், மாதவி, சுதமதி என்போர் நின் வரவை எதிர்பார்த்துக் காஞ்சி நகரத்திருப்பதையும் கேள்வியுற்று அந்நகரம் செல்வாய். அங்கே உன்னால் பல அற்புதங்கள் நிகழும். அப்பால் அறவணவடிகளைக் கண்டு தருமோபதேசம் பெறுவாய். பின்னர், உனது பிறவிகள் அனைத்தும் ஆண் பிறப்புக்களாகவே இருக்கும். அவ்வப் பிறவிகளிலெல்லாம் அறத்தினின்றும் வழுவாது ஒழுகி ஈற்றில் புத்ததேவனது முதல் மாணவனாய் நிருவாணமடைவாய்.

''உன்குலத்து முன்னோர்களின் கடற்றெய்வமாகிய மணிமேகலா தெய்வம், நீ சாதுசக்கர முனிவனுக்கு உணவு அளித்த புண்ணிய விசேடத்தால் உன்னை மணிபல்லவத்திற் கொண்டு சென்று புத்தபீடிகையைத் தரிசிக்கச் செய்தது,'' என்று கூறிற்று. இவற்றால் மணிமேகலை தன் கவலை நீங்கப்பெற்றாள். அப்பொழுது இரவு கழியச் சூரியன் உதயமாயிற்று.

# 19. மணிமேகலை சிறைப்பட்டமை

மறுநாட்காலை கந்திற்பாவையையும் சம்பாபதியையும் வழிபடக் கோயிலுக்கு வந்தவர்கள் உதயகுமாரன் வெட்டுண்டு இறந்து கிடத்தலைக் கண்டு, அதனைச் சக்கரவாளக் கோட்டத்திலுள்ள முனிவர்களுக்குத் தெரிவித்தனர். அவர்கள் மணிமேகலையை உசாவ, அவள் நிகழ்ந்தனவற்றை விபரமாகக் கூறினள். அவர்கள் உதயகுமாரனுடைய உடலை ஓரிடத்துப் பாதுகாப்பாக வைத்து, மணிமேகலையையும் ஓரிடத்து மறைத்துவிட்டு அரசனைக் காண அரண்மனைக்குச் சென்றனர். அங்கே தம்முடைய வரவை வாயில் காப்போர் மூலம் அரசனுக்குத் தெரிவித்தார்கள். பின்னர் உள்ளே போய் அரசனை அடைந்து அவனை வாழ்த்தினர். பின்னர் அவர்களுள் ஒரு முனிவர் கூறலானுர்: ''அரசே, இந்நகரிற் காமவிகாரத்தால் மயங்கி, பத்தினிப் பெண்டிரையும் தவமகளிரையும் விரும்பி அதனுல் ஒறுக்கப்பட்டு இறந்தோர் முற்காலத்தும் பலர் ஆவர். அரசர்களுடைய இருபத்தொரு தலைமுறையை வேரறுப்பதாகச் சபதம்பூண்டு அவ்வாறே செய்த பரசுராமன் அந்நாளில் இந்நகருக்கு வந்தபோது இந்நகரை யாண்ட காந்தமன் என்னும் அரசனைத் துர்க்காதேவி பார்த்து, 'நீ இப்பொழுது பரசுராமனுடன் போர்செய்தல் தக்கதன்று' எனக் கூறினள். அதனுல் அந் நகரைவிட்டு வேறிடஞ் செல்ல நினைத்த காந்தமன், இந் நகரைப் பாதுகாப்பதற்குத் தகுதியானவர் யாரென ஆராய்ந்

தான். தன் காதற் கணிகையின் புதல்வனும் வீரருள் வீரனுமாகிய ககந்தன் என்பவனே தகுதியானவன் என நிச்சயித்து, அவனுக்கு அரசுரிமையை நல்கி, 'யான் மீண்டு வருமளவும் இந் நகரை நீ பாதுகாப்பாயாக; நீ அரசனுயிருந்து இந் நகரையாளுவதால் இந் நகர்க்கு, காகந்தி என்ற பெயர் உண்டாகக் கடவது.' என்று கூறி வேற்று வடிவுடன் தான் விரும்பிய இடத்துக்குச் சென்றான்.

"ககந்தன் இந் நகரை ஆட்சிபுரிந்து வரும் போது, ககந்தனின் இளையபுதல்வன், காவிரி நதியில் நீராடிவிட்டுத் தனித்து வருபவளாகிய மருதி யென்னும் பார்ப்பனியைக் கண்டு அவள் மீது காம பரவசனாய் உரையாடலாயினன். அவள் மனங்கலங்கி 'இவ்வுலகிற் பத்தினிப் பெண்டிர் பிறர் நெஞ்சிற் புகார். நானே அந்நிய னுடைய நெஞ்சிற் புகுந்தேன். ஆதலால், இனி அந்தணன் செய்யும் யாகத்திற்கு உதவிசெய்யும் தகுதி எனக்கில்லை. இவ்வாறு ஏற்பட்டமைக்குக் காரணம் எதுவோ?' எனத் துன்பமுற்று, தன்னுடைய இல்லத்துக்குச் செல்லாது பூதசதுக்கம் என்னும் இடத்துக்குச் சென்றாள். சென்று, 'கற்பினின்று தவறும் மகளிரைப் பாசத்தாற் கட்டிக் கொன்று உண்ணும் சதுக்கப் பூதமே, யான் என் கணவனுக்கு யாதொரு தீமையும் மனத்தாலும் நினைத்தேனல்லேன். அங்ஙனமாக வும் மற்றொரு ஆடவனுடைய மனத்துட் புகுந் தேன். யான் செய்த தவறு எது? என்று எனக்கே புலப்படவில்லை. அந்நியனொருவனின் மனத்துட்

புகுந்த என்னை, நீ இன்னும் அறைந்துண்ணாதது ஏனோ?' என்று கூறி அழுதாள். அப்பொழுது சதுக்கப்பூதம் தோன்றி, 'நீ கணவனுக்கேற்ற பத்தினியாயினும் கோயில்களில் நிகழும் விழாக் களுக்குச் சென்று கடவுளை வழிபடும் நியமம் பூண்டுள்ளாய்; இதனால், அந்நியனுடைய மனத் தைச் சுடும் தன்மை உனக்கு இல்லாது போயிற்று. ஆயினும், கணவனுக்குத் தீங்கிழைக் கும் மகளிரைக் கட்டுவது போல என்னுடைய பாசம் உன்னைக் கட்டாது. குற்றஞ் செய்தவரை ஏழு நாட்களுக்குள் அரசன் தண்டித்தல் முறை. அவன் அக்கால எல்லைக்குள் அவனைத் தண்டியா தொழியின் அதன்பின் நான் தண்டிப்பேன். இனி வரும் ஏழு நாட்களுள் இச் செய்தியை அறிந்த ககந்தன் தீமைபுரிந்த அவனைத் தண்டிப்பான்' எனக் கூறிற்று. அவ்வாறே தீமைபுரிந்த ககந்த னின் புதல்வன் தன் தந்தையாகிய ககந்தனின் வாளினாலே கொல்லப்பட்டான்.

''அதுமாத்திரமன்று, முன்னர் இந்நகரிலே விசாகை யென்னும் பெயருடைய கன்னி ஒருத்தி இருந்தாள். அவளுடைய மாமன் மகனாகிய தருமதத்தன் என்னும் வணிகனுடன், விசாகை என்பவள் அன்பு பாராட்டி உரையாடிக்கொண் டிருந்தாள். அதனைக் கண்டோர், 'இவ்விருவரும் களவுமணம் செய்துள்ளனர்' எனப் பழித்துக் கூறினர். அதனைப் பொறுக்கமாட்டாத விசாகை, கந்திற்பாவையை அடைந்து, 'இந்தப் பழிச்சொல்லை ஒழிப்பாய்;' என வேண்டினாள்.

அப்பொழுது கந்திற்பாவை, 'நகரமக்களே, விசாகை யாதொரு குற்றமும் அற்றவள்;' என்று தனது தெய்வவாக்காற் கூறிற்று. அது கேட்டு ஊரார் அவளைப் புகழ்ந்து கூறினர்.

''கந்திற்பாவைத் தெய்வத்தாற் பழிச் சொல் நீங்கப்பெற்ற விசாகை வீதியில் வருகையில் ககந்தனது மூத்த புதல்வன் அவளிடத்து அதிக மோகங் கொண்டு தன் தலையிலணிந்த மாலையை எடுத்து, அவள் கழுத்தில் இடுதற்குத் துணிந்து தன் மாலையைத் தன் தலையிலிருந்து கழற்ற எண்ணித் தன் குடுமியிற் கையை வைத்தான். ஆயின், அவனது கை அவனது குடுமியை விட்டு நீங்காதாயிற்று. இதனைக்கண்ட பலர் 'விசாகையின் ஒழுக்க விசேடத்தால் அவன் கை இங்ஙனம் ஆயிற்று,' எனக் கூறக்கேட்ட ககந்தன், அவனையும் வாளால் வெட்டிக் கொன்றான்.

''தனதில்லமடைந்த விசாகை, 'மறுபிறப்பிலே தான், நான் மைத்துனனுக்கு மாலை சூட்டுவேன். இப்பிறப்பிற் கன்னிமாடம் புகுந்து தவஞ் செய்வேன்,' எனத் தன் நற்றாய்க்குக் கூறித் தவஞ்செய்யப் புகுந்தாள்.

''தருமதத்தனும் தன் பழியைப் போக்கிய கந்திற்பாவையை வணங்கிக் காவிரிப்பூம்பட்டினத்தை நீங்கி தென்மதுரையை அடைந்து, 'இப் பிறப்பு இங்ஙனம் ஒழிவதாக' என்று கூறி, வாணிகஞ் செய்யத் தொடங்கினான். இவ்வாறு வாணிகத்தாற் பெரும் பொருள் திரட்டி, எட்டி

முதலிய பல பட்டங்களைப் பெற்று அறுபதாம் வயதுவரை தென்மதுரையிலேயே தங்கினன், ஆண்டுறைந்த அவனை ஓரந்தணன் அடைந்து, 'மனைவியில்லாதவர்கள் தருமஞ் செய்யின் அத் தருமம் பயனுடையதாகாது. ஆகையால், நீ உன் நகருக்குச் செல்வாயாக' என்று கூறினன்.

"தருமதத்தன் தன் பெரும் பொருளுடன் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தான். இதனைத் தலைநரைத்து முதுமையடைந்த விசாகையறிந்து, அவனை அடைந்து, 'இப்பிறப்பில் யானுன்னை அடையேன். மறுபிறப்பில் உன்னை மணப்பது திண்ணம். இளமையும் யாக்கையும் நில்லா. ஆதலாலே, தானம் செய்க,' எனக் கூறினள். தருமதத்தன் தான் ஈட்டிய பொருளைக் கொண்டு நல்லறங்கள் பலவற்றைச் செய்தான்" என, முனிவர்கள் கூறியதைக் கேட்டு, கிள்ளிவளவன், "இதை நீவிர் கூறியதேன்?" என வினவினன். அம் முனிவர்களுள் ஒருவர், "தன் கணவனாகிய கோவலன் கொலையுண்டதைச் சகிக்கமாட்டாத மாதவி உலகவாழ்வை வெறுத்து முனிவர்கள் வாழும் தவச்சாலையை அடைந்தாள். அவள் புதல்வியாகிய மணிமேகலை இளம்பருவத்திலேயே உலகப்பற்றைத் துறந்து துறவியாயினள். அவளை அடைய விரும்பிய உதயகுமாரன் அவளைத் தொடர, அவள் தன்னுரு விட்டுக் காயசண்டிகை உருப்பூண்டாள். காயசண்டிகையை அழைத்துச் செல்வதற்கு அங்கே வந்து காத்திருந்த காஞ்சனன் என்னும் வித்தியாதரன் அங்கே வந்த உதயகுமாரனை தன் மனைவியின் மீது காமுற்று வந்தானென எண்ணிக் கோப

முற்றுத் தன் வளால் வெட்டி வீழ்த்தினன்'' எனச் சொன்னர்.

அரசன் தன் மகன் இறந்ததற்குச் சிறிதும் வருந்தாமல், தன் மந்திரிகளிலொருவனைப் பார்த்து ''தன் மகனைப் பூமியிலே கிடத்தி, அவன்மீது தேர்க்காலை விட்டு முறைசெய்த அரசனது பரம்பரையில் ஒரு தீவினையாளன் பிறந்தான்' என்பதை மற்றைய அரசர்கள் அறியுமுன் அவனுடலைப் புறங்காடடைவியுங்கள்; மணிமேகலையையுஞ் சிறைப்படுத்துங்கள்'' என்றுன்; மந்திரி அவ்வாறே செய்தான்.

## 20. மணிமேகலையும் இராசமாதேவியும்

கிள்ளிவளவனின் மனைவியாகிய இராசமா தேவி, உதயகுமாரன் இறப்பால் ஏற்பட்ட புத்திர சோகங் காரணமாக, ஆற்றமுடியாத மனக்கலக்கங்கொண்டிருந்தாள். அவளுடைய துன்பத்தைக் கண்டு மனம் வருந்திய கிள்ளிவள வன், அவள் துயரத்தை நீக்குமாறு வாசந்தவை என்னும் முதியவளை இராசமாதேவியிடம் அனுப் பினான்.

வாசந்தவை இராசமாதேவியிடம் சென்று, அவளுடைய வருத்தம் நீங்குமாறு பல ஆறுதல் மொழிகளைக் கூறினாள். அவளுடைய மொழி களால் இராசமாதேவி, புறத்தே தன்னுடைய வருத்தம் நீங்கியவளைப்போன்று காணப்பட்டா ளாயினும் உதயகுமாரனின் இறப்புக்குக்காரணள் ஆகிய மணிமேகலை மீது வஞ்சந்தீர்க்கும் மனக் கொதிப்புடையவளா யிருந்தாள். அதனால், அவள் அரசனை அடைந்து ''பிக்குணியாகிய மணிமேகலைக்குச் சிறை தகுதியன்று,'' எனக் கூறினாள். ''உன் கருத்து அதுவாயின் அவளைச் சிறையினின்றும் விடுவி.'' என, அரசன் இராசமா தேவியிடம் தெரிவித்தான்.

இராசமாதேவி, மணிமேகலையைச் சிறையி னின்றும் விடுவித்து அழைத்துக்கொண்டு அரண் மனையை அடைந்தாள். அடைந்து அவளுக்கு

மயக்கும் மருந்தைக் கொடுத்து அவளைப் பைத்தியம் கொண்டவளாகச் செய்யக் கருதி அவளுக்கு மருந்தை ஊட்டினள். ஆனால், மணிமேகலை மறு பிறப்புக்களை அறிந்திருந்தமையினால் அம் மருந்து அவளுக்கு எவ்வித மாற்றத்தையுங் கொடுக்க வில்லை. இதனைக்கண்ட இராசமாதேவி மனங் கவன்று, ஓர் இளைஞனை அழைத்து ''இவளை அவமானப்படுத்தி உன்னை இவள் விரும்பியதாகப் பலருக்குஞ் சொல்லு,'' எனக் கூறி, அதன் பொருட்டு பொற்காசுகள் பலவற்றை அவனிடங் கொடுத்தாள். அவ் விளைஞன் அதற்குடன்பட்டு மணிமேகலை இருந்த இடத்தை நோக்கிச் சென்றான்.

இளைஞன் தன்னை நோக்கி வருவது இராசமாதேவியின் வஞ்சனையான ஏவுதலின் பொருட்டே. என எண்ணிய மணிமேகலை வேற்றுருவடையும் மந்திரத்தை உச்சரித்து ஆண்வேடம் பூண்டு அங்கே யிருந்தாள்.

தீயநோக்கத்துடன் மணிமேகலை யிருந்த இடத்தை அடைந்த இளைஞன், அங்கே ஓர் ஆண் இருத்தலைக் கண்டு, 'இது இராசமாதேவியின் சூழ்ச்சியோ', எனப் பயந்து அவ்விடத்தைவிட்டு ஓடிப்போய் விட்டான். இதனை அறிந்த இராசமா தேவி, 'இனி, இவளை உயிரோடு விடேன்' எனத் துணிந்து ''மணிமேகலையை ஏதோ நோய் பீடித்துவிட்டது,'. என்று பிறர்க்குக் கூறி, அவளை ஓர் அறையில் அடைத்து உணவு முதலி யன யாதொன்றுங் கொடாது விட்டாள்.

மணிமேகலை உணவின்றி வாழும் மந்திரத்தை அறிந்தவளாதலின் அம் மந்திரத்தின் உதவியால் யாதும் வாட்டமின்றி அவ்வறையில் இருந்தாள்.

மணிமேகலையின் இவ்வியல்பைக்கண்ட இராசமாதேவி, ஆச்சரியப்பட்டு நடுநடுங்கி நல்லறிவு வரப்பெற்று, அவளை நோக்கி, ''மகனை இழந்த துன்பத்தைப் பொறுக்கமாட்டாது இத் தீங்குகளைச் செய்தேன். நீ இவற்றைப் பொறுத்தருளல் வேண்டும்,'' என்று வேண்டினாள். அப்பொழுது மணிமேகலை, ''நீ முந்திய பிறப்பில் அரசி நீலபதியாயிருந்தாய். அப்பிறப்பில் உன் மகனுயிருந்த இராகுலனே முன்பிறப்பில் என் கணவனுயிருந்தான். முந்திய பிறப்பில் என் கணவனுயிருந்த இராகுலன் என்பவனே, இப் பிறப்பில் உன் வயிற்றில் உதயகுமாரனுகத் தோன்றினுன். இத் தொடர்பினுல், நான் துன்பமுற்றும் உன்னை நல்வழிப்படுத்தல் வேண்டும் என்னும் எண்ணத்தினுல், ஆகாயவழியே செல்லும் ஆற்றலை நான் பெற்றிருந்தும் அங்ஙனம் செய்யாது, நீ செய்த தீவினைகளைப் பொறுத்திருந்தேன். நீ மருந்தினுல் என்னைப் பைத்தியமாக்க எண்ணினுய். நான் முற்பிறப்புணர்ந்தவளாதலின் அறிவு மயங்காதிருந்தேன். உன் ஏவலினுல் என்னை அடைந்த இளைஞன்முன் மந்திரவலியால் ஆணுருக்கொண்டேன். நோயற்ற என்னை நோயுடையள் எனக்கூறி அறையில் அடைத்து உணவு தாராது விட்டாய். நான் ஊணின்றி வாழும் மந்திர வலியின் சக்தியால் அதனின்றுந் தப்பினேன்.

"முந்திய பிறப்பில் என் கணவனுயிருந்த இராகுலன், மடைத்தொழில் செய்த தன் சமயற்காரனை வாளால் வெட்டினுன். அதனுல், அவனை அப் பிறப்பில் திட்டிவிடம் என்னும் பாம்பு தீண்டிற்று. அதனுல், உயிரிழந்த இராகுலன் பொருட்டு வருந்தினேன்; எனது உயிரையும் விட்டேன். இப் பிறப்பிலும் அவனது முன்பழி தொடர்ந்தமையால் வித்தியாதரனுற் கொலையுண்ண நேர்ந்தது. இவையெல்லாவற்றையும் நான் புத்தபீடிகைத் தரிசனத்தால் அறிந்தேன்" என, உவவனம் சென்றது முதல் அன்றுகாறும் நிகழ்ந்தன அனைத்தையும் விளக்கிக் கூறினுள். பின்னர் இவ்வுலகத்தோருக்குத் துன்பந் தரும் பொய், கொலை, களவு, கள், காமம் என்னும் பஞ்சமாபாதகங்களை விட்டோரே ஒழுக்கமுடையோர், என்னும் உண்மையையுங் கூறினுள்.

மணிமேகலை கூறிய நல்லுபதேசங்களால் மனத்தெளிவடைந்த இராசமாதேவி, மணிமேகலையை வணங்கினுள். அதனைப் பொருத மணிமேகலை "நீ என் கணவனைப் பெற்ற தாய்; அன்றி இவ் வுலகனைத்தையும் புரக்கும் அரசனின் பெருந்தேவி; ஆகையால், என்னை வணங்குதல் தகுதியன்று;" என்று கூறி, இராசமாதேவியை மணிமேகலை வணங்கினுள்.

மணிமேகலையைக் காமுற்றுச் சென்ற உதயகுமாரன் வித்தியாதரனுல் வெட்டுண்டு இறந்ததையும் மணிமேகலை சிறையிலடைக்கப்பட்

டதையும் அறிந்த மாதவியின் தாயாகிய சித்திராபதி அவளைச் சிறையினின்றும் நீக்க நினைந்தாள். அதற்கான வழிகளைச் சிந்தித்த சித்திராபதி இராசமாதேவியிடம் சென்று "கோவலன் இறந்தமை காரணமாக மாதவி துறவு பூண்டு தவச்சாலையை அடைந்தாள். அவள் மகள் மணிமேகலை பிச்சைப்பாத்திரம் ஏந்திப் பிச்சையேற்ருள். இவற்ருல் உலகம் அவர்களை நகைக்கின்றது. மணிமேகலையால் உதயகுமாரன் இறந்தது மாத்திரமன்றி, இந் நகர்க்கு அவளால் இன்னும் ஓர் பெருந்துன்பம் உண்டாகப்போகின்றது. அது இது," என்று கூறத் தொடங்கினுள் :

"முன்னொருநாள் இவ்வூர் அரசன், இந் நகரின் கடலோரத்திலுள்ள புன்னைமரச் சோலையில் ஓரழகிய மங்கையைக் கண்டு, அவள்மீது காமுற்று, அவளுடன் அச்சோலையில் ஒரு மாதத்தை இன்பமாகக் கழித்தான். ஒருநாள் அவள் அரசனைவிட்டுத் தன் இருப்பிடஞ் சென்ருள். அவளைக் காணுத அரசன் அவளை எங்குந் தேடினுன். அப்பொழுது அற்புத சத்திவாய்ந்த சாரணன் ஒருவன் அங்கே வந்தான். அரசன் அவனை வணங்கி, 'என் உயிர்போல்பவள் ஒருத்தியைக் கண்டனையோ? கண்டாயாயிற் கூறு,'' எனலும், அச்சாரணன், 'அரச, அம் மங்கையை நான் இப்பொழுது கண்டிலேன். ஆயினும், அவளைப்பற்றி அறிவேன். அவள் நாக நாட்டரசனுகிய வளைவணனுக்கு அவன் மனைவியாகிய வாசமயிலை என்பவள் வயிற்றில் பிறந்தவள். பீலிவளை என்பது அவள் பெயர்.

அவளே நீ கூறிய மடந்தை; இனி அவள் வராள். அவள் வயிற்றில் உன் புத்திரனாகத் தோன்றும் புதல்வனே வருவான். ஆகையால், நீ துயருறுதே; அவள் வயிற்றிலே தோன்றும் உன் புதல்வன் காரணமாக இந்நகரில் ஒருமுறை இந்திரவிழாச் செய்யாதொழிவை. அந்நாளில் மணிமேகலா தெய்வத்தின் சொல்லாலும் இந்திர சாபத்தினாலும் இந்நகரைக் கடல் கொள்ளும். ஆதலால், யான் கூறியதை மனத்துட்கொண்டு வருடந்தோறும் இந்திர விழாவை மறவாது செய்,' என்று சொல்லிச் சென்றனன். அவன் சென்றபின் எப்பொழுது கடல் கோள் வருமோ! என, இந் நகரத்தார் நடுங்கிக் கொண்டே வாழ்கின்றனர். மணிமேகலாதெய்வத்தின் பெயரைப் பெற்றவள் மணிமேகலை. ஒருகால் இவள் துன்பங் காரணமாக மணிமேகலா தெய்வம் இந்நகரை அழிக்கினும் அழிக்கும். ஆகையால், அவளை என்னிடம் ஒப்படைத்தல் வேண்டும்,'' என்று சித்திராபதி இராசமாதேவியை மன்றாடினாள். இதைக் கேட்ட இராசமாதேவி, ''இனி மணிமேகலை உன்னுடன் வாழ ஒருப்படாள். அவள் என்னோடுதானே இருத்தற்குரியள்,'' எனத் தெரிவித்தாள்.

இச் சந்தர்ப்பத்தில் மாதவியும் சுதமதியும் அறவணவடிகளை வணங்கி அவரையும் அழைத்துக்கொண்டு மணிமேகலையைச் சிறைமீட்கும் நோக்கமாக இராசமாதேவியை அடைந்தனர்.

அறவணவடிகளைக் கண்டமாத்திரத்தே இராசமாதேவி எழுந்து எதிர்சென்று அவரை வணங்கினுள். அவர் அவளுக்கு ஆசி கூறினர். இராசமாதேவி, அவரை ஆசனத்திருத்தி ''எனது நல்வினையே தங்களை இங்கே எழுந்தருளச் செய்தது,'' என்று உபசரித்தாள். அவளுக்கு அறவணவடிகளும் பல நல்லுபதேசங்களைச் செய்து, தானும் மாதவி, சுதமதி முதலியோரும் அங்கு வந்தமையைப் புலனுகுமாறு செய்தார். பின்னர் மணிமேகலையை நோக்கி, ''முற்பிறப் பறிந்த இளநங்கையே, நீ முதலில் மற்றைய சமயங்களின் தருமங்களைக் கேட்டறிதல் வேண் டும். அதன் பின்னர் பல உண்மைகளை உனக்கு நான் போதிப்பேன்'' என்று கூறிப் போவதற்குப் புறப்பட்டார்.

அவர் போக எழுந்ததும் மணிமேகலை அவர் காலில் வீழ்ந்து வணங்கி, ''நான் இன்னும் இந் நகரிலே தங்குவேனுயின் மன்னன் மகனுக்கு இவள் கூற்றுயிருந்தாளென்று உலகோர் தூற்று வர். ஆதலால் இங்கு இரேன். நான் ஆபுத்திரன் நாட்டுக்குச் செல்லல் வேண்டும். அங்கிருந்து மணிபல்லவஞ் சென்று புத்த பீடிகையைத் தரி சிப்பேன். அங்கிருந்து வஞ்சிமாநகரை அடைந்து பத்தினிக்கடவுளாகிய கண்ணகியைத் தரிசிப் பேன். அங்கு கண்ணகிக்கு ஒரு கோயில் எழுப்பப் பட்டிருக்கிறது, எனக் கேள்வியுற்றேன். ஆகை யால், யான் ஆங்குப் போதல் வேண்டும்'' என்று கூறினுள். பின்னர் தன் பாட்டியாகிய சித்திராபதியையும் தாயாகிய மாதவியையும்

தோழியாகிய சுதமதியையும் நோக்கி, ''எனக்கு ஏதேனும் துன்பம் நேரிடுமென்று கவலாதீர்,'' என்று கூறிப் புறப்பட்டாள்.

சூரியாத்தமனமாயிற்று. அந்திமாலைப் பொழுதில், மணிமேகலை சம்பாபதியையும் கந்திற் பாவையையும் வலங்கொண்டு துதித்து, ஆகாய வழியே பறந்து சென்று, புண்ணியராசன் என்னும் பெயருடன் நாகநாட்டை ஆண்டு கொண்டிருந்த ஆபுத்திரனது நாட்டை அடைந்து, ஒரு சோலையின் புறத்தே இறங்கினாள். இறங்கிய மணிமேகலை, ஆங்குள்ள ஒரு முனிவனை வணங்கி இந்நகரின் பெயர் யாது? இதனை ஆளும் அரசன் யார்?'' என வினவினாள்.

''இந்நகரின் பெயர் நாகபுரம். இதனை ஆள் பவன் பூமிசந்திரன் புதல்வனாகிய புண்ணிய ராசன். இவன் பிறந்தநாள் தொடக்கம் இந் நாட்டில் மழை பிழைத்ததில்லை. உயிர்களும் ஒருவகையான நோய் நொடியின்றி வாழ்கின் றன.'' என, அம்முனிவன் மணிமேகலைக்குக் கூறினான்.

# 21. புண்ணியராசன் மணிபல்லவத்திலே தன் வரலாறு அறிதல்

**பு**ண்ணியராசன் தன் மனைவியோடு மணிமேகலையிருந்த சோலையை அடைந்தான். ஆங்குள்ள தருமசாவகன் என்னும் முனிவனை வணங்கி, அவனிடம் பல தருமங்களையுங் கேட்டறிந்து ஒருபுறத்தே யிருந்தனன். அவ்விடத்தே காணப்பட்ட மணிமேகலையைப் புண்ணியராசன் கண்டு ''இவள் யார்? பிச்சைப் பாத்திரம் ஏந்தித் தருமோபதேசம் கேட்கின்ருளே,'' என, தன் அயலில் நின்ற பிரதானியைக் கேட்டான்.

பிரதானி அரசனை வணங்கி, ''இந்தச் சம்புத் தீவகத்தில் இவளை ஒப்பார் யாருமில்லை. ஒரு கால் நான் காவிரிப்பூம் பட்டினத்துக்குச் சோழ அரசனுகிய கிள்ளிவளவனைக் காணச் சென்றிருந்தேன். அப்பொழுது ஆங்கேயுள்ள அறவணவடிகள் இவள் வரலாறுகளை எனக்குக் கூறினுர். அதனை நான் முன்னரே தங்களுக்குக் கூறியதுண்டு. அவளே இவள்,'' என்று தெரிவித்தான்.

மணிமேகலை புண்ணியராசனை நோக்கி ''முற்பிறப்பில் உன் கையிலிருந்த பிச்சைப் பாத்திரமே இப்பொழுது என் கையிலிருக்கிறது. உங்கள் முற் பிறவியையும் நீங்கள் அறியவில்லை. இப்பிறப்பைக்கூட அறியமாட்டீர்கள். மணி

பல்லவத்திலுள்ள புத்த பீடிகையைத் தரிசித்தா லன்றிப் பழம் பிறப்பை அறிதல் முடியாது. ஆதலால், அரசே, அங்கே வரும்படி அறிவுரை கூற விரும்புகிறேன்'' என்றாள். இவ்வாறு கூறிவிட்டு மணிமேகலை ஆகாயவழியே சென்று மணிபல்லவத்தில் இறங்கிப் புத்த பீடிகையை வலங்கொண்டு தரிசித்தாள்.

புண்ணியராசன், சோலையை நீங்கி நகரை யடைந்து தன்னை வளர்த்த தாயாகிய அமர சுந்தரியைக் கண்டு, தன் வரலாற்றைக் கூறு மாறு கேட்டான். அவள், அவன் பசு வயிற் றிலே தோன்றியமையையும், அவன் அங்ஙனம் தோன்றிய வைகாசிப் பூர்ணிமையன்று சில நன்னிமித்தங்கள் நிகழ்ந்தமையையும், மகப் பேறில்லாத தானும் தன் கணவனாகிய பூமி சந்திரனும் மண்முகமுனிவனை வணங்கி அக் குழந்தையை எடுத்து, புண்ணியராசன் என, நாமமிட்டு வளர்த்தமையையும், அரசாளும் உரிமை அவனுக்குக் கொடுக்கப்பட்டமையை யுங் கூறினாள்.

தான் அமரசுந்தரியின் புதல்வனல்லன் என்பதையும், பூமிசந்திரனால் வளர்க்கப்பட்ட புதல்வனே என்பதையும் உணர்ந்த புண்ணிய ராசன், அரசவாழ்வைத் துறந்து துறவு வாழ்வை மேற்கொள்ள விரும்பி அக்கருத் தைத் தன் மந்திரியாகிய சனமித்திரனிடம் தெரிவித்தான்.

சனமித்திரன் அரசனை வணங்கி, ''அரசே, என் சொல்லைக் கேட்பீராக; அரசனாகிய பூமி

சந்திரன், உம்மைப் புதல்வனுகப் பெறுவதன் முன் இந் நாட்டிலே பன்னிரண்டு வருடம் மழை பெய்யவில்லை. வறுமை மிகுந்திருந்தது. தாய்மார் தங்கள் குழந்தைகளையே விற்க முனைந்தனர். பதினுயிரக்கணக்கில் மக்கள் பட்டினியால் மாண்டார்கள். எல்லா உயிர்களும் வருந்தின. அக்காலத்திலே கோடையிலே பெய்த பொன்மழைபோல, நீர் தோன்றினீர். நீர் தோன்றியபின் இந் நாட்டிலே பருவந் தவருமல் மழை பெய்தது; வாவிகள் நிரம்பின; வறுமை ஒழிந்தது; எல்லா உயிர்களும் பசிப்பிணியின்றித் துயரம் நீங்கி இன்ப வாழ்வு வாழ்ந்தன. நீர் இந்நாட்டை விட்டகன்ருல் இங்குள்ளார் அனைவருந் தாயைப் பிரிந்த குழந்தைகளைப் போல அழுவர். மீண்டும் பஞ்சம் புகுந்துவிடும். இந் நாட்டை மறந்து உங்கள் பயனையே விரும்பிச் செல்லுதல் தகுதியன்று. தன்னுயிரைப் பொருட்படுத்தாது பிறவுயிர்களைப் பாதுகாக்கவேண்டியவன் அரசன். அதனினின்று மாறுவது அரச நீதியன்று'' என்று கூறினன்.

சனமித்திரன் கூறியவற்றை அரசன் கேட்டு ''எது எங்ஙனமாயினும் 'மணிபல்லவத்திலுள்ள புத்த பீடிகையை வலங்கொள்ளல் வேண்டும்,' என்னும் ஆசை, என்மனத்தேயிருக்கின்றது. அங்கே போகாமல் என் மனம் ஆறமாட்டாது. ஒருமாதகாலம் இந் நகரைப் பாதுகாத்தல் உன் கடன். நான் மணிபல்லவம்

போய்வருவேன்'' என்று கூறித் தன் கடற் பயணத்துக்கு வேண்டியவற்றை ஆயத்தஞ் செய்தான்.

அரசன் செல்வதற்கு வேண்டிய கப்பல் வருவிக்கப்பட்டதும் அரசன் கப்பலில் ஏறிக் காற்றின் உதவியோடு கப்பலைச் செலுத்தி மணிபல்லவத்தை அடைந்தான். மணிமேகலை அவனை வரவேற்று அழைத்துச் சென்று, அத் தீவை வலம்வந்து பழம் பிறப்பை உணர்த்த வல்ல புத்த பீடிகையைக் காட்டினாள்.

அரசன் புத்த பீடிகையை வலம்வந்து தரிசித்து வணங்கித் துதித்தான். துதித்தலும் நிலைக் கண்ணாடியின் முன் தோன்றும் பிரதிமை போல, அவனது பழம் பிறப்புக்கள் அவன் மனக்கண்முன் தோன்றலாயின.

பழம் பிறப்பை அறிந்து வியப்புற்ற புண்ணியராசன் மனத்தே அமுதசுரபி என்னும் அட்சயபாத்திரத்தை முற்பிறப்பிலே தனக்கு அளித்த தென்மதுரைச் சிந்தாதேவி தோன்றினள். உடனே அவன், ''தமிழகத்திலே தென்மதுரையில் எழுந்தருளியிருக்கும் கல்விக்கிறைவியே, இன்று என் முற்பிறப்பை அறிந்தேன்; என் கவலைகள் அகன்றன. உன் கோயிலில் ஒருநாள் மழைக்கால இரவின்போது துயின்றுகொண்டிருந்தேன். அப்பொழுது அங்கே பெருந் திரளான இரவலர் வந்து உணவு வேண்டி நின்றனர். அவர்

களுக்குக் கொடுக்க உணவில்லாமற் றிகைத்து நின்ற என் கையில் எத்தனை பேருக்கு வேண்டு மானாலும் உணவு உதவத்தக்க தெய்வீக ஆற்றல் வாய்ந்த அமுதசுரபியைத் தந்தாய். அதன்பொருட்டு அன்று உன்னை வணங்கியது போலவே இன்று வணங்குகின்றேன்'' என்று கூறினான்.

புத்த பீடிகையிடம் விடைபெற்று, மணி மேகலையுடன் அவன் புன்னைமரநிழலில் அமர்ந் தான். அப்பொழுது புத்த பீடிகையின் காவற் றெய்வமான தீவதிலகை அங்கே தோன்றி அவனை நோக்கி, ''அமுதசுரபியைக் கையி லேந்தி, உயிர்களின் பசிப்பிணியைத் தீர்த்த பெரியோனே! அக்காலத்தில் நீ, கப்பலில் ஏறிவிட்டாய் என எண்ணி, கப்பலைச் செலுத் திச் சென்று இடையில் உன்னைக் காணாமை யால் இங்கே திரும்பி வந்து நீ இறந்துகிடத் தலைக் கண்டு மனத் துயருற்றுத் தம்முயிரையும் விட்ட ஒன்பது செட்டிகளின் உடல்கள் இவை. அச் செட்டிகளாற் காப்பாற்றப்பட்டு அவர்க ளுடன் வாழ்ந்தவர்கள், செட்டிகள் இறந்த மையைப் பொறுக்காது தாமும் உயிர்விட் டனர். அவர்களின் உடலென்புகள் இவை. இதோ மணலால் மூடுண்டு புன்னைமர நிழலிலே காணப்படும் இவ்வெலும்புகள் உனது உட லென்புகள்; இவற்றைப் பார். உனது உயிரை விட்டாய்; உன் உயிருக்காக இரங்கிப் பின் னால் வந்த பலரை இறக்கச் செய்தாய். ஆகையால், நீ கொலைஞன்'' என அரசனுக்குக் கூறினாள்.

பின்னர் தீவதிலகை மணிமேகலையை நோக்கி, ''காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல் கொண்டது. ஏனெனில், நாகநாட்டரசன் மகளாகிய பீலிவளை என்பாள், தன் மகனுடன் இந்திரனுற் காக்கப்படும் இத் தீவையடைந்து புத்த பீடிகையை வலம்வந்து வணங்கினுள். அவள் இங்கே தங்கியிருக்கும்போது கம்பளச் செட்டி என்னும் வணிகனுடைய கப்பல் இத் தீவில் நங்கூரமிட்டுத் தங்கியது. அக்கப்பல் காவிரிப்பூம் பட்டினத்துக்குப் போக இருக்கிறது, என்பதை உணர்ந்த பீலிவளை, தன் மகனை அவ்வணிகன் வசம் ஒப்புவித்து, 'இவன் அரசன் புதல்வன். இவனை அவனிடம் சேர்ப்பாயாக' என்று கூறினுள்.

''வணிகன் இளவரசனை மகிழ்வுடன் தன் கப்பலில் ஏற்றிக்கொண்டு பிரயாணத்தை ஆரம்பித்தான். ஆனுல், நள்ளிரவிற் கொடுமையான புயற்காற்று எழுந்துவீசக் கப்பல் கல்லில் மோதுண்டு உடைந்தது. தப்பிப் பிழைத்த வணிகனும் சில கப்பலோட்டிகளும் அரசனிடம் சென்று அதனைத் தெரிவித்தனர்,

''கிள்ளிவளவன் தன் புதல்வனை இழந்தமையால் மனநடுங்கித் துயருற்று மகனைத் தேடிச் சென்றதால் இந்திரனுக்குரிய விழாச் செய்தலை அந் நகரார் மறந்தனர். அதனைப் பொருமல் மணிமேகலா தெய்வம் 'இந் நகரைக் கடல் கொள்ளுக' என்று சபிக்க, ஒரு பேரலை கிளம்பிக் காவிரிப்பூம் பட்டினத்தைக் கடலுள் ஆழ்த்திற்று. அரசன் வேறிடஞ் சென்ருன். அறவணவடிகளோடு மாதவியும் சுதமதியும் யாதொரு வருத்தமுமின்றி வஞ்சி

மாநகரம் புக்கனர்,'' என்று சொல்லி, தீவ திலகை அகலுதலும், புண்ணியராசன், தன் முன்பிறவிக்குரிய உடலைக் காணும் அவாவினுல் புன்னைமர நிழலிலுள்ள மணலைத் தோண்டி, அங்கே தோன்றிய தன்னுடைய பழைய உடம்பின் எலும்பைக் கண்டு மயக்கமுற்ருன்.

மணிமேகலை அரசனுக்கு ஆறுதல் கூறினுள்: ''அரசே, முன்னைப் பிறப்பை உணர்ந்தால், சமயப்பற்றுடைய நல்ல அரசனுய், நீங்கள் ஆளும் பல தீவுகளிலும் உங்கள் புகழ் பரவும் என்ற, நல்லவாவுடனேயே நான் உங்கள் நகர்க்கு வந்து உங்களை இங்கு அழைத்துவந் தேன். மன்னர்களே துறவிகளாக விரும்பினுல், ஏழைகள் எங்ஙனம் உய்வர்? உணவும் உடை யும் உறையுளும் கொடுத்து உதவுவதே உண் மையான அறம் என்பதை மறவாதேயுங்கள்,'' என்ருள்.

''எனது நாட்டிலாயினும் சரி, பிறநாடுகளி லாயினும் சரி, நீங்கள் நாட்டிய அறநெறியின் படி நடப்பேன். என் பழம்பிறப்புக்களை உணர்த்தி நீங்கள் என்னைத் திருத்தினீர்கள். இவ்வாறு அன்பு காட்டிய தங்களை எவ்வாறு பிரிவேன்,'' என மன்னன் மொழிந்தான்.

மணிமேகலை அரசனை நோக்கி, ''இப்பிரி வுக்கு வருந்தாதீர்கள்; உங்கள் நாடு உங்களை அழைக்கிறது. ஆகையால், உடனே திரும்பிச் செல்லுங்கள்'' என்று கூறி, வானில் எழுந்து சென்ருள்.

# 22. மணிமேகலை வஞ்சிநகர் அடைந்தமை

மணிமேகலை ஆகாயவழியே சென்று வஞ்சி மாநகரை அடைந்தாள். அங்கே, தன் தாய் கண்ணகியையுந் தந்தை கோவலனையுந் தரிசிக்க விரும்பி, கண்ணகி கோயிலிற் புகுந்து வணங்கி, ''கணவனிறந்தும் அவனுடன் இறவாமற் சினங் கொண்டு மதுரையை அழித்த காரணம் யாது? கூறியருளல் வேண்டும்,'' என்று பிரார்த்தித்தாள்.

பத்தினிக் கடவுளாகிய கண்ணகி, ''என் தலைவனுக்கு நேர்ந்த மரணத் துன்பத்தைப் பொறுக்க இயலாமையால் மதுரையை எரித்து அழித்தேன். இப்பொழுது மதுராபுரித் தெய் வம் தோன்றி எமது பழைய வரலாற்றைக் கூறியது. அது:

'கலிங்க நாட்டிலுள்ள சிங்கபுரத்தரச னாகிய வசுவும், கபிலபுரத்தரசனாகிய குமரனும் தம்முட் பகைகொண்டு போர் செய்தனர். அக் காலத்து, சிங்கபுரத்துக் கடைவீதியிலே சங்க மன் என்னும் வணிகன் தன் மனைவியாகிய நீலி என்பவளுடன் பண்டம் விற்றுக்கொண்டிருந் தான். அவன்மேற் பொறாமையுற்ற பரதன் என்பவன், அந்நகரத்தரசனிடஞ் சென்று, 'சங்கமன் கபிலபுரத்தரசனின் ஒற்றன்,' எனக் கூறினான். யாதொரு குற்றமுமறியாத சங்க மனை, சிங்கபுரத்தரசன், பரதனின் சொல்லைக்

கேட்டு ஒற்றனென எண்ணிக் கொலை செய்தான். இதனை அறிந்த சங்கமன் மனைவி நீலி, அதனைப் பொறுக்கலாற்ருது அழுது புலம்பிப் பெரியதொரு மலைமீதேறி அதனினின்றும் வீழ்ந்திறந்தாள். அங்ஙனம் இறக்கும் பொழுது 'எனக்கு இத்துன்பத்தைச் செய்தோர் மறுபிறப்பில் இத்தகைய துன்பத்தை அனுபவிப்பாராக' எனச் சபித்தாள். அப் பரதனே கோவலனுகப் பிறந்தான். அவ் வினையால் இத் துன்பம் அடைந்தான். பழம்பிறப்பிற் செய்த வினைப்பயனை எவரும் அனுபவியாதிருத்தல் முடியாது;' என்பது.

"இங்ஙனம் தெய்வம் கூறியபின்னும் கோபம் அடங்காது மதுரையை எரித்தேன். முன்பு செய்த தவப்பயனுல் நானும் கணவனுந் தேவர்களானேம். ஆயினும், மதுரையை எரித்த இப் பாவத்தின் பலனை அனுபவித்தே தீரல் வேண்டும்" எனக் கண்ணகித் தெய்வம் கூறிற்று.

பின்னர், மணிமேகலை முனிவனது வேடங் கொண்டு கோயில்களும் பொழில்களும் பொய்கைகளும் மலிந்து, முனிவர்களும் கற்ரேரும் புலவரும் மிக்குள்ள வஞ்சிமாநகரை அடைந்தாள். வஞ்சிமாநகரிற் பல சமய வாதிகளின் சமயக்கோட்பாடுகளையும் வினவி அறிந்துகொண்டாள்.

மாதவியையும் சுதமதியையும் அறவண வடிகளையுங் காண விரும்பிய மணிமேகலை,

வஞ்சிமாநகரத்துள்ளே சென்றாள். அங்கே, பலவகை மாந்தர்கள் இருக்கும் வீதிகளையுங் கடந்து பௌத்த முனிவர்கள் தங்கியிருக்கும் தவச்சாலையை அடைந்தாள்; ஆங்கு மாசாத்துவான் என்னும் முனிவன் தவஞ் செய்து கொண்டிருத்தலைக் கண்டு, அவனை வணங்கினாள். வணங்கி, தன் கையிலுள்ள அமுதசுரபியின் இயல்பையும், அதிலிருந்து உணவை எடுக்க எடுக்க உணவு வளருந் தன்மையையும், அப் பாத்திரத்தை முற்பிறப்பிற் சிந்தாதேவியின் அருளாற் பெற்ற ஆபுத்திரன் வரலாற்றையும், அவனது புண்ணிய விசேடத்தால் இப் பிறப்பிற் புண்ணியராசனாய்ப் பிறந்து சாவகநாட்டை ஆண்டுவருஞ் சிறப்பையும், தான் அவனை மணிபல்லவத்துக்கு அழைத்துச் சென்று புத்த பீடிகையைத் தரிசிக்கச் செய்த வரலாற்றையும், அப்பொழுது தீவதிலகை என்னும் காவற்றெய்வம் தோன்றிக் காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல்கொண்ட வரலாற்றைக் கூறியமையையும், தான் தன் தாயாகிய கண்ணகி கோயிலை வணங்கி அவள்பால் அவள் பழம்பிறப்பின் வரலாற்றைக் கேட்டமையையும், பல சமயவாதிகளிடமுந் தான் சமய உண்மைகளையு முணர்ந்த வரலாற்றையுங் கூறினாள்.

மணிமேகலை கூறிய அனைத்தையுங் கேட்ட மாசாத்துவான், தான் ஆங்குவந்த காரணத்தையுங் கூறினான். அப்பொழுது, மாதவியும் சுதமதியும் அறவணவடிகளும் ஆங்கு வந்தமை

யையும், ஆங்கிருந்து அவர்கள் காஞ்சிமா நகரம் புகுந்தமையையும், அவ்விடத்திலேயே அறவணவடிகள் மணிமேகலைக்குத் தருமோபதேசஞ் செய்ய நினைந்தமையையும், காஞ்சிமா நகரத்திலே மழையின்மை காரணமாகப் பல உயிர்கள் பசிப்பிணியால் இறந்தமையையும் தெரிவித்து, காஞ்சிமாநகர மக்களை வாட்டும் பசிப்பிணியை நீக்க மணிமேகலை ஆங்குச் செல்லவேண்டிய ஆவசியகத்தையுங் கூறினான்.

மணிமேகலை மாசாத்துவ முனிவனை வணங்கி அமுதசுரபியுடன் ஆகாயவழியே எழுந்து, வடதிசைகண் மழையின்மையால் அழகுகெட்டு, செல்வங் குன்றி வறுமையுற்றிருக்கும் காஞ்சிமாநகரை அடைந்தாள். அந்நகரின் நடுவே இளங்கிள்ளி என்னும் அரசனாற் கட்டுவிக்கப்பட்ட புத்தகோயிலை வணங்கி அதனயலிலுள்ள ஒரு சோலையிலே தங்கினாள்.

இவ்வாறு தங்கியிருக்கும் மணிமேகலையின் இயல்பை அறிந்த ஒருவன், அரசனை அடைந்து அச் செய்தியைத் தெரிவித்தான். அமுதசுரபியின் ஆற்றலைக் கேள்வியுற்ற அரசன், மந்திரிமார்களுடன் விரைந்து சென்று மணிமேகலையைக் கண்டு அவளை வணங்கினான். வணங்கி, "என் அரசுமுறை பிழைத்தமையாலோ, அல்லது என் தவக்குறைவினாலோ, அன்றி, கற்புடைய மாதரின் குறைபாட்டினாலோ இந்நாடு மழையின்றி அல்லலுற்று வருந்துகிறது. இனி, என்ன செய்வேன்? என, வருந்திக்

கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு தெய்வம் தோன்றி 'நீ வருந்தாதே; உன் நல்வினைப் பயனால் ஒரு பெண் இங்கே வருவாள். அவளது கையிலுள்ள தெய்வப் பாத்திரத்தினுதவியால் இந்நாடு பசிப்பிணியின்றி வாழும்; இந்நாடும் உய்யும்; அவளுடைய கருணையால் மேகமும் மழை பொழியும்; பல அற்புதச் செயல்களும் நிகழும். அவள் வருகையை எதிர்பார்த்து மணிபல்லவத்திலுள்ள கோமுகியென்னும் பொய்கையைப்போல ஒரு பொய்கையையும் ஒரு சோலையையும் உண்டாக்கு' என்று கூறிச் சென்றது. தெய்வம் கூறியபடியே இச்சோலையையும் பொய்கையையும் அமைப்பித்தேன்' என்று கூறினன்.

மணிபல்லவம் போன்ற சோலையையும் கோமுகி போன்ற பொய்கையையும் மணிமேகலை பார்த்து மகிழ்ச்சியடைந்து தன் பழம் பிறப்பை யுணர்த்திய புத்தபீடிகையையும் தீவதிலகையையும் மணிமேகலா தெய்வத்தையும் வணங்குதற்கேற்ற கோயில்களையும் உண்டாக்கினள். அவற்றிற்குரிய பூசையையும் திருவிழாவையும் அரசனைக்கொண்டு செய்வித்தனள். பின் அவ்விடத்துள்ள புத்த பீடிகையிலிருந்து அமுதசுரபியின் உதவியால் எல்லா உயிர்களையும் உண்ண வருமாறு அழைத்தாள். அப்பொழுது குருடர், செவிடர், முடவர், ஊமையர், நோய்வாய்ப்பட்டோர், பசித்தோர், வறியோர் ஆகிய யாவரும் வந்து கூடினர். அவர்களுக்கு உணவு கொடுக்கக் கொடுக்க

உணவு மேலும் மேலும் பெருகியது. அப் புண்ணிய விசேடத்தால் எங்கும் மழை பெய்தது. வளம் மிகுந்தது.

இங்ஙனம் நிகழுங் காலத்து அறவணவடிகள் அந்நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்று மாதவியோடும் சுதமதியோடும் அறச்சாலையை அடைந்தார். அவர்களைக் கண்ட மணிமேகலை விரைந்துசென்று அறவணவடிகளை வணங்கி உபசரித்து, அறுசுவை வாய்ந்த போசனத்தை அமுது செய்வித்தாள். 'யான் செய்த புண்ணியம் பலன் அளித்தது', எனக் கூறி மீண்டும் வணங்கினாள்.

தம்மை வணங்கிய மணிமேகலையை அறவணவடிகள் வாழ்த்தி, ''பீலிவளைபெற்ற குழந்தையைக் கம்பளச்செட்டி கடலிற் பறிகொடுத்தமையால் அரசன் வருத்தமுற்று அக் குழந்தையைத் தேடி அலைந்தான். இதனால், காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா நிகழாது போயிற்று. அது தெரிந்த மணிமேகலா தெய்வம், இந் நகரைக் கடல்கொள்ளுக'; எனச் சபித்தது. இந்திரனும் சபித்தான். அதனால் அந்நகரம் கடல் கொள்ளப்பட்டது. உன் தாயும் சுதமதியும் யானும் உன்பொருட்டு இந் நகரடைந்தோம்'' என்று கூறினார்.

மணிமேகலை அறவணவடிகளை வணங்கி, ''மணிபல்லவத்திலே புத்தபீடிகையைக் காத்து நிற்கும் தீவதிலகையும் இச் செய்தியைக்

கூறினள். நான் வேற்றுருக்கொண்டு வஞ்சிமா நகரத்தை அடைந்தபோது பல சமய வாதிகளிடமும் அவரவர் கொள்கைகளைக் கேட்டேன். அவை என் மனத்துக்குப் பொருந்தாமையால் இந்நகரம் அடைந்து உம்மைச் சரண் அடைந்தேன். உண்மைப் பொருளை உணர்த்தியருளல் வேண்டும்,'' என்று வேண்டிநின்றாள்.

மணிமேகலையின் வேண்டுகோளுக்கிணங்கி அறவணவடிகள் மணிமேகலைக்குப் புத்த தரும உண்மைகளை உபதேசித்தருளினார். மணிமேகலை அவ்வுபதேசமொழிகளைக் கேட்டு அந்நகரிலேயே தவஞ் செய்துகொண்டிருந்தாள்.

முற்றும்.

# அரும்பத உரை

## 1ஆம் பாடம்

**பக்கம் 1**

மத்தி - நடு
வாணிகம் - வியாபாரம்
அளவு - எல்லே

**பக்கம் 2**

மாசாத்துவான்-கோவலனின் தந்தை
கோவலன் - மணிமேகலேயின் தந்தை
ஈடுபாடு-நெருங்கியதொடர்பு
புனேந்து - அலங்கரித்து
நாண் - வெட்கம்
அவை - சபை
நங்கையர் - பெண்கள்

**பக்கம் 3**

கரிகாலன் - சோழநாட்டு அரசர்களில் ஒருவன்
அரங்கேற்றம் - சபையில் பலரும் அறியத் தன் வித்தை காட்டல்
பரிசு - உபகாரம்
மகவு - குழந்தை
வளம் - செழிப்பு

**பக்கம் 4**

ஊடல் - தலேவன் தலேவியர்க்கிடையில் ஏற்படும் சிறு பிணக்கு
ஈட்டுதல் - தேடுதல்

**பக்கம் 5**

இடைச்சேரி - இடையர் வசிக்கும் ஊர்
கண்ணகி-கோவலன் மனேவி, மணிமேகலேக்குத் தாய் முறையினள்
துறக்கம் - மோட்சம்
மாதவி - மணிமேகலேயைப் பெற்ற தாய்
துயர் - துன்பம்

## 2ஆம் பாடம்

**பக்கம் 6**

நாளங்காடி-பகல் நேரத்தில் நடைபெறும் கடைகள் உள்ள வீதி
முசுகுந்தன் - சோழர்களுள் ஒருவன், நாளங்காடிப் பூதத்தைத் தேவலோகத்திலிருந்து கொண்டு வந்தவன்
வேண்டுகோட்படி - கேள்விப்படி

பக்கம் 7

அவுணர் - அசுரர்
அத்திரம் - அம்பு
பாசம் - கயிறு
முரசு - பறை
விளித்து - அழைத்து
உரு - வடிவம்
கரந்து - மறைந்து
மன்றம்-பலர் கூடும் இடம்
துப்புரவு - புனிதமாக்கல்

பக்கம் 8

புனைதல் - அலங்கரித்தல்
அந்தணர் - பிராமணர்
வழிபாடு - வணக்கம்
வித்தியாமண்டபம் - கல்வி பயிலும் மண்டபம்
நாடகக்கணிகை-நாடகம் ஆடும் தாசி
அரங்கு-சபை

பக்கம் 9

வசந்தமாலை - மாதவியின் தோழி
திறன் - சிறப்பு
ஒவ்வாத - பொருந்தாத
பழமொழி-இழிவான சொல்
சிதை - இறந்தோர் உடலை எரிக்கும் பீடம்
அழல் - நெருப்பு

பக்கம் 10

நோன்பு - விரதம்
அந்தட்சணம் - அப்பொழுது
பத்தினி-உத்தமியான பெண்
அவல வாழ்வு-இழிந்த வாழ்வு
அறவணவடிகள்-காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த புத்த ஞானி
முறையிடல் - துன்பம் நீங்குமாறு வேண்டுதல்
சித்திராபதி-மாதவியின் தாய்

## 3ஆம் பாடம்

பக்கம் 11

உகுத்தல் - சொரிதல்
தூய்மை - புனிதம்

பக்கம் 12

ஆராய்வு - ஆலோசனை
வித்தியாதரர் - பதினெண் கணங்களுள் ஒருவகையினர்
மலர்க்கா - மலர்ச்சோலை

பக்கம் 13

பதுமபீடம் - தாமரைப்பூப் போன்ற வடிவமுடைய ஆசனம்
அரும்பு - மொட்டு
கமண்டலம்-முனிவர்கள் நீர் வைத்திருக்கும் பாத்திரம்
சிறைக்கூடம் - மறியற்சாலை
அருந்துதல் - உண்ணுதல்

பக்கம் 14

கந்தல் - கிளிசல் உடை
எழில் - அழகு
உரையாடுதல்-சம்பாஷித்தல்

## 4ஆம் பாடம்

**பக்கம் 15**

ஓவியன் - சிற்பகாரன்
வண்ணம் - அழகு
ஓவியம் - சிற்பம்
வேய்ங்குழல் - புல்லாங்குழல்
பொய்கை - தடாகம்
முழவு - மத்தளம்

**பக்கம் 16**

துகள் - தூசி
இரை - உணவு
காலவேகம் - அரசனின் பட்டத்து யானை

**பக்கம் 17**

பாகர்-யானைப் பாதுகாவலர்
முரசு - பறை
நாடகக்கணிகையர்-நாடக மகளிர்
பலகணி - யன்னல்
கோடு - கொம்பு
திண்மை - வலிமை

**பக்கம் 18**

பகைநரம்பு - மாறுபட்ட யாழ் நரம்பு
கலவரம் — கலக்கம்

**பக்கம் 19**

வழித்தோன்றல்-புதல்வன்
ஊன் - இறைச்சி
பண்டம் - பொருள்
சினம் - கோபம்
புகலிடம் - இருப்பிடம்
அவா - ஆசை

## 5ஆம் பாடம்

**பக்கம் 20**

ஆற்றல் - வலிமை

**பக்கம் 21**

வசம் - மயம்
மனை - வீடு
கதி - துணை
முறையிடல்-விண்ணப்பித்தல்
சீவர ஆடை-துறவிகட்குரிய உடை

**பக்கம் 22**

பொதுமகளிர்-பரத்தையர்
எளிமை - இழிவு
பீடிகை - சமாதி
பூமடந்தை - பூமி

**பக்கம் 23**

சோடு - ஆண், பெண்
மன்று - தொழுவம்
வருடி - தடவி

**பக்கம் 24**

அந்தி - மாலை
உறவினர் - இனத்தவர்
மடந்தை - பெண்
முலாம் - பூச்சு
புனிதம் - தூய்மை

## 6ஆம் பாடம்

பக்கம் 25

சுடுகாடு - சுடலை
பொய்கை - தடாகம், வாவி
பாசம் - கட்டு

பக்கம் 26

சிகை - முடி
முன்றில் - முற்றம்
கோட்டம் - கோயில்
ஈமம் - சுடலை (பிணம்)
உறைவிடம் - வீடு
தாழி - பானை

பக்கம் 27

மன்றம் - சபை
நிணம் - தசை
அடுதல் - உணவாக்கல்

பக்கம் 28

அணிமை - சமீபம்
கவைத்த - பிளவுபட்ட
தணியாத - குறையாத

பக்கம் 29

தமியன் - தனித்தவன்
முப்புரி நூல் - மார்பிலணியும் நூல்

பக்கம் 30

ஊழ்வினை - விதி
பார்ப்பனி - பிராமணத்தி

பக்கம் 31

கணம் - கூட்டம்
அழல் - நெருப்பு
கண் அயர்ந்து - கண்மூடி

## 7ஆம் பாடம்

பக்கம் 32

உறக்கம் - நித்திரை
ஒப்படைத்தவள் - கையளித்தவள்
நிகழும் - நடைபெறும்

பக்கம் 33

பழம் பிறப்பு-முந்திய பிறப்பு
அற்புதம் - ஆச்சரியம்
நாமம் - பெயர் [பெண்
அறநங்கை - தருமம் கூறும்

பக்கம் 34

செதுக்குதல் — அமைத்தல்
துணுக்குதல் - நடுங்குதல்
நள்ளிரவு - நடுச்சாமம்
புலருதல் - விடிதல்
திகில் - பயம்

பக்கம் 35

தடாகம் - குளம்
உறைவிடம் - இருப்பிடம்
போர்க்களம் - போர்செய்யும் இடம்
அணிவகுத்தல் - போர்செய்ய வரிசைசெய்து நிற்றல்
படை - சேனை
கழிநிலம் - நீர்பொருந்திய நிலம்

பக்கம் 36

சஞ்சாரம் - சீவியம்
புனைந்து - அழகுசெய்து
பீடம் - உயர்ந்த இடம்
மும்முறை - மூன்றுதரம்
புலனுதல் - தெரிதல்
தருமோபதேசம் - தருமப் பிரசங்கம்
இராசதானி - தலைநகரம்

பக்கம் 37

நகரம் - பட்டினம்
பாடிவீடு - நிரந்தரமற்ற வீடு
பூகம்பம் - பூமி அதிர்ச்சி
சரண் - அடைக்கலம்
பத்தினி - மனைவி

பக்கம் 38

திட்டி - கண்
திருவாய் மலர்தல் -சொல்லு [தல்
தரிசித்து - கண்டு
தொழுதல் - வணங்குதல்
நிகழ்ச்சி - வரலாறு
புலப்படுதல் - புலன் ஆதல்

## 8 ஆம் பாடம்

பக்கம் 39

உணர்வு - உணர்ச்சி
அறம் - தருமம்
தடுமாறல் - நிலைமாறல்
ஊடல் - கணவன் மனைவியர்க் கிடையில் ஏற்படும் சிறு கோபம்

பக்கம் 40

அமுது - உணவு
பிறவாநிலை - முத்திநிலை
பேறு - பெருமை
உவவனம் - மலர்ச்சோலை
பாதபங்கயமலை - சிவனொளி பாதமலை

பக்கம் 41

தரிசித்தல் - காணல்
வழிபடுமின் - வணங்குங்கள்
சமயவாதிகள் - சமயக் கருத்தாக்கள்
துதித்து - போற்றி
வான் - ஆகாயம்

பக்கம் 42

அறிவுறுத்தல் - தெரிவித்தல்
புலனுதல் - தெரிதல்
விண்ணகம் - ஆகாயம்

## 9 ஆம் பாடம்

பக்கம் 42

குன்று - சிறுமலை
பொய்கை - குளம்
தடாகம் - வாவி
சாந்தசொரூபி - சாந்தமான [உருவம்
நங்கை - பெண்
அபாயம் - துன்பம்

பக்கம் 43

நாடகக்கணிகை - நாடகமாது
வலம்வருதல் - சுற்றிவருதல்
சமந்தகூடம் - சிவனொளிபாத மலை
திருவடிப்படிமை - அடிபோன்ற வடிவம்
திருவடித்தடம் - திருவடி உருவம்
வானவர்வேந்தன் - தேவர்கள் தலைவன்

பக்கம் 44

கொழுநீர்இலஞ்சி - குளிர்மை யான நீர் உள்ள இடம்
பௌர்ணமி - பூரணைத்தினம்
அன்னம் - சோறு
இரவலர் - பிச்சைக்காரரர்
வரலாறு - சரித்திரம்
நீராழி - நீர்பொருந்திய [சமுத்திரம்

பக்கம் 45

அயல் - பக்கம்
போதி - அரசு
பசிப்பிணி - பசிநோய்
புணை - தெப்பம்
எண்ணில் அடங்காது - அளவில் அடங்காது
மண்திணிந்த - மண்மிகுந்த

பக்கம் 46

சுரக்கும் - பொழியும்
வாட்டுதல் - வருத்துதல்
பாதம் - அடி
செபித்து - உச்சரித்து

## 10ஆம் பாடம்

பக்கம் 47

வியப்பு - ஆச்சரியம்
யாக்கை - உடம்பு
பெறற்கரிய - பெறமுடியாத
உறுதி - நன்மை
மூதறிஞர் - பெரியஅறிவாளி

பக்கம் 48

ஒளிபூத்தது - மகிழ்ச்சிஏற்பட் [டது
தழுதழுத்த - தடுமாறிய
நலம் - சுகம்
தாரைதாரை - தொகுதி தொகுதியாக
விலங்கு - மிருகம்
நீத்தல் - பிரிதல்

பக்கம் 49

அரங்கம் - மேடை
பழவினை - முந்தியவினை
இருபாலார் - இருபகுதியினர்

## 11ஆம் பாடம்

பக்கம் 50

யாத்திரிகர் - யாத்திரை செய் [வோர்
குழாம் - கூட்டம்
பிரசவவேதனை - கருப்பவே [தனை
நா - நாக்கு

பக்கம் 51

ஆ - பசு
நம்பி - தலைவன்
சுற்றம் - உறவு
அந்தணர் - பிராமணர்

கட்டுத்தறி - கட்டுமரம்
நிகழல் - நடத்தல்

பக்கம் 52

குழி - கிடங்கு
புலை - இழிவு
கோல் - தடி
நைய - வருந்த
புடைத்து - அடித்து
முடிக்குரிய - அரசாங்கத்துக் [குரிய
நான்முகன் - பிரமன்
உள்ளம் - மனம்

பக்கம் 53

சீறி - கோபித்து
எதிர்வாதிட்டான்-எதிர்த்துப் [பேசினன்
போற்றி-புகழ்ந்து
பார்ப்பனி - பிராமணத்தி
வினவினேன் - கேட்டேன்
விமோசனம்-பிராயச்சித்தம்

பக்கம் 54

இதுகாறும் - இவ்வளவும்
வானகம் - ஆகாயம்
ஆடல்நங்கை - நடனமாது
முதற்குரவர் - மூதாதை
அவதூறு - பழிப்பு
ஆதுலர் - யாதுமற்றவர்

## 12ஆம் பாடம்

பக்கம் 55

அயர்ந்து - மறந்து
சிந்தாதேவி - சரஸ்வதி
நந்தா - குறையாத

பக்கம் 56

உண்கலம்- உண்ணும் பாத்திரம்
தானம் - கொடை
விலாவிற - விலாமுறிய

பக்கம் 57

வாடுபவர் - வருந்துபவர்
களிப்பு - மகிழ்ச்சி
நங்கூரமிடல் - கப்பல் கடலில் கட்டுண்டு நிற்றல்

பக்கம் 58

சாதகம் - அநுகூலம்
மீகாமன் - கப்பல் செலுத்துவோன்
கருணை - இரக்கம்
வருந்துணையும் - வருமளவும்
துறந்தான் - விட்டான்
ஊட்டி - கொடுத்து
மயம் - தன்மை

பக்கம் 59

சந்தர்ப்பம் - சமயம்
புத்திரப்பேறு - பிள்ளைப்பேறு

பக்கம் 60

பிக்குணி - புத்தசந்நியாசினி
வியப்பு - ஆச்சரியம்

## 13ஆம் பாடம்

**பக்கம் 61**

வணிகர் - வியாபாரிகள்
இழப்பு - அழிவு
ஈட்ட - சம்பாதிக்க
கவிழ்ந்த - புரண்ட

**பக்கம் 62**

சுடுகாடு - சுடலை
குழி - கிடங்கு
அசரீரி - உருவமற்ற ஒலி
கவலை - துயர்
ரூபம் - வடிவம்
உரையாடல் - பேசுதல்

**பக்கம் 63**

குருமகன் - ஆசிரியன்
நிணம் - கொழுப்பு
ஏவலாளர் - வேலைக்காரர்
ஊன் - இறைச்சி
வெறுக்கிருய் - விரும்புகிருயில்லை
உறங்குதல் - நித்திரைசெய்தல்

**பக்கம் 64**

விடை - மறுமொழி
புன்னகை - சிரிப்பு
இன்முகம் - இனியமுகம்
உணரல் - அறிதல்
யாக்கை - உடம்பு
சம்பாஷணை - உரையாடல்

**பக்கம் 65**

கவிழ்தல் - புரளல்
கவர்தல் - பறித்தல்
ஆபரணம் - நகை
வருகை - வருதல்
கழிபேருவகை -பெருமகிழ்ச்சி
மேம்பாடு - சிறப்பு
மனை - வீடு
பாரகம் - பூமி
உயிர்மருந்து - உணவு

## 14ஆம் பாடம்

**பக்கம் 66**

வளம் - செழிப்பு
வித்தியாதரர் - ஆகாயவழி செல்லும் ஒருவகைத் தேவசாதி
உபவாசம் - விரதம்
தினம் - நாள்
யானைத்தீ - பெரும்பசிநோய்
ஆற்ருத - செயலொன்றும் முடியாத

**பக்கம் 67**

சிதைத்தல் - அழித்தல்

**பக்கம் 68**

அம்பலம் - புலர்கூடுமிடம்

## 15ஆம் பாடம்

**பக்கம் 69**

வெய்துயிர்த்து - பெருமூச்சு விட்டு
பத்தினி - உயர்குடிப் பெண்
மீட்டல் - வாசித்தல்
பாணன் - பாடகன்
தாபம் - தவவேடம்
ஒவ்வாத - பொருந்தாத
சூழல் - சுற்றுடல்

**பாகம் 70**

தூய்மை - பரிசுத்தம்
ஊக்கம் - உற்சாகம்
எழில் - அழகு
அண்மி - கிட்டி

## 16ஆம் பாடம்

**பக்கம் 72**

பெருமாட்டி - பெருமகள்
சூள்-சத்தியம்
சுயவடிவம் - சுயஉருவம்

**பக்கம் 73**

பூங்கா - பூஞ்சோலை
தம்பதிகள் - கணவனும் மனைவியும்
வனப்பு - அழகு
அளாவிய - கிட்டிய
கொம்பு - கிளை
மந்தி - குரங்கு
கடுவன் - ஆண்குரங்கு
செய்குன்று -செய்யப்பட்ட மலை
முழை - குகை

**பக்கம் 74**

அத்தாணி மண்டபம் -கொலு மண்டபம்
அற்புதம் - ஆச்சரியம்
விஞ்சையர் - வித்தியாதரர்
அம்பலம் - பலர்கூடுமிடம்

**பக்கம் 75**

சிறைக்கூடம் - மறியற்சாலை
அறக்கூடம் - தருமச்சாலை
மோகம் - ஆசை

## 17ஆம் பாடம்

**பக்கம் 76**

மார்க்கம் - வழி
மன்றம் - சபை
ஈறு - கடைசி
உரை - சொல்
புகன்றுள் - கூறினுள்

**பக்கம் 77**

செவ்வரி - சிவந்தரேகைகள்
பீளை - கண்ணிலிருந்து தோன்றும் அழுக்கு
உறுதி - நன்மை
பயக்கும் - செய்யும்
பற்று - ஆசை
பராமுகம்-அவதானக்குறைவு

**பக்கம் 78**

நுழைதல் - உட்புகுதல்
வேற்று வடிவம் - வேறு + வடிவம்

## 18ஆம் பாடம்

பக்கம் 79

ஈமச்சிதை - இறந்தஉடம்பை எரிக்கும் பீடம்
உம்பால் - உம்பக்கம்
ஈர்ப்பு - இழுப்பு
அறவழி - தருமவழி

பக்கம் 80

எழுந்தருளல் - தங்கியிருத்தல் (வருதல்)
அவதாரம் - பிறப்பு

பக்கம் 81

பரிசாரகன் - சமையற்காரன்
காலந்தாழ்தி - பிந்தி
அச்சம் - பயம்
கலம் - பாத்திரம்
ஊட்டுதல் - அநுபவித்தல்
சமயவாதி-சமயத்தைப்பற்றி வாதிப்பவன்
கணம் - கூட்டம் (தொகுதி)

பக்கம் 82

வரவு - வருகை
அற்புதம் - புதுமை
நிருவாணம் - மோட்சம்

## 19ஆம் பாடம்

பக்கம் 83

உசாவ - விசரிக்க
காமவிகாரம் - காமத்தால் ஏற்படும் மாறுபாடு
பெண்டிர் - பெண்கள்
ஒறுத்தல் - தண்டித்தல்
வேரறுத்தல் - அழித்தல்

பக்கம் 84

நிச்சயித்து - தீர்மானித்து
பத்தினி - கற்புடையவள்
இல்லம் - வீடு
பாசம் - கயிறு

பக்கம் 85

விழா - திருவிழா
பழிச்சொல்-இழிவானசொல்

பக்கம் 86

வாக்கு - பேச்சு
விசேடம் - சிறப்பு
இல்லம் - வீடு
நற்ருய் - பெற்றதாய்
திரட்டி - சம்பாதித்து
எட்டி - ஒரு பட்டப்பெயர்

பக்கம் 87

திண்ணம் - நிச்சயம்
தானம் - கொடை
ஈட்டிய - சம்பாதித்த
காமுற்று - விரும்பி

பக்கம் 88

தேர்க்கால் - தேர்ச்சில்லு
முறை - நீதி
புறங்காடு - சுடலை

## 20ஆம் பாடம்

**பக்கம் 89**

புத்திரசோகம் - புத்திரனை இழந்த துன்பம்
கலக்கம் - கலங்குதல்
காரணள் - காரணமானவள்
வஞ்சம் - பழிக்குப்பழி
கொதிப்பு - பொருமை
இராசமாதேவி - இராசாவின் மனைவி

**பக்கம் 90**

ஊட்டினுள் - உண்பித்தாள்
அவமானம் - இழிவு
சூழ்ச்சி - வஞ்சனை

**பக்கம் 91**

வாட்டம் - கலக்கம்
ஏவல் - ஏவுதல்
ஊண் - உணவு

**பக்கம் 92**

மடைத்தொழில் - சமையல்
தீண்டல் - கடித்தல்
பஞ்சமாபாதகம் - ஐந்து பெரிய பாவம்
காமுற்று - விரும்பி

**பக்கம் 93**

துறவு - உலகவெறுப்பு
இருப்பிடம் - வீடு

**பக்கம் 94**

மடந்தை - பெண்
கடல்கொள்ளும்-கடல் மூடும்
கடல்கொள்-கடல்கொள்ளல்
ஒருப்படல் - சம்மதித்தல்
கண்டமாத்திரம்-கண்டவுடன்

**பக்கம் 95**

உபசரித்தல் - வரவேற்றல்
போதிப்பேன்- உபதேசிப்பேன்
கூற்று - யமன்
தரிசிப்பேன் - காண்பேன்

**பக்கம் 96**

கவல்தல் - வருந்துதல்
அஸ்தமனம் - மறைவு
வலம்வருதல் - சுற்றிவருதல்
புறம் - பக்கம்
பிழைத்தல் - பொய்த்தல்
கொடி - துன்பம்

## 21ஆம் பாடம்

**பக்கம் 97**

அயல் - பக்கம்
பிரதானி - சிறுதலைவன்
ஒப்பார் - போன்றவர்

**பக்கம் 98**

அறிவுரை-அறிவுவார்த்தை
நன்னிமித்தம் - நல்ல அறிகுறி
மகப்பேறு - பிள்ளைப்பேறு
நாமம் - பெயர்
மேற்கொள்ளல்-கைக்கொள்ளல்

**பக்கம் 99**

முனைந்தனர் - முற்பட்டனர்

**பக்கம் 100**

பிரதிமை - உருவம்
தமிழகம் - தமிழ்நாடு
கல்விக்கிறைவி - சரஸ்வதி
இரவலர்-பிச்சைக்காரர்

**பக்கம் 101**

தெய்வீகஆற்றல்-தெய்வசக்தி
என்பு - எலும்பு
கொலைஞன்-கொலைகாரன்

**பக்கம் 102**

நள்ளிரவு - நடுச்சாமம்
விழா - திருவிழா
சபித்தல் - சாபமிடல்

**பக்கம் 103**

அவா - ஆசை
உறையுள் - வீடு
மொழிதல் - சொல்லுதல்

## 22ஆம் பாடம்

**பக்கம் 104**

பழையவரலாறு - பழைய [சரித்திரம்
பண்டம்-பொருள்

**பக்கம் 105**

ஒற்றன் - வேவுபார்ப்பவன்
பொழில் - சோலை
சமயக்கோட்பாடு - சமயக் கொள்கை

**பக்கம் 106**

மாந்தர்- மனிதர்

**பக்கம் 107**

குன்றி - குறைந்து.
அல்லல் - துன்பம்

**பக்கம் 108**

உய்யும் — தப்பும்
கருணை - இரக்கம்

**பக்கம் 110**

சரண் - அடைக்கலம்

முற்றும்

# MANIMEKALAI CHARITHAI

## SUPPLIMENTARY READER

### FOR STANDARD VI

Approved by the Director of Education, on the recommendation of the Educational Publications Advisory Board.

Thirumakal Press, Chunnakam

**North-Ceylon Tamil Works Publishing House**

*Copyright* ] **Chunnakam** [ Price [redacted]